# திருக்கோயில்

செப்டம்பர் 1974 ரூ.1

OFFICE OF THE STATE EDITOR
79/Gu/74
17 SEP 1974
GAZETTEER UNIT, MADRAS.6





# அருள்மிகு
# சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணி

**செங்கை மாவட்டம், தமிழ்நாடு.**

தொலைபேசி : { அலுவலகம் : 25 மலைக்கோயில் : 43
மலைப்பாதை : 96 தங்கும் விடுதி : 87

திருமுருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

''நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும்
திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!''

இத்தலம் சென்னை—பம்பாய் இருப்புப் பாதையில் அரக்கோணம் சந்திப்பில் இருந்து வடக்கே 14 கி.மீ.; சென்னை—திருப்பதிப் பாதையில் 84 கி.மீ.; திருப்பதியிலிருந்து தெற்கே 54 கி.மீ.; காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே 36 கி.மீ.

**தரிசனம் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை**

| | | | |
|---|---|---|---|
| விசுவரூப தரிசனம் | காலை 6 மணி | சாயரட்சை | மாலை 5 மணி |
| காலை சந்தி அபிஷேகம் | காலை 8 மணி | அர்த்தசாமம் பூசை | இரவு 8 மணி |
| உச்சிக்காலம் | காலை 10 மணி | | |

**விழாக் காலங்கள்**

1. ஸ்ரீ வள்ளித் திருமணப் பெருவிழா ... பிப்ரவரி, மார்ச்சு
2. சிவராத்திரி 1008 சங்காபிஷேகம் ... மார்ச்சு
3. ஸ்ரீ தெய்வானைப் [illegible] மண விழா ... ஏப்ரல், மே.
4. ஆடிக் கிருத்[illegible]ப் பெருவிழா ... ஜூலை, ஆகஸ்டு.
5. சஷ்டிப் [illegible] ... அக்டோபர், நவம்பர்.
6. தி[illegible]ப்படி விழா ... டிசம்பர்.

**வேண்டுதல்**

[illegible] நன்கொடைத் திட்டத்தின் கீழ்க் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்க விரும்புவோர் [illegible]0,000 செலுத்த வேண்டுகிறோம்.

தணிகை முருகனுக்குத் தங்கத் தேர்ப் பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்கள் காணிக்கையைத் தங்கத் தேருக்குத் தங்கமாகவும், பிற பொருளாகவும் திருத்தணிக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

95 அறைகளும், 28 குடியிருப்பு இல்லங்களும் யாத்ரீகர்கள் தங்குவதற்கும் பணிச் செலவுக்கும் விடப்படுகிறது.

**1974-ஆம் ஆண்டுக் கிருத்திகை நாட்கள்**

15—7—1974
11—8—1974 ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா
12—8—1974 ஆடிக் கிருத்திகை 2-ஆம் தெப்பப் பெருவிழா
13—8—1974 ஆடிக் கிருத்திகை 3-ஆம் தெப்பப் பெருவிழா
7—9—1974, 5—10—1974, 1—11—1974, 28—11—1974, 26—12—1974.

திரு. புலவர் மி. ச. நடேசன்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. கலவை. அ. கோபாலகிருஷ்ணன்,
அறங்காவலர்.

திரு. கே. சிதம்பரம், பி.ஏ.,
நிர்வாக அலுவலர்.

திரு. வி. எம். துரைசாமி ரெட்டி,
அறங்காவலர்.

OFFICE OF THE STATE EDITOR
17 SEP 1974
GAZETTEER UNIT, MADRAS-3



**முகப்பு :**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் தோற்றம்.

# திருக்கோயில்

மாலை 16 | ஆனந்த-ஆவணி, செப்டம்பர் 74 | மணி 12

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் ரூ. 1/-

ஆசிரியர்: ந.ரா. முருகவேள் M.A.,M.O.L.

துணை ஆசிரியர்: கே.எஸ். ஜெகன்னாதன்

## பொருளடக்கம்

1. உமா மகேசுவரனார் (மாண்புமிகு டாக்டர் கலைஞர்)
2. வளரும் தமிழகம் (மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்)
3. அர்ச்சுனனுக்கு அனுமார் கொடி எப்படி வந்தது? (திருமுருக கிருபானந்த வாரியார்)
4. இராமனும் சீதையும் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்)
5. அருட்சக்தியின் ஆக்கம் (கவியோகி சுத்தானந்த பாரதியார்)
6. வட்டணைபட நடந்த நாயகர் (இரா. நாகசாமி, எம்.ஏ.)
7. ஆழ்வார் கண்ட கண்ணன் (தேவி இராமாநுசர்)
8. பதியம்பாடப் பார்வை இழந்தோர் (கு. தாமோதரன், எம். ஏ.)
9. குறையுண்டோ தமிழ் நெஞ்சே (பூந்தமிழன்)
10. வாதாபி கணபதி (ர. ஜகத்ரட்சகன்)
11. பெரியாழ்வார் திருப்பல்லாண்டு (கே. இ. பார்த்தசாரதி, பி.ஏ.)
12. மதுரை அன்றும் இன்றும் (ம. அ. முருகேசன்)
13. தவறான சம்பிரதாயங்கள் (கவிஞர் கண்ணதாசன்)
14. வாழையடி வாழையாக வந்தவர் (நா. மகாலிங்கம்)
15. சிவஞான போதத் தெளிபொருட் சுருக்கம் (ந. ரா. முருகவேள்)
16. திருவண்ணாமலைத் திருக்கோயில் திருப்பணி (டி. வி. சுப்பிரமணியம் செட்டியார்)
17. எழுபது கோடிப் பொன் (கே. எஸ். ஜெகன்னாதன்)
18. செய்திச் சுருக்கங்கள்
19. செந்திற் கந்தன் (ந. ரா. முருகவேள்)

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

# உமா மகேசுவரனார்



இராசராசனுடைய நினைவாக இராசராசேசுவரம் என்ற பெரிய கோயில் நிலைத்திருப்பது போல, உமாமகேசுவரனாரின் நினைவாக அவர் நிறுவிய உமாமகேசுவரம் என்னும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிலைத்துள்ளது.

தஞ்சை என்றாலே இராசராச சோழனுடைய நினைவு எப்படி வருமோ—அதேபோலக் கரந்தை என்றால், மறைந்த தமிழவேள் உமாமகேசுவரனாரின் நினைவு வாராமற் போகாது. அப்படிப்பட்ட தமிழ்ப் பெரியாராகிய உமாமகேசுவரனாரின் சிலையினைத் தமிழ்ச் சங்கத்தினுடைய மணிவிழாக் கொண்டாடுகிற நேரத்தில் திறந்து வைப்பதென்பது, காலம் கடந்தாவது அந்தப் பெரியாருக்குத் தமிழ் மக்கள் தங்களுடைய நன்றியைத் தவறாது தெரிவிக்கிறார்கள் என்பதற்கொரு சான்றாகும்.

தமிழனுடைய பெருமையையும், வலிமையையும், தொன்மையையும் நாட்டு மக்கள் மறந்திருக்கிற நேரத்தில், அறுபது ஆண்டுகட்கு முன்னரே தஞ்சைத் தரணியில், இந்தக் கருந்திட்டைக்குடிப் பகுதியில், தமிழுணர்வு படைத்த சில இளைஞர் கூடித் தமிழ் இன உணர்ச்சியை வளர்ப்பதற்கும், தமிழ் மொழியினுடைய தனித் தன்மையைக் காப்பாற்றுவதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சியினுடைய தொடர்ச்சியாக, முப்பதாண்டுக் காலம் இந்தச் சங்கத்தைக் கட்டிக் காக்கின்ற பெரும் பொறுப்பை, இன்று சிலையாக நிற்கின்ற தமிழவேள் உமாமகேசுவரனார் பெற்றிருந்தார்.



தமிழக முதல்வர்
மாண்புமிகு டாக்டர் கலைஞர்.

தமிழிலே மேடைகளில் பேசுவதும், எழுதுவதும், உலகச் செய்திகளைப் பற்றித் தமிழ் மொழியிலே அறிவிப்பதும், தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடியவை; நாகரிக உலகத்திற்கு ஒவ்வாதவை; பிறமொழியில், அதிலும் குறிப்பாக ஆங்கிலத்தில், இந்தச் செய்திகளை எடுத்துரைப்பதும், மேடைகளிலே பேசுவதுமே பொருத்தமுடையது, மேன்மையானது, அதுதான் கௌரவம் மிக்கது என்று கருதியிருந்த நேரத்தில்தான்—கரந்தைத் தமிழ்க் கல்லூரியினால் பெரியதோர் புரட்சியினை, மறைந்த தமிழவேள் உமாமகேசுவரனார் நடத்திக் காட்டினார்.

ஆங்கிலத்தினுடைய ஆதிக்கம் மாத்திரமல்ல; தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்குத் தமிழ் மொழியைத் தமிழர்கள் போற்றாமல் விட்டு விடுவரோ என்கின்ற ஐயம் ஏற்படுகிற விதத்தில் வடமொழிக் கலப்பும், தமிழன் தமிழிலேயே பேச நாணுகின்றான் என்கின்ற நிலையும் ஏற்படுவதை மறைந்த உமாமகேசுவரனார் எண்ணிப் பார்த்தார்.

தமிழ்ச் சங்கத்தினுடைய இளைஞர்கள் முதன் முதலாகத் தமிழுக்குப் பெருமை சேர்த்த முறையே பாராட்டுக்குரியதாகும். மதிப்பிற்குரிய ஒருவரை அவருடைய மரியாதையைச் சுட்டிக் காட்டும் வகையிலே அழைக்க 'ஸ்ரீமான்' என்று குறிப்பிடும் வடமொழிச் சொல்லுக்குப் பதிலாகத் 'திருவாளர்' என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்திய பெருமை, கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், தமிழவேள் உமாமகேசுவரனாருக்கும் உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழ் உணர்வு தமிழகத்திலே ஏற்படத் தொடங்கிய பிறகு, எத்தனையோ வழக்குக்கு நம்மை அடிமை கொண்டுவிட்ட வடமொழிச் சொற்களெல்லாம் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. இதே மேடை ஒரு பதினைந்தாண்டுக்

காலத்திற்கு முன்னுல் அமைந்திருந்தால்—இந்த மேடையிலே சில பேர் பேசத்தொடங்கினுல்—விழாத் தலைவரென்ருே, அவைத் தலைவரென்ருே அழைத்திருக்கமாட்டார்கள்! 'கனம் அக்ராசனுதிபதி அவர்களே!' என்றுதான் அழைத்திருப்பார்கள்.

அக்ராசனுதிபதி என்ற நாவினுல், இன்றைக்கு அவைத் தலைவர் அவர்களே! என்றழைக்கின்ற தமிழ் உணர்வை நாம் பெற்றிருக்கிருேமென்ருல், அதற்கு உமாமகேசுவரனுர் போன்றவர்களுடைய உழைப்புத்தான் காரணம் என்பதை யாரும் நினைவு கூராமல் இருக்க முடியாது. நமஸ்காரம், இன்று வணக்கமாய் மாறியிருக்கிறது. இதே வணக்கம் ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுக் காலத்திற்கு முன்பு பயன் படுத்தப்பட்டிருக்குமேயானுல், ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கருதி, அவர்கள் மீது பயங்கரமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கும். அப்படிப்பட்ட காலமெல்லாம் இருந்தது. ஆனுல் இன்றைக்கு வணக்கம் என்று சொல்வது வழக்கத்திற்கு வந்துவிட்ட ஒரு சொல்லாக ஆகிவிட்டதை நாம் காண்கின்ருேம்.

இன்று சிலருடைய உருவச் சிலைகளைத் திறக்கிருேம் என்ருல், அந்தச் சிலைகளுக்கு உரியவர்கள் இந்த நாட்டிலே எந்தத் தொண்டினை ஆற்றினுர்கள்? எதற்காகப் பாடுபட்டார்கள்? எவ்வளவு தன்னலமற்றுத் திகழ்ந்தார்கள்? இவற்றையெல்லாம் இப்படிப்பட்ட விழாக்களில் நாம் நினைவிலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

உமாமகேசுவரனுர், தன்னுடைய காலமெல்லாம் இந்தத் தமிழ்ச் சங்கம் வளர வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார். அவர் மறைந்ததுகூட எப்படி? அவர் கல்கத்தா சென்றிருந்தார். அங்கே சாந்தி நிகேதன் போன்ற நிறுவனங்களெல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்பதை அறிந்து, அதன் பிறகு அங்கிருந்து காசிப் பல்கலைக் கழகம் வரையிலே சென்று, அங்கே அந்தப் பல்கலைக் கழகமெல்லாம் எப்படி நடைபெறுகிறது என்பதைக் கண்டு, கண்ட கருத்துக்களையும் கொண்ட எண்ணங்களையும் எல்லாம்—இங்கே கொண்டு வந்து குவித்துக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை வளர்க்க வேண்டுமென்று திட்டமிட்டுச் சென்ருர்! ஆனுல், கல்கத்தாவிலிருந்து காசிப் பல்கலைக் கழகத்திற்குச் செல்கின்ற வழியிலேயே அவருக்குக் கடுமையான காய்ச்சல் கண்டு மறைந்தார். அவர் கடமையாற்றுகிற நேரத்திலே, அதிலும் தமிழுக்காகக் கடமையாற்றிய நேரத்திலே, தன்னுடைய உயிரைத் தமிழுக்காக் ஒப்படைத்தார்.

அந்தத் திருமகனுடைய சிலையைத் தஞ்சைத் தரணியிலே, கரந்தைப் பகுதியிலே, இன்று நாம் வைத்திருக்கிருேமென்ருல், அது நம் அனைவருக்கும் பெருமை தருகின்ற செய்தி யாகும். இந்த நல்ல நாளில் அந்தச் சிலைக்கு முன்னுல் நின்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய சூளுரை :

''நாம் தமிழ் உணர்வோடு வாழ்வோம்;
தமிழர் என்கின்ற உணர்வோடு வாழ்வோம்;
தமிழன் யாரையும் தாழ்த்தமாட்டான்;
தமிழன் யாருக்கும் தாழமாட்டான்!''

என்கின்ற அந்தச் சூளுரையை உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு,

தமிழ் வாழத்

தமிழினம் வாழ

நம்முடைய தமிழ்த் தாயகம் செழிக்க, அனைவரும் பாடுபட வேண்டும், பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

# தமிழ்ப் பெருஞ் சான்ருேர்

மறைமலை அடிகள், நாவலர் நாட்டார்,
வண்புகழ்ப் பண்டித மணியார்,
துறைகலை போய சுப்பிர மணியத்
தோன்றலார், உமாமகேச் சுரனுர்,
முறைதிகழ் அறிஞர் பாரதி யார், நன்
மூதறி ஞர்திரு. வி. க.,
பிறபிற பெரியோர் புலமையும் தொண்டும்
பெரிதுணர்ந்து அவர்அடி பணிவராம்!

—ந.ரா. முருகவேள்.

# திருவில்லிப் புத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் தேர்த் திருவிழாக் காட்சிகள்





தேரில் அலங்கரிக்கப்பட்டிருக்கும் அருள்மிகு நாச்சியாரை தரிசிக்க ஆணையர் திரு கே.எஸ். நரசிம்மன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருவெங்கடசுப்பிரமணியம் துணை ஆணையர் திரு ம.அ.முருகேசன். ஆகியோர் செல்லுதல்



102 அடி உயரத் தேரும். அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் இராஜ கோபுரமும்.

தேர்மீது ஆணையர் துணை ஆணையர் நாச்சியாரை வணங்குதல். நிர்வாக அதிகாரி, தஞ்சை திரு இராமமூர்த்தி ஐயர் ஆகியோர்.




ஆணையர்க்கு தேர்மீது மாலை அணிவித்து மரியாதை செய்கின்றனர் துணை ஆணையர் திரு ம.அ.முருகேசன். துணை ஆசிரியர் கே.எஸ்.ஜெகன்னாதன்



ஆணையர் அவர்கள் தேரோட்டத்தைத் துவக்கி வைக்கும் காட்சி.




மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு வெங்கடசுப்பிரமணியம்.
துணை ஆணையர் திரு ம.அ.முருகேசன்
ஆகியோர் வடம் பிடிக்கும் காட்சி



102 அடி உயரமும். 70டன் எடையும்
உள்ள தேரினை ஆயிரக்கணக்கான
மக்கள் இழுக்கும் காட்சி



மக்கள் வெள்ளத்திடையே
மலைபோன்ற தேர் மிதந்து வரும்
எழிற்காட்சி



தேர்த்திருவிழாவினைக் காண
கூடியிருந்த ஆயிரக்கணக்கான
மக்கள் கூட்டம்.

# வளரும் தமிழகம்

## அறநிலையத்துறை அமைச்சர்

## மாண்புமிகு மு. கண்ணப்பன்


சென்னை-600 008

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கவின்மிகு திருக் கோயில்களும், நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன்மடங்களும் நிறைந்தது தமிழ்நாடு. முடி யுடை மூவேந்தர் காலம் தொடங்கி, இன்றளவும் முறைமையான ஓர் வரலாறு கிடைத்திடத் தமிழர்க்கு உறுதுணை பயப்பவை, தமிழகத்துத் திருக்கோயில்கள்தாம். வரலாற்றுச் சான்று களாகவும், வழிபடுவோர் தம் குறை தீர்க்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலை மாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாத்து, இனி வரும் சந்ததியி னருக்கு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில், தமிழக அறநிலையத் துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடு அறியும்.

பழந்தமிழர் வாழ்க்கை முறையின், அவர் தம் பண்பாட்டின், கலாசாரத்தின் உறைவிடங் களாக, வெளி உலகிற்கு இன்றளவும் அவை களைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கலைமிகு எழிற்கூடங்களாக அமைந்துள்ள இத்திருக் கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய அவசி யத்தை இவ்வரசு நன்குணர்ந்துள்ளது.

''செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து
இயற்கை அறிந்த செயல்''

என்ற தமிழ்த் திருமறைக்கு ஒப்ப, மக்கள் விரும்பிக் கைக்கொண்டு வாழும் முறையில் தலையீடு ஏதுமின்றி அவர்கள் விருப்பத்தினை நிறைவேற்றி வைக்கும் அரசாக இது செயல் பட்டு வருகிறது. திருக்கோயில்கள் தமிழ் நாட் டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய



மன்னர் தம் மனநிலைகளையும், அத்திருக்கோயில்களும், அற நிறுவனங்களும் ஆயிரமாயிரம் ஆண்டு நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய ''நிபந்தங்களையும்'' அவைகளை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில் இவ்வரசு இத்துறையில் பெரும் கவனம் செலுத்தி, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது. அத்தகைய பணிகளில் குறிப்பாகச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

1967-ல் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த அறநிலையங்களின் எண்ணிக்கை 9,600 என்னும் நிலை மாறி இன்று 15,000-க்கும் மேற்பட்ட அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன.

தனியாரின் பொறுப்பில் இருந்து வரும் பல்லாயிரக்கணக்கான சமய நிறுவனங்களையும் அதன் சொத்துக்களையும் கண்டு பிடிக்கத் தனி அலுவலர் நியமிக்கப்பட்டு, தமிழகத்தில் 41,000 சமய நிறுவனங்களும், அவற்றிற்குச் சொந்தமான 2,00,000 ஏக்கர் நிலங்களும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. அவற்றில் 17,335 நிறுவனங்களையும், அவைகளுக்குச் சொந்தமான 87,793 ஏக்கர் நிலங்களையும், இன்று அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் பட்டுள்ளன. மீதமுள்ள நிறுவனங்களையும் துறையின்கட்டுப்பாட்டில் கொண்டு வர விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல் திருக்கோயில்களின் வருவாயும் முன்பிருந்ததைவிட நான்கு மடங்கு அதிகம் கிடைத்து வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

வரலாற்றுப் பெருமையும், சமயப் பெருமையும் கொண்ட நமது கலைச் செல்வங்களைப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமை என்பதை இவ்வரசு உணர்ந்திருக்கிற காரணத்தினால், கடந்த ஆறு ஆண்டுகளில் 12 கோடியே 44 இலட்சம் செலவில், 3,095 திருக்கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டுத் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

சமயப் பெருமை மிக்க கோயில்களாக மதிக்கப்பட்டுப் பெருமையோடு சொல்லப்படும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், பழனி தண்டாயுதபாணி திருக்கோயில், திருவானைக்கா அகிலாண்டேசுவரி சம்புகேசுவரர் திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சுவாமி மலை சுவாமிநாத சுவாமி திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுவரர் திருக்கோயில், பெண்ணாகடம் பிரளயகாலேசுவரர் திருக்கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில், மற்றும் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களில் அண்மையில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன. மேலும் இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயில், திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் திருக்கோயில், ஆவுடையார் கோயில் ஆத்மநாதர் திருக்கோயில், திருவாரூர்த் தியாகராஜ சுவாமி திருக்கோயில், மதுரைக் கூடலழகர் திருக்கோயில், அவிநாசி அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில் போன்ற நூற்றுக்கணக்கான பெரிய கோயில்களும், சிறிய கோயில்களுமாக 1,500 திருக்கோயில்கள் இவ்வாண்டு திருப்பணி செய்யத் திட்டமிட்டு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

திருச்சி மலைக்கோட்டை, திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோயில், சோளிங்கர் நரசிம்ம சுவாமி கோயில், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயில், கோவை மருதமலை போன்ற மலைக் கோயில்களுக்குப் பழநிமலையில் அமைந்துள்ளதுபோல் இழுவை ரயில் அமைக்கத் திட்டமிட்டு வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வேண்டி மத்திய அரசைக் கேட்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்கள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல், கலை வளர்க்கும் நிலையங்களாய், பிணியகற்றும் மனைகளாய், அறியாமை இருள் நீக்கி ஒளி வழங்கும் இல்லங்களாய்த் திகழ்ந்து, சமுதாயப் பணியாற்றும் நற்கூடங்களாய் அமையவே உருவாயின எனும் அடிப்படையில், திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து கண் ஒளி இழந்தோருக்குக் கண்ணொளி வழங்கி, ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு கிடைத்திட, பிச்சைக்காரர் மறுவாழ்வு ஆகியவற்றிற்கு நிதி உதவியும், மற்றும் கல்விக் கூடங்கள், ஊமையர் செவிடர் பள்ளிகள், அனாதைக் குழந்தைகளைப் பேண அன்பு இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால், ஏழைகளுக்கு இலவசத் திருமணம், மருத்துவ மனைகள், திருமண மண்டபங்கள் போன்ற பல திட்டங்களைத் தீட்டி, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைச் செயல்படுத்தி வருகிறோம்.

சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்க இன்று அரசின் பல துறைகளின் மூலம் நாம் முயற்சிகளை மேற்கொள்கிறோம். அதே நேரத்தில் திருக்கோயில்களிலும் சாதி உணர்வு, உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஏழை பணக்காரன் என்னும் ஏற்றத் தாழ்வு நிலை தேவையில்லை. ஆண்டவன் முன் அனைவரும் சமம் எனும் நிலை ஏற்படச் சில புரட்சிகரமான மாற்றங்களை இத்துறையில் செய்துள்ளோம்.

திருக்கோயில்களுக்கு வரும் 'மிக முக்கிய மானவர்களுக்கு' (V.I.Ps.)க் கொடுத்து வந்த 'பூர்ண கும்ப, பரிவட்ட மரியாதைகள்' தேவையில்லை என்னும் நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள் திருக்கோயில்களுக்குள்ளே வந்து ஆண்டவனை வணங்கினால் மட்டும் போதாது, திருக்கோயில் நிருவாகத்திலும் பங்கு கொள்ளவேண்டும் என்ற வகையில், அறங்காவலர் நியமனத்தில்

கண்டிப்பாகத் தாழ்த்தப்பட்டவர் ஒருவரை நியமிக்கச் சட்டத் திருத்தம் செய்து நிறை வேற்றியுள்ளோம்.


அனைத்திற்கும் மேலாக, சாதி வெறி ஒழிந்திட, ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்னும் நிலை ஏற்பட, தேவையான தகுதியைப் பெற்றிருப்பாரேயாயின், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டத்தினை உருவாக்கியுள்ளோம். இன்று அது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பினால் செயலிழந்து இருப்பினும், நியாயமான இக்கொள்கையினை நிறைவேற்ற அரசியல் சட்டத்தினைத் திருத்த வேண்டி, இந்திய அரசினைத் தமிழக அரசின் வாயிலாகவும், சட்ட மன்றங்களின் தீர்மான வாயிலாகவும் கேட்டுள்ளோம்.

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதையும், 'கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவரின் கூடாரமாக இருக்கக் கூடாது' என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியதையும் கருத்தில் கொண்டு, சமய நெறி முறைகளில் தலையிடாமல், பன்னெடுங் காலத்திற்கு முன் தொடங்கி இன்றளவும் நடந்து வரும் வழியில் சிறப்புற நடத்தி, அவைகளின் மூலம் சமுதாயத்தில் சமதர்ம மணம் கமழச் செய்வோம். பழந் தமிழகம் காண்போம்.

வணக்கம்.

['வளரும் தமிழகம்' என்ற தலைப்பின் கீழ் அறநிலையத் துறையின் வளர்ச்சிப் பணிகள் குறித்து, 4—8—74ஆம் நாளன்று, அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையினைத் 'திருக்கோயில்' வாசகர்களுக்கு அன்புடன் உவந்தளிக்கின்றோம்.

—ஆசிரியர்.]



பழநித் திருவாவினன்குடிக் கோயிலில் திருக்குட நீராட்டு ஆண்டு நினைவுப் பெருவிழாவில் பழநியாண்டவர் மகளிர் கல்லூரி முதல்வர் பேராசிரியை ந. சரோஜினிதேவி எம்.ஏ., அவர்கள் தலைமையில் நிகழ்ந்த பட்டி மன்றத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள்.

# அர்ஜுனனுக்கு அனுமார் கொடி எப்படி வந்தது?



திருமுருக கிருபானந்தவாரியார்

பாண்டவர்களில் சிறந்தவனும் பரமேசுவரனிடம் பாசுபதம் பெற்றவனும், உலகமெல்லாம் புகழும் சிறந்த வில்லாளியுமாகிய அர்ச்சுனனுக்குக் கவிக் கொடி (அனுமக் கொடி) வந்ததற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. பவன குமாரனுகிய பீமன், மந்தார மலரை விரும்பி அளகாபுரிக்குச் செல்லும் போது, வழியில் சிறு குரங்கு வடிவமாக இருந்த அனுமந்தருடன் வாது செய்து, பின்னர் ஆஞ்சனேயர் என்றுணர்ந்து வணங்கி வாழ்த்த, இராம தூதராகிய அஞ்சனைச் செல்வர், 'தம்பி! நினக்கு யாது வரம் வேண்டும்' என, பீமன், என் தம்பியாகிய தனஞ்சயனுடைய இரதத்தின் மீது கொடியாக இருந்து அருளல் வேண்டும்' என, அவ்வாறே அநுமார் தன் தம்பியாகிய வீமனுக்கு வரமளித்தார்.

2. ஒரு சமயத்தில் அர்ச்சுனன் கண்ண பிரான் இன்றித்தேரூர்ந்து தென் திசையிலுள்ள ஒரு பெரிய கானகத்தில் வேட்டையாடச் சென்ருன். முடிவில் தான் ஒருவனுகவே சாரதி இருக்குமிடத்தில் அமர்ந்து இரதத்தைச் செலுத்திக் கொண்டும், கணைகளை விடுத்து வழியிலுள்ள துன்பத்தை விளைக்கும் மிருகங்களைக் கொன்று கொண்டும் வரும்போது, அன்று பகலில் நீராடுவதற்காக இராமேசுரஞ் சென்று சேதுவில் குளித்துவிட்டு, உச்சிப் பொழுதில் செய்ய வேண்டிய மாத்தியான்னிகம் முதலிய கருமங்களை முடித்துக் கொண்டு, மீண்டும் தேரேறிக் கடற்கரையில் உல்லாசமாகச் சிறிது மனந்தருக்கி உலவிக் கொண்டிருந்தான். அங்கு ஒரு சிறு குன்றின்மேல் சாமானிய வானர ரூபத்துடனும், பிங்கல நிறமுள்ள உரோமங்களுடனும், மங்கல சொரூபராகிய ஆஞ்சனேயர் ராம ராம என்று உதடு அசையாமல் செபஞ் செய்து கொண்டிருந்தார். அவரைக் கண்ட தனஞ்சயன் 'ஏ குரங்கே! உன் பெயர் என்ன?' என்று வினவினன்.

கவி சிரேட்டராகிய அனுமார், புன்னகை புரிந்து ''தசரத மைந்தராகிய இராமச்சந்திரப் பிரபு நூறு யோசனை தூரம் இக்கடலில் கற்களால் அணை கட்டியது எவனுடைய பிரதாபத்தாலோ? எவனைச் சகாயமாகக் கொண்டு அரக்கர்களை வென்றனரோ? அவன் நான், என் பெயர் அநுமான், வாயுபுத்திரன்'', என்று பதில் கூறினர்.

இங்ஙனஞ் சிறிது தருக்குடன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட விசயன், தானும் செருக்குடன் சிரித்து அநுமானை நோக்கி, ''முன்னுளில் இரகுராமர் கடலில் கற்களைக் கொண்டு அணை கட்டியது வீண் சிரமம், சிறந்த வில்லாளியாக இருந்தும் தன் பாணங்களினுலேயே அணைகட்டி ஏன் காரிய சித்தியடைந்திருக்கலாகாது?'' என்ருன்.

உடனே அநுமார் ''அர்ச்சுன! என்னைப் போன்ற வானர சிரேட்டர்களின் பாரத்தினுல் சரசேதுவானது சமுத்திரத்தில் அமிழ்ந்து விடுமென்றெண்ணி இரவி குலோத்தமர் சரத்தால் அணை கட்டவில்லை'' என்ருர்.

தனஞ்சயன், ''மாருதியே! கவிகளின் பாரத்தினுல் சரசேது கடலில் மூழ்கி விடுமானுல், வில்லாளியின் வில் வித்தைக்கு என்ன மகிமை இருக்கிறது? உமக்கு முன்னுல் இப்போது நான் சரசேதுவைக் கட்டுகிறேன். நீர் அதன் மேல் நர்த்தனம் முதலியவற்றை உமது விருப்பத்தின்படி செய்யும். பின்னர் எனது விற் சாதுர்யத்தைப் பாரும்'' என்றுரைத்தான். அநுமார் புன்முறுவல் கொண்டு, ''அர்ச்சுன! நீ கட்டும் சரசேதுவானது எனது கால்கட்டை விரல் பட்டவுடன் கடலில் அமிழ்ந்துவிடும்; அவ்வாறு முழுகிவிட்டால் நீ என்ன செய்கிருய் சொல்லு'' என்ருர்.

பார்த்தன், ''ஆஞ்சனேயரே உமது பாரத்தால் என் சரசேது நீரில் மூழ்கிவிடுமானுல், இவ்விடமே அக்கினிப் பிரவேசஞ் செய்கிறேன். இது சத்தியம். சரசேதுவை முழுகச் செய்யாவிடில் தாங்கள் என்ன செய்கின்றீர்? உமது பந்தயத்தைத் தெரிவியும்'' என்ருன்.

வாயுகுமாரன் அர்ச்சுனனுடைய சபதத்தைக்கேட்டு, ''பாண்டு நந்தன! உன் சரசேதுவை என் கால் கட்டை விரலால் கடலில் முழுகும்படி செய்யாவிடில், நினது இரதத்தின் கொடியின்கண் இருந்து உனக்கு வேண்டிய உதவியைப் புரிகிறேன்'' என்றனர்.

அர்ச்சுனன், அவ்வாறே யாகுக' என்று கூறிக் காண்டீப தை எடுத்து வளைத்து எட்டுத் திக்குகளும் செவிடுபடும்படி நாணேசையை உண்டு பண்ணி அளவற்ற கணைகளை விடுத்து நெருக்கமாகவும், உறுதியாகவும் ஓர் அணையைக் கடலில் கட்டினுன்.

தனஞ்சயன் சமுத்திரத்தின் மேல் நூறு யோசனை தூரம் கட்டிய சரசேதுவை, அநுமார் நோக்கி, அர்ச்சுனன் பார்த்திருக்கும்போதே, ஒரு கண நேரத்தில் தன் கால் கட்டை விரலால், அந்த சேதுவைக் கடலில் மூழ்கும்படி செய்தார்! தேவர்கள் மாருதிமீது பூமாரி பொழிந்தனர். விசயன் இதைக் கண்டு நாணிக் கடற்கரையில் சிதையை யடுக்கித் தீப்பாய நிச்சயஞ் செய்தனன். அந்த வேளையில் பக்த சகாயராகிய கண்ணபிரான் அங்கு நிகழ்ந்தவற்றையுணர்ந்து, பிரமசாரி வேடம் பூண்டு அவ்விடமடைந்து நடந்த வரலாற்றைக் கேட்டு, 'நீவிர் இருவரும் முன் செய்த காரியம் யாவும் வீண்தான். சாட்சியின்றிச் செய்யும் காரியம் பயன்படாது. பொய், மெய் காண முடியாது. ஆதலால் நீங்கள் இருவரும் முன்போல் செய்யுங்கள். நான் பார்வையிட்டு உண்மை பொய் என்பதைத் தெரிந்து நியாயம் கூறுகிறேன்' என்றனர். அநுமாரும், அர்ச்சுனரும் கேட்டு அவ்வண்ணமே செய்கிறோம் என்று உடன்பட்டார்கள்.

பிறகு பார்த்தன் காண்டீபத்தை வளைத்து முன் போலவே சரசேதுவைப் புதுக்கினான். அந்தச் சேதுவுக்கு மத்தியில் ஒருவரும் உணராத படி கண்ணபிரான் தம் சக்கரத்தை வைத்தார். அநுமார் தனது கால் பெரு விரலால் சரசேதுவை அழுத்தினார். சேது அசையவில்லை. அது கண்டு, பாதங்கள், முழந்தாள்கள், கைகள், உடம்பு முழுவதையும் கொண்டு முழு பலத்தாலும் அழுத்தினார். சேது அப்பொழுதும் அசையவில்லை. மனம் சோர்ந்தார். ஆலோசனை செய்வாராயினர். 'முன் ஒரு விரலால் அழுத்திய இந்தச் சேது' இப்பொழுது உடல் முழுவதாலும் உதைத்தும் அசையவில்லை. இதற்குக் காரணம் இவர் பிரம்மச்சாரியல்ல. அருள் உருவினரான நாராயணர்தான், நான் தருக்குற்றதால், அற்புதமான செய்கையையுடைய கண்ணபிரான் அதைப் பரிகாசஞ் செய்ய வந்திருக்கிறார். உலகையுண்ட உத்தமராகிய வாசுதேவருக்கு முன்னால், வானரத்தின் பராக்கிரமம் எங்கே?' என்று எண்ணி, பற்குணனை நோக்கிக் கூறுகிறார்.

''ஏ குந்தி புத்திரா! நீ வெற்றி பெற்றாய். அது இந்தப் பிரம்மசாரியின் உதவியாலேயாம். ஆனால் இவர் பிரம்மசாரியல்லர். சரசேதுவில் சக்கரத்தைப் பிரவேசிக்கச் செய்து கிருஷ்ணன் உன்னைக் காப்பாற்ற வந்தார். இது உண்மை. இவர் திரேதாயுகத்தில் இராமராக இருக்கும்போது எனக்குத் துவாபரயுகத்தில் கிருஷ்ணாவதார தரிசனம் தருகிறேனென்று வரமளித்து இருந்தார். தந்த வார்த்தையை உண்மையாக்குவதற்கு உன் சரசேதுவைக் காரணமாகக் கொண்டு வந்திருக்கிறார்'' என்று அர்ச்சுனனிடம் அநுமார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பகவான் பிரம்மசாரி யுருவத்தை மாற்றிக் கிருஷ்ண ரூபத்துடன் திவ்விய தரிசனம் அளித்தார். அநுமார், உடனே உள்ளம் உருகி உடம்பு பூரித்துப் பல்காலும் பணிந்தார். பீதாம்பரதரனும், நீலமேக வண்ணனுமாகிய கமலக் கண்ணன் மாருதியைஆலிங்கனஞ்செய்து ஆசி கூறினார். கண்ணனுடைய அனுமதியினால் சக்கரம் இருப்பிடம் சென்றது. சமுத்திரத்தின் அலைகளால் சரசேது கலைந்து விட்டது. அத்தருணம் அர்ச்சுனன், அச்சுதனால் தன் ஆவி நிலைத்தது என்று செருக்கொழிந்து நின்றான்.

அப்போது தேவகி நந்தனர், பார்த்தனை நோக்கி, ''ரகுராமரை அவமதித்தாய்? அதனால் அநுமன் உன் வில் வித்தையைப் பொய்யாக்கினான்'' என்று கூறிப் பிறகு அநுமாரை நோக்கி 'ஓ ஆஞ்சநேய! நீ எவன் பிரதாபத்தால் இராமர் ஆழியில் அணை கட்டினாரோவென்று தற்பெருமை கூறி இராமரைத் தாழ்த்திப் பேசியதால் விசயனால் வெல்லப்பட்டாய். இனித் தருக்கற்று எப்போதும் என்னைத் தியானஞ் செய்து கொண்டிரு' என்று உரைத்து மீண்டும் நகரஞ் சென்றனர்.

---

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று, வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரம்துணித்தான் திருவடிநும் சென்னி வைப்பீர்!

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட,
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே!

—திருமங்கையாழ்வார்

# இராமனும் சீதையும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இராமாயணம் ஓர் இந்தியத் தேசீய காதை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே நாடு முழுவதும் பேசப்பட்ட ஒரு காதை. இக் காதை சாதி, மொழி, இனம் ஆகிய வேறு பாடுகளைக் கடந்து நாடு முழுவதும் பரவியது. இக் காதையை இலக்கியமாகப் படைக்க விரும்பியவர்கள், தத்தம் மொழியில் அந்தந்தச் சூழலுக்கேற்பக் கூட்டியும் குறைத்தும் செய்துள்ளார்கள். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இராம காதையுண்டு. இவை எல்லாவற்றிலும் கதை ஒரு மாதிரியாக இல்லை. நிறைய மாறுபாடுகளும் முரண்பாடுகளும் உண்டு. முரண்பாடுகளுக்குக் காரணம் காலத்தின் சூழ்நிலையும், மொழி வழி நாகரிக அமைப்புமாகும். வால்மீகி, வடமொழியில் இராம காதையைச் செய்தார். தமிழில் கம்பன் செய்தான். வால்மீகிக்கும் கம்பனுக்கும் காவியப் போக்கில் நிறைய வேறுபாடுகள் உண்டு. கம்ப ராமாயணம் ஒரு மொழி பெயர்ப்பு நூலன்று. முதல் நூலைத் தழுவி எழுந்ததேயாகும். இத்தகைய இராம காதையை ஆராய்கின்றபோது, அந்தந்தக் கவிஞனின் கூற்றுக்களை வைத்தே ஆராய வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்து ஆராய்வது—விமரிசனம் செய்வது இலக்கிய மரபுக்கு உகந்ததன்று.

கம்பனின் கருத்துப்படி இராமன் ஒரு சிறந்த தலைமகன்; தெய்வத் தன்மை உடையவன். ஆனால், வான்மீகியின் கருத்துப்படி இராமன் ஒரு சாதாரண மனிதனே. வான்மீகி இராமனைத் தெய்வத் தன்மையுடையவனாக யாண்டும் குறிப்பிடவில்லை. இராமனைப் பற்றி ஆராய வேண்டுமென்றால், ஒன்று முழுதாக வான்மீகத்தை ஆராய வேண்டும். அல்லது கம்ப ராமாயணத்தை வைத்து ஆராய வேண்டும். ஒன்றோடொன்றைப் போட்டுக் குழப்புவது, உப்பையும் சீனியையும் கொட்டிக் கலப்பது போலாகும்.

கம்பன் இராம காதை செய்ததன் நோக்கமே மிகச் சிறந்தது. தமிழகத்தின் முச்சந்திகளில் வான்மீகத்தின் வழி இராம காதை பயின்றது. கம்பனும் அப்படிப் பயின்ற இடங்களிலிருந்து கேட்டிருக்கின்றான். அக்கருத்துக்கள் தமிழ் நாகரிகத்திற்கு இயைந்தவாறு இல்லாமையையும், தன் மனத்திற்கு இசைவில்லாமையையும் உணர்ந்து, வான்மீகத்தின் கருத்துக்கள் தமிழகத்தில் பரவாமல் தடுக்கும் நோக்கத்துடனேயே கம்பன் இராமகாதையைச் செய்தான். இரண்டுக்கும் அச்சு ஒன்றே தவிரச் செய்தி வெவ்வேறு என்பதை மறந்துவிடக் கூடாது.

''இராமனுக்கு அவன் தந்தை அவசரமாக நாளைக்கே முடி சூட்ட வேண்டுமென்கிற முடிவுக்கு வந்து, இராமனை அழைத்து, ''இராமா! நாளைய தினம் உனக்கு முடிசூட்ட முடிவு செய்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன். பரதன் இங்கு இல்லாத நாளே உன் முடிசூட்டுக்கு ஏற்ற நாள் ஆதலால், இன்று இரவு உன்னுடைய நண்பர்களோடு சாக்கிரதையாக இருந்து உன்னைப் பாதுகாத்துக் கொள். ஏன், இப்படிச் சொல்லுகிறேன் என்றால் பரதனுக்கு வேண்டியவர்களால் உனக்கு ஆபத்து நேரலாம். ஒரு சமயம் பரதனாலும் முடி சூட்டு நிகழ்ச்சி தடைப்படலாம். ஆதலால் சாக்கிரதையாய் உன்னைப்பாதுகாத்துக்கொள்'' என்பதாகத் தசரதன் சொல்லுகிறான் என்று சிலர் எழுதுகிறார்கள். அவர்களின் இக் கருத்து வான்மீகத்தின் வழியது. இத் துறையில் கம்பன் முற்றிலும் மாறுபடுகிறான். தசரதன் இராமனைக் கூப்பிட்டு இரந்து கேட்கிறான், தன்னுடைய பொறுப்பிலிருந்து தன்னை விடுதலை செய்யும்படி. அங்கு முடிசூட்டும் நாள் பற்றித் தசரதன் குறிப்பிடவில்லை.

''அனைய தாதலின் அருந்துயர்ப்
  பெரும்பரம் அரசன்
வினையின் என்வயின் வைத்தனன்
  எனக்கொளல் வேண்டா;
புனையும் மாமுடி புனைந்திந்த
  நல்லறம் புரக்க
நினையல் வேண்டும்; யான் நின்வயிற்
  பெறுவது ஈதென்றான்''

இதுவே கம்பன் கருத்து. பரதன் இல்லாத நாளாக இருக்க வேண்டும் என்ற செய்தி கம்பனில் இல்லை. மேலும், இராமன் முடி சூட்டிக் கொள்வதற்குக் கடமையுணர்ச்சியோடு ஏற்றுக் கொண்டானேயொழிய விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டானில்லை. முடிசூட்டிக் கொள்வதில் இராமனுக்கு விருப்புமில்லை—வெறுப்புமில்லை. தந்தையும் நாட்டின் அரசனுமாக இருக்கின்ற தசரதன் கடமை என்றேவியதை ஏற்றுச் செய்யும் உணர்வுடனேயே ஒத்துக் கொண்டான் இராமன். இதனைக் கம்பன்,

''தாய்அப் பரிசுரை செயத்
தாமரைக் கண்ணன்
காத லுற்றிலன் இகழ்ந்திலன்;
கடனிதென் றுணர்ந்தும்,
யாது கொற்றவ னேவிய
ததுசெய லன்றே
நீதி யெற்கென நினைந்தும்அப்
பணிதலை நின்றான்''

—அயோ. 72.

என்ற பாடலில் விளக்குகின்றான். இக் கருத்துக்களின்படி இராமனிடத்து எந்தக் குற்றமுமில்லை. மாறாக, குணத்திற் சிறந்தவனாகத் திகழ்கின்றான்.

கைகேயிக்குப் பிறக்கும் மைந்தனுக்கு முடிசூட்டி வைப்பதாய்த் தசரதன் உறுதி கூறியதாகக் கம்பனில் செய்தியில்லை.

தமிழர் பின்பற்றக் கூடிய ஆதார நூல், கம்பனே யொழிய வால்மீகர் அல்ல; தமிழகத்தில் வழங்கிய வான்மீக இராமாயணத்தின் வழுக்களை நீக்கித்தான், கம்பன் தமிழ் நாகரிகத்திற்கேற்றவாறு இராம காதையைச் செய்தான். தமிழ் நாட்டு மக்கள் இன்று விரும்பிப் படிப்பது கம்ப இராமாயணமே தவிர, வான்மீக இராமாயணமன்று. ஆதலால், இத் துறையில் இராமன் தவறு செய்ததாகக் கம்பனும் நினைக்கவில்லை. கம்பனைப் பயில்கின்ற தமிழரும் நினைக்க வேண்டிய அவசியமில்லை.

கைகேயி, இராமனுக்கு முடிசூட்டும் செய்தியை எடுத்த எடுப்பில் மறுக்கவில்லை; மாறாக, மகிழ்ச்சியடைகின்றாள். இராமனுக்கு முடிசூட்டும் செய்தியைக் கொண்டு வந்த மந்தரைக்குத் தான் அணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றிப் பரிசாகத் தருகிறாள். கைகேயிக்கும் இராமனுக்கு முடிசூட்டுவதில் உடன்பாடேயாகும். பின்தான் மந்தரையினுடைய —ஆசையூட்டுகின்ற சூது நிறைந்த சொற்களால் மனம் திரிந்தாள். இதனைக் கம்பன்,

''தீய மந்தரை யிவ்வுரை
செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது
சூழ்ச்சியின்; இமையோர்
மாயை யும்,அவர் பெற்றுள
வரமுண்மை யாலும்,
ஆய அந்தண ரியற்றிய
அருந்தவத் தாலும்''

—அயோ. மந்தரை, 77.

என்று பேசுகின்றார்.

''தூய சிந்தையும் திரிந்தது'' என்ற சொற்றொடர் நினைந்தின்புறத்தக்கது. இக்கருத்தினையே, பின்னே இராமன் கூற்றாக வைத்துக் கவிஞன் கூறுவது சிந்தனைக்குரியது.

''நதியின் பிழையன்று
நறும்புனலின்மை; அற்றே
பதியின் பிழையன்று;
பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று;
மகன்பிழை யன்று; மைந்த
விதியின் பிழை; நீ
இதற்கென்னை வெகுண்டது? என்றான்''

என்பது பாடல்.

''ஆற்றில் நீர் இல்லாதது ஆற்றின் பிழையன்று. அதுபோல, இந் நிகழ்ச்சிக்குத் தசரதன் பொறுப்பல்லன் — தசரதன் பிழையன்று. நம்மை வளர்த்த தாயாகிய கைகேயியின் மதியிலும் பிழையில்லை. பரதனின் பிழையுமன்று. விதியின் பிழையே'' என்று, வெகுண்ட இலக்குவனுக்கு இராமன் ஆறுதல் கூறுகின்றான். இங்ஙனமிருக்க, கைகேயிக்குத் தெரியுமென்றும் கம்ப இராமாயணத்தில் இல்லாத ஒன்றை எடுத்துக் காட்டிக் கூறி விவாதிப்பதில் பயனென்ன? இக் குற்றச்சாட்டுக்குக் கம்பனின் பாடல் ஒன்றையே சான்றாகக் காட்டியிருப்பது வியப்பைத் தருகிறது. பாட்டுடைப் பொருள். குற்றச்சாட்டுக்கு உடன்பாடாக இல்லை. இராமன் கூறுவதாகக் கவிஞன் கூறும் பாடல்:

''வரனில் உந்தைசொன்
மரபி னாலுடைத்
தரணி நின்னதென்
றியைந்த தன்மையால்
உரனில் நீபிறந்
துரிமை யாதலால்
அரசு நின்னதே
ஆள்க வென்னவே!''

—அயோ. திருவடி. 111.

இப்பாட்டுக்குச் சிலர் பொருள் கொள்ளும் முறை தாம் கொண்ட முடிவுக்கு ஏற்றவாறு பொருள் காண்பதாக இருக்கிறதே தவிர, பாட்டுக்குப் பொருள் காணும் முறையில் இல்லை. இந்தப் பாடல், இராமன் பரதனை நோக்கிக் கூறியது. சொல்லுமிடம் திருவடி சூட்டும் படலம். இந்தப் பாடலில் 'வரனில்' என்று குறிப்பிடுவது கைகேயி தசரதனிடத்தில் வாங்கிய இரண்டு வரத்தைக் குறிக்குமே தவிர, 'சுல்கம்' தொடர்புடையதன்று. தந்தை சொன்னதன் காரணமாகவும், தரணி உன்னது என்றும் குறிப்பிடுகிறான். இப்பாடலுக்கு இங்ஙனம் பொருள் காண்பதே முறை ஆதலால், இராமன், முடிசூட்டிக் கொள்ள விருப்பமுடையவனாகவும் இல்லை. தனது தந்தையும் நாட்டின் அரசனுமாகிய தசரதனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் கடமை என்ற உணர்விலேயே முடிசூட்டிக் கொள்ள ஒப்புக்கொள்ளுகிறான். கைகேயிக்குத் தசரதன், அவளிடத்தில் உண்டாகும் புத்திரனுக்கு முடிசூட்டி வைப்பதாகச் சொன்ன செய்தி கம்பனில் இல்லை. கைகேயி பெற்ற வரம், அவள் தசரதனுக்கு மனைவியான பிறகு சம்பராசுரனுக்கும் தசரதனுக்கும் நடந்த போரில் தசரதனுக்குத் திறமையாகத் தேர் ஓட்டிப் போரில் அவன் வெற்றி பெறக் காரணமாக இருந்தமைக்காகவே, வழங்கப்பெற்றது; வரம் பொதுப்படையாக வழங்கப் பெற்று — வேண்டியபொழுது வேண்டியதை அளிப்பதாக அளிக்கப் பெற்றதே தவிர, வரம் இன்னது என்று கைகேயியும் கேட்டுக் கொள்ளவில்லை — தசரதனும் குறிப்பிடவில்லை. அயோத்தியா காண்டம், மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் வரும் 81, 82ஆம் பாடல்கள் இதனையுணர்த்தும்.

கைகேயி, 'பரதன் நாடாள வேண்டும், இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னபொழுது, இராமன் 'துறந்தாரில் தூய்மையுடையோனாய்ச்' சற்றும் சலனமின்றி, மனம் நிறைந்த முகத்துடன்,

''மன்னவன் பணியன் ருகில்
நும்பணி மறுப்ப னே?என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றே?
என்னிதின் உறுதி யப்பால்?
இப்பணி தலைமேற் கொண்டேன்!
மின்னுளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்''

—அயோ. சூழ். 110.

என்கிருன்.

இந்தப் பாடல், இராமனின் பற்றற்ற உணர்வுக்கும், ஒழுக்கத்திற்கும், சீலச் சிறப்பிற்கும் எடுத்துக்காட்டு. கவிஞன் கம்பன், இந்த இடத்தில் இராமனுடைய பண்பாட்டை வியந்து, தன் கூற்ருகக் கூறும் பாடல் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

''இப்பொழுது எம்ம னேரால்
இயம்புதற் கெளிதோ?யாரும்
செப்பருங் குணத்து இராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்,
ஒப்பதே முன்பு;பின்புஅவ்
வாசக முணரக் கேட்ட
அப்பொழுது, அலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா''

—அயோ. கைகேயி சூழ். 108.

மேலும் இராமன் பற்றற்றவனுக இருந்ததோடு மட்டுமின்றி, அரசுப் பொறுப்பினின்றும் தான் விலக்கப் பெறுவது கருதிக் கவலை கொள்ளவில்லை. மாருக மகிழ்ச்சி அடைகின்ருன். பெரும் பாரத்தைச் சுமக்கும் வண்டியில் பூட்டப்பெற்ற எருது அவிழ்த்துவிடப் பெறும்பொழுது, மகிழ்ந்ததாகக் கவிஞன் கூறுகின்ருன். இங்ஙனம் குணத்தின் குன்ருகத் திகழும் இராமனை, வடபுலக் கருத்தை மையமாக வைத்துக் களங்கப்படுத்துவது நியாயம் இல்லை. வான்மீகி காட்டும் இராமன் வேறு—கம்பன் காட்டும் இராமன் வேறு. தமிழர் போற்றும் தலைவன் கம்பன் காட்டும் இராமனேயாம்.

கம்பனின் காவியப்படி, சீதை பெண்ணிற் பெருந்தக்காள். கற்பின் செல்வி. சீதையைப் பற்றிய விமர்சனத்திலும், சிலர் ஒரு நூலை மையமாக வைத்துக் கொண்டு ஆராய்வதில்லை. இங்கேயும் நமக்குக் கம்பனே ஆசிரியன். கம்பனை மையமாக வைத்துப் பார்ப்பதே தமிழர் கடமை. வான்மீகத்தின் வழியை அடைப்பதற்காகத்தானே கம்பன் இராம காதை செய்தான். 'இராவணன் பிறிதொரு பெண்ணின் உடன்பாடின்றி அவளைத் தீண்டிஞல் இராவணனின் தலை வெடித்துப்போம்' என்ற சாபம், வான்மீகி இராமாயணத்தில் இல்லை. கம்ப இராமாயணத்திலேயே இந்தச் செய்தி பேசப்பெறுகிறது. அதனுலேயே கம்பன் சீதையின் திருமேனியைத் தொட்டுத் தூக்காமல் அவளிருந்த நிலத்தொடு பெயர்த்து எடுத்துக்கொண்டு போனுன் என்று கம்பன் கூறுகின்ருன். வான்மீகியோ, திருமேனியைத் தீண்டித் தூக்கிக் கொண்டுபோனுன்—கைகளைப் பற்றித் தூக்கிக் கொண்டு போனுன் என்றே பேசுகின்ருன். வான்மீகியிலும் சாபத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. ஆனுல், கற்பழித்தாலேயே தலை வெடிக்கும் என்றிருக்கிறதே தவிரத் தீண்டினுல் தலைவெடிக்கும் என்றில்லை. கம்பனே இதில் வான்மீகியோடு முற்றிலும் மாறுபட்டு, மெய் தீண்டினுலேயே தலைவெடிக்கும் என்று மாற்றினுன். தன்னுடைய மாற்றத்திற்கேற்ப, நிலத்தோடு பெயர்த்துக் கொண்டு போனுன் என்றே காப்பியம் செய்தான்.

''மண்ணொடும் கொண்டு போனுன்
வானுயர் கற்பி னுள்தன்
புண்ணிய மேனி தீண்ட
அஞ்சுவான்;உலகம் பூத்த
கண்ணகன் கமலத் தண்ணல்
கருத்திலாள் தொடுதல் கண்ணின்
எண்ணருங் கூறுய் மாய்தி
என்றதோர் மொழியுண் டென்பான்''

—சுந்தர. திருவடி.

பிறிதொரு பெண் விரும்பாமல் அவளை இச்சித்தால் தலை வெடிக்கும் என்ற செய்தி வான்மீகத்திலோ, கம்பனிலோ இல்லை. காவியத்தின் போக்கிலும், தமிழர்தம் கருத்திலும், இராமனும் சீதையும் பொற்புடையோர்! போற்றுதலுக்குரியவர்கள்!

***

காதொளிரும் குண்டலமும், கைக்கு
வளையாபதியும், கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும், மெல்லிடையில்
மேகலையும், சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும், பொன்முடி
சூளாமணியும் பொலியச் சூடி,
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்கு தமிழ் நீடு வாழ்க!

—கவியோகி சுத்தானந்த பாரதியார்.

# திருக்கோயில்

அக்டோபர் மாத இதழ் 17 ஆம் ஆண்டு மலராக அதிகப் பக்கங்களுடன் வருகிறது

மலரில்

**சமயப் பேரறிஞர்கள்**
**வரலாற்றுப் பேராசியர்கள்**
**இலக்கிய மேதைகள்**
**கவிஞர் பெருமக்கள்**

ஆகியோரின் கருத்துரைகள் மணம் வீச இருக்கின்றன.

---

**கவிஞர் கண்ணதாசன் எழுதும்**

## "இறைவனின் நீதி மன்றங்கள்"

தொடர் கட்டுரை ஆரம்பமாகிறது.

---

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனையாளர்கள் முன்தொகையுடன் தெரிவியுங்கள்.

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டும்

விற்பனையாளர்கள் தேவை.

**விபரங்களுக்கு :**

**திருக்கோயில்**

திங்கள் இதழ்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

**நுங்கம்பாக்கம் நெருஞ்சாலை, சென்னை-600034**

# அருட் சக்தி ஆக்கம்

கவியோகி சுத்தானந்தபாரதியார்

அருள் பொருள் என்று இரண்டு சத்திகள் ஆற்றல்கள் உள்ளன. அருள் உள்ளிருந்து மலர்வது; பொருள் புறத்தினின்று எய்துவது. அருட்சக்தியை ஆத்ம சக்தி என்போம். இந்தச் சக்தியாலேதான், நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடினர். மாணிக்கவாசகர் ''அருளுடைச் சுடரே, அடியார் சிந்தையுட் புகுந்த சிவமே' என்கிறார். ''அவனருளே கண்ணுகக்'' காணச் சொல்லுகிறார் அப்பர். 'அருளெங்கும் கண்ணுனது யார் அறிவாரே' என்கிறார். அருளை நுகர்வதே அமுதம் என்கிறார்.

பொருள் என்பது, நாம் காணும் இயற்கைத் தோற்றம். இங்கே புறப்பொருளைக் கூறுகிறோம். புறப்பொருட் கூறுதான் விஞ்ஞானம். மேனுட்டு விஞ்ஞான ஆராய்ச்சியாளருடன் நான் பழகியிருக்கிறேன். அவர்கள் புறப்பொருள்களை எவ்வளவு ஆழ்ந்தறிந்தாலும் அமைதி சேரவில்லை. குஸ்டாவ் ஜுஸ்டு (Gustov Just) என்பவருடன் ஜூரிச்சில் அளவளாவினேன். அவர் இயற்கை விஞ்ஞானத்தை அலசிப் பார்த்தவர். பிறகு உள்ளே ஆழ்ந்து மனத்தை ஆய்ந்து, அறிவு நூல் வகுத்தவர். அவர் மிக இனிய பேச்சாளர். அவரிடம் நான் வினவியதாவது : ''மிஸ்டர் குஸ்டாவ், இங்கே விஞ்ஞானிகள் புறவியற்கையைப் பகுத்துத் தொகுத்தறிகின்றனர். அணுக் கதிரால் அரிய செயல்களைச் செய்கின்றனர். இன்று ஸ்புட்னிக்கில் மனிதன் மதி மண்டலத்தில் இறங்கி நடக்கின்றான். எத்தனையோ இயலறிஞர் இதற்கு வழி துலக்கினர். கி.மு. 400-ல் எல்லாம் அணுத்திறன் என்றான் டெமட்ரியஸ். 'அணுத் திறன் ஒலி எழுத்து' என்று எங்கள் இலக்கணமும் கூறும். ராபர் போயில் 'புதுமை என்பது அணுக்களின் புதிய சேர்க்கையே' என்றார். நியூட்டன் ஒளிக் கதிரில் அணு விளக்கம் கண்டான். டால்டன் 'மூலப்பொருள்களின் அணுத்திரட்சி நன்றே' என்றார். அவகாதிரன் மாலிகூல்ஸ் (Molecules) என்னும் சிற்றணுப் பான்மையைக் கண்டு விளக்கினார். ராபர்டு பிரௌன் என்பவர், செடிகளின் நுண்ணறைகளில் அணுத்திரட்சியின் ஆட்டத்தைக் கண்டார். ஹென்றி பெகரில் (Henry Bacquerel) யுரேனியம் உப்புகளில் கதிரியக்கம் கண்டார். வில்லியம் குருக்ஸ் தொலைநோக்கிக்கு இசைந்த கதிர்க் குழாயைக் கண்டார் (Cathod ray tube). ஜே. ஜே. தாம்ஸன் ஒரு அணுவில் இயங்கும் எலெக்ட்ரான், புரோட்டான் சக்திகளைக் கண்டார். ரோண்ட்ஷன் (Rontgen) எக்ஸ்-ரே கண்டார். பியர் க்யூரியும், மேரி க்யூரியும் பிட்ச் ப்ளெண்டிலிருந்து ரேடியம் (கதிரி) கண்டனர். ஸர். ரூதர்ஃபோர்டு ஓர் ஈயப் பேழையில் ரேடியத்தை வைத்து அதில் மூன்று கதிர்களைக் கண்டார். அல்ஃபா, பீடா, காமாக் கதிர்கள். குஸ்டாவ்: போதும் பேர் வரிசை. இவர்களெல்லாம் வெளிக் கதிர்களைக் கண்டனர். நமக்குள்ளே—உள்ளத்தில் உள்ளமாய் உள்ள ஆன்மக் கதிரைக் கண்டாலே அமைதி. நான் ஐன்ஸ்டனைக் கண்டு பேசியிருக்கிறேன். அவர் E=MC2 என்ற சக்திச் செறிவைக் கண்டார். போர் (Bhor) சாட்விக், ஓடஹான், ஸ்ட்ராஸ்மன், காம்ப்டன் அனைவரும் ஆராய்ந்து அணுகுண்டு உருவானது. அது இரோசிமாவில் விழுந்து அந்த ஊரையே சுடுகாடாக்கியது. சிகாகோவில் கனலும் அணுவுலை ஒரு பவுண்டு உரோனியத் தூளிலிருந்து முப்பது லட்சம் பவுண்டு நிலக்கரியின் தீத்திறனைப் பரப்புகிறது. இரோசிமாவை அழித்த அணுகுண்டு 20,000 டன் (TNT) உள்ளது. இப்போதுள்ள ஐட்ரஜன் குண்டு 50,000 டினன்டி. இதற்கு மேல் லித்தியம் குண்டு (Lithium Super bomb) 1,40,00,000 TNT கொண்டது. இந்த அணுத்தீயால் போர் வெறியர் மண்ணுசை பிடித்து மக்களைப் படுகொலை செய்யத் துடிக்கின்றனர். ஒரு நாட்டிடம் அணு வெடி குவிந்தால், ஆணவம் விம்மி வெடித்து, மற்ற நாடுகளை அஃது ஒறுத்துப் பிடித்துச் சுரண்டி, வறண்டிச் சூறையாடுகிறது. இதுதானு விஞ்ஞானம், இதுதானு பொருளறிவு, இதுவா நாகரிகம், இதுவா வல்லரசாண்மை?

இவ்வுலகம் எழுந்து 40,000 லட்சம் ஆண்டுகள் ஆயின. அதில் மனிதன் தோன்றி 200 நூற்றாண்டுகள் ஆயின. மனிதன் முதலில் பச்சையூனைப் புசித்து வேட்டையாடிப் பிழைத்தான். 9,000 ஆண்டுகளாகவே மனிதன் நெருப்பைக் கண்டு பயன்படுத்துகிறான். பேக்கன் விஞ்ஞான அறிவைத் தூண்டினான். நியூட்டன், ஃபாரடே முதலியோர் விஞ்ஞானக் காண்புகளால் பொருளறிவுப் புலமையைத் தூண்டினர். இன்று பொருளறிவு, விஞ்ஞான மூளை, விண் வெளியை வெற்றி கொள்ளப் பாய்கிறது. சிறிது விசை பிசகினுல் மாய்கிறது. அணுசக்தி மண் வெறிக்கு ஆக்கமளித்து உலகை அழிக்கிறது. நான்: ''உண்மை; என் இத்தாலிய நண்பர் தோடஸ்கினி (Toduskini) அணுசக்தியும் ஆத்மசக்தியும் இணைந்தாலே ஆக்கமும் அமைதியும் ஊக்குவதாகும் என்கிறார். இந்தக் கனல் வெறிக் கலை எழுமுன், மக்கள் உணவுப் பஞ்சம் இல்லாது, உண்டு உடுத்து உளங்கலந்து வாழ்ந்தனர். விஞ்ஞானத்துடன் மெய்ஞ்ஞானமும் விரவினுல், அஞ்ஞானம்போய், அருள் அறிவு மலரும். அருள் இருளைப் போக்கும். இறுமாப்பை ஒழிக்கும். அருளால்

இரக்கம் பிறக்கும். 'இரக்கமே நான்; இரக்கம் போனால், நானும் சாவேன்' என்கிறார் வள்ளலார். ''கருணையார் அமுதே'' என்று அவர் கடவுளைக் கூறுகிறார். 'அருட்பெரும் சோதி தனிப்பெரும் கருணை' என்ற மந்திரநாதத்தை எழுப்பி, சாதி மத சாத்திர கோத்திர வேறு பாடில்லாத ஆன்ம நேய ஒருமையை நாட்டினார் வள்ளலார். இதுதான், அணுவுலைத் தீயால் அழியும் அபாயத்திலிருந்து உலகைக் காக்கும் அருட்கருணையாக்கம்.

குஸ்டாவ்: ஆம். நாம் உமது St. Ramalinga, Gospel of Perfect Life ஆகிய நூல்களைப் படித்துள்ளேன். அணு-விஞ்ஞானம் நச்சுப் புகை கக்கி மாந்தர் மூச்சைப் பிடிக்கிறது. 'புகை-உயிருக்குப் பகை'. இவ்வளவு விஞ்ஞான முன்னேற்றத்தினால் நமது வாழ்வுநிலை முன்னேறியதா? நாம் அமைதி கண்டோமா? சண்டை நின்றதா? மனிதனின் கொலை வெறி நின்றதா? விலை ஏற்றம், வரியேற்றம், எங்கும் ஏமாற்றம்! உணவுப் பற்றுக்குறை. மக்கட் பெருக்கம், மனக்கலக்கம்! ஆசைத் தினவுகள், பாசப் பற்றுகள், நாசச் சூழ்ச்சிகள், நச்சுப் புகைகள், இவையா நாகரிகம்?

நான்: எப்படியோ விஞ்ஞானப் புதுமைகள் விண்ணேறி மிரட்டுகின்றன. அணுப்போர் குமுறிக் கொண்டிருக்கிறது. எளிய நாடுகள் நடுநடுங்குகின்றன. இன்று உலகைக் காப்பது எப்படி என்று அறிவாளர் சிந்திக்கின்றனர். நான் பெட்ராண்டு ரஸ்ஸலிடம் பேசினேன். அழியும் உலகில் அன்பு பொழியுமா? ஆக்கம் பெருகுமா? என்று வினவினேன். அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'மனிதன் உள்ளத்தில் இரக்கம் பிறக்க வேண்டும். கொலை வெறித் தினவு ஒழிய வேண்டும்' என்றார். அறிஞர் ரோலான் ரோமா சிந்தனைக் கனவில் வாழ்கிறார். அவர் ''போர்க் கொலை ஒழிந்து ஆன்மக் கலையால் மாந்தர் புது மலர்ச்சி பெற வேண்டும்'' என்கிறார். எச். ஜி. வெல்ஸ் அரிய அறிஞர். அவர் இறக்கு முன் விஞ்ஞான உலகிற்கு வீறிட்ட மொழிகளை மறக்க முடியாது: ''மாந்தர் வேருடன் அழியும் ஊழிக்காலம் குமுறுகிறது. நான் விஞ்ஞான மனிதனை வியந்ததுண்டு; இன்று பயந்து சொல்லுகிறேன். ''நான் விஞ்ஞான மனிதனின் முன்னேற்றத்தைப் போற்றினேன்; அவனது மனத்திட்பமும், பொறியியலறிவும் நாகரிகத்தை நலமுறுத்தும் என்று கருதினேன்; மனம் உடைந்தேன். மனிதனுக்கு அழிவு காலம் வந்துவிட்டது. கொடிய இடி முழக்கம் 'இத்துடன் நில்' என்று குமுறுகிறது. உலகில் எங்கும் கலக்கமும் கவலையும் குடிகொண்டன. சமுதாயக் கப்பல் இருட்கடலில், சுழற்புயலில் சிக்கித் தத்தளிக்கிறது; கொள்ளைக்காரர் அதைச் சூறையாடச் சூழ்ந்து கூச்சலிடுகின்றனர். வாழ வழியென்ன?'' என்று கேட்கிறார் —அறிஞர் வெல்ஸ். வாழும் வகையை, வாழ்வாங்கு வாழும் வகையை எங்கள் திருக்குறள் பேசுகிறது. ''அன்பின் வழியது உயிர் நிலை''; ''அறத்தால் வருவதே இன்பம்'', ''அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்'' — அருளொளியே இருளை அழிக்கும், இன்பம் கொழிக்கும்.

அருளாலே உள்ளத் தறிவா யிலகும்
பொருளாலே யின்பப் பொலிவு!

குஸ்டாவ் ஜுஸ்டு: ''Grace alone can save the race'' அருளே மனித மரபைக் காக்க வல்லது என்று தமது சித்தாந்தத்தை வலியுறுத்தி நிலைநாட்டினார்.

ஒன்றே கடவுள் என்றிடுவீர்
உள்ளங் கூடி யுணர்ந்திடுவீர்
ஒன்றே எல்லா வுயிர்க்குலமும்;
உண்மை யான்ம நேயமுறீர்
நன்றே நாடி நலம்புரிவீர்
நானே நானே என்னுதிர்
வென்றே புலனை யாண்டிடுவீர்
விரிவான் சூழும் உலகீரே!

தாயின் கருணை காட்டிடுவீர்
தருண மழைபோல் உதவிடுவீர்
சேயின் உள்ளத் தெளிவுடனே
சேர்ந்து வாழப் பழகிடுவீர்
கோயி லான வுலகினிலே
குயிலார் சோலை எனச்செழிப்பீர்
தூய இன்பச் சுடரான
சுத்த சக்திச் சிவனருளால்!

கருணை கருணை என்கேனே!
கடவுள் கடவுள் என்கேனே!
இருளை நீக்கி வழிதுலக்கும்
இரவிச் சுடர்நீ என்கேனே!
பொருளே புகலே என்கேனே!
புனிதப் பொலிவே என்கேனே!
அருளே அழகே என்கேனே!
அன்பே சிவமே அறிவமுதே!

—சுத்தானந்தபாரதி.

---

* "I imagined that my pet homo-Sapiens are the crowning achievement of the evolving Nature possessing incomparable mental power and mechanical skill to lead civilization. But today I send a warning note. Extinction is coming to man like a brutal thunder clap of halt."

# வட்டணைபட நடந்த நாயகர்

இரா. நாகசாமி, எம். ஏ.



மேலப் பெரும் பள்ளம் திருக்கோயிலில் உள்ள செப்புத்திருமேனி. இது 12 ஆம் நூற்ருண்டில் வடிக்கப்பட்டது.

பூம்புகாருக்கு அருகில் மேலப்பெரும்பள்ளம் என்ற ஊர் உள்ளது. இவ்வூர் திருவலம்புரம் என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டது. இஃது ஒரு பாடல் பெற்ற தலம். அப்பர் பெருமானின் அழகிய திருப்பதிகம் ஒன்று, இவ்வூர் உறைகின்ற இறைவன் மீது உண்டு. அப்பதிகத்தில் இரு பாடல்கள் கீழ்வருமாறு உள்ளன.

''கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினற் காய்ந்துகந்த காபாலியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்வாய்ச்
சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வெளவ
மறித்தொருகால் நோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி ஞரே.''

இவ்வூர்க் கோயிலில் ஓர் அழகிய செப்புத் திருமேனி உள்ளது. இப்பெருமான் நீண்ட சடைமுடி தரித்தவராய், கையில் வீணை ஏந்தி முகத்திலே இளநகை பூண்டு, ஒரு காலைச் சற்று மடித்து, நடக்க முயல்வதுபோல் அமைக்கப் பட்டுள்ளது அத்திருமேனி. இவருக்கு அருகில் துள்ளிக் குதிக்கும் மான் ஒன்றும், மறுபுறத்தில் தலையில் தட்டம் ஏந்திய குள்ளப்பூதம் ஒன்றும் உள்ளன. கையிலே வீணை தரித்துப் பிச்சை புகுகின்ற எழில் மேனியாக இவ்வுருவம் விளங்குகிறது. இவ்வுருவத்தைப் பார்த்து மேலே உள்ள பாடலையும் பார்க்கும்பொழுது, இப்பாடல்களையே தியானச் செய்யுட்களாகக் கொண்டு வடிக்கப்பட்டது இவ்வுருவம் என்பது, தெறித்ததொரு வீணையராய், மறித்தொருகால் நோக்காதே வட்டணைகள் பட நடந்து மாயம்பேசி, வலம்புரமே புகுகின்ருராக, அப்பர்பெருமான் பாடியுள்ள அதே திருமேனியாக, இது விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

''வட்டணைபட நடந்த நாயகர்'' என்ற ஒரு செப்புத்திருமேனி, இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டில் இவ்வூரிற் குறிக்கப்படுகிறது. கோயிலில் அப்பர் பெருமானின் பாடலைப் பாருங்கள். அவர் பாடலில் உள்ள சொற்களே கல்வெட்டில் குறிக்கப்படுவது கண்டு மெய்சிலிர்க்கிறது.

அப்பர் பாடலை அடிப்படையாகக் கொண்டு செப்புச் சிலையை வடித்தான் சிற்பி, அதே பெயரைக் கல்வெட்டில் கொடுத்து மகிழ்ந்தான் மன்னன். அற்புதமான சிற்பம்.

# அருள்மிகு பெரியமாரியம்மன் திருக்கோயில்

## திருவில்லிபுத்தூர்,

இராமநாதபுரம் மாவட்டம்.

எந்நாட்டவர்க்கும் இறைவனை சிவபெருமான், அருள்மிகு வைத்தியநாதன் என்னும் திருப்பெயருடன், போற்றற்கரிய பல திருவிளையாடல்களைப் புரிந்து கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளதும், சூடிக்கொடுத்த நாச்சியார் திருவவதாரம் செய்ததுமான புண்ணியத் தலமாகிய ஸ்ரீவில்லிபுத்தூர் நகரின் மையத்தில், பேருந்து நிலையத்திற்கு வெகு அருகாமையில், மதுரை— தென்காசி செல்லும் பெருவழியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. ஆலயம் சுற்றிலும் தென்னை மரங்களும், நிழல் தரும் மரங்களும், பசுமை மிக்க செடிகளும் கொடிகளும் மண்டிக் கிடக்கும் ஓர் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது.

அருள்மிகு பெரியமாரியம்மன் வேண்டுவோருக்கு வேண்டுவன இனிது நல்கி, அருள்மாரி பொழிந்து, கருணையாட்சி புரிந்து வருவதால், திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்பிறை போன்று வளர்ந்தோங்கி வருகின்றது. நவராத்திரி, பங்குனி பூக்குழி போன்ற திருவிழாக்கள், குறிப்பிடத் தக்கவையாயினும், பூக்குழி திருவிழாவே மிகவும் தலையாயது. தமிழகம் முழுவதும் ஆங்காங்கு, தீ (பூ) மிதித்தல் திருவிழா நடைபெற்று வரினும், இங்கு நடைபெறுகின்ற பூ (தீ)க்குழித் திருவிழா முதன்மையானது எனலாம். அத்திருவிழாவில் இளையர் முதல் முதியோர் வரை வருடந்தோறும் நோன்பு நோற்று, ஆலயத்தின் முன்புறம் அமைந்துள்ள பூ (தீ)க்குழியில் இறங்கி அனல் கக்கும் நெருப்பு மீது நடந்து, அன்னையின் அருளைப் பெறும் காட்சியின் மகிமையை என்னவென்று சொல்வது! கடந்த 1380—1381—1382—1383-ஆம் பசலி வருடங்களில் முறையே, 2711, 3148, 3419, 3542 அன்பர்கள் தீக்குழி இறங்கியுள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபொழுது, அதைக் காணக் கூடுகின்ற கூட்டத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இத்திருக்கோயிலில் சுமார் 7 அடி உயரத்தில் முகப்பு மண்டபத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள, ஆவுடைபார்வதி என்றழைக்கப்படும் பாம்புப் புற்று மிகவும் காணத்தக்கது.

மேலும் பல அற்புதங்கள் நிகழ்ந்துவரும் இத்திருக்கோயிலில், பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில், திருப்பணி செய்து, குடமுழுக்கு விழாவும் நடத்த வேண்டுமென்று கருதி, திருப்பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. அப்புனிதப் பணி ஈடேற மெய்யன்பர்களின் உதவி மிகவும் இன்றியமையாதது. ஆலயத்தின் நிதியிலிருந்து வீடுகள் கட்டி, குறைந்த வாடகைக்குக் கொடுப்பதன் மூலம், சமுதாயத்திற்கும் முடிந்த அளவிற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அதைச் செயல் வடிவாக்க நிர்வாகம் முனைந்துள்ளது.

ஆகவே மெய்யன்பர்கள், குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சுற்றுலாவரும் அன்பர்கள், அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தந்து, அம்மனின் பேரருளுக்கு இலக்காகி ஈடில்லா இன்பம் பெற்றுச் செல்லுமாறு விரும்பி வேண்டி அன்புடன் அனைவரையும் வரவேற்கின்றோம்.


**திரு. கே.எஸ்.என். சங்கரநாராயணத் தாகர்,**

**திரு. கே. குருநாதன்பண்டாரம்,**

அறங்காவலர்கள்.

**எம். இராமச்சந்திரன், பி.ஏ.,**

நிர்வாக அதிகாரி.




சர்வேசுவரனின் எண்ணிறந்த அவதாரங்களுள் சிறந்தனவாகிய தசாவதாரங்களிலேயே ஆழ்வார்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவற்றுள்ளும் கிருஷ்ணாவதாரத்தில் ஆண்டாள் உள்பட ஆழ்வார்கள் பன்னிருவருமே மிக ஈடுபட்டுப் பாடி அநுபவித்திருக்கிறார்கள்.

**பெரியாழ்வார்**

மற்று எல்லா ஆழ்வார்களைக் காட்டிலும் கண்ணபிரானிடத்தில் அதிகப் பிரேமை கொண்டவர் இப்பெரியாழ்வார். இவர் கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டவராய் மனித நிலைக்கு மேற்பட்ட கிருஷ்ண விருத்தாந்தத்தைக் கோபிகைப் பிறவியை ஆஸ்தானம் பண்ணி அநுகரித்து, யசோதை முதலானவர்களுடைய அநுபவத்தைத் தாம் அநுபவித்து, அவ்வநுபவத்தால் உண்டான அதிசயத்தாலே 'பெரியாழ்வார் திருமொழி' என்ற திவ்வியப் பிரபந்தத்தை அருளிச் செய்தார். இதைப் 'பாரத சாரம்' என்றும் சொல்லுவர். இந்தத் திருமொழியில் இவர் பாடிய 'திருப்பல்லாண்டு' 12 மட்டும் அன்றி, மற்றும் உள்ள 461 பாசுரங்களுள் 279 பாசுரங்களைக் கண்ணபிரானுக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

இவ் ஆழ்வார் தமது முதற் பத்து 1-ஆம் திருமொழியில் கண்ணபிரான் அவதாரம் செய்ததையும், ஆயர்பாடியில் ஆயர்கள் அன்பு வசப்பட்டு அறிவு அழிந்தவராகி, ஓடியும் விழுந்தும் ஆடியும் பாடியும் செய்த செய்கைகளையும், எண்ணெய், சுண்ணம் (சிகைக்காய்த்தூள்) ஒருவருக்கொருவர் பரிமாறியதையும், எத்திசையும் சயமரம் கோடித்தது முதலான சிறப்புக்களையும் வர்ணித்துக் கூறுகிறார்.

யசோதையும் கோபிமார்களும் கண்ணனாகிய குழந்தையின் வாயுள் உலக முழுதும் தோன்றிய ஆச்சர்யத்தைக் கண்டு, தெய்வமே தங்களிடையில் வந்து பிறந்தது என்று மகிழ்ந்தனர் என்பதை, 'ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட, வையமேழும் கண்டாள் பிள்ளை வாயுளே', 'வாயுள் வையகம் கண்ட மடநல்லார் ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்....' என்று இவரும் பாடி மகிழ்கிறார்.

முதற்பத்து 3ஆம் திருமொழியில் கண்ணன் அவதரித்துச் சிறப்பெய்தின வைபவத்தைக் கூறியதும், 3ஆம் திருமொழியில் 9 பாட்டுக்களால் வெகு அழகாகத் தாலாட்டுப்பாட ஆரம்பித்து விடுகிறார்.

முதல் பாசுரமாகிய 'மாணிக்கம் கட்டி' என்ற பாட்டில், கண்ணா! மாணிக்கத்தை இரண்டு வரம்பிலும் பதித்து, நடுவில் வயிரத்தைப் பதித்து, மாற்றுயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட அழகிய தொட்டிலைச் சதுர்முகனானவன் விரும்பி உனக்கு அனுப்பினான், என்கிறார்.

இரண்டாவதான 'உடையார் கன மணியோடு' என்ற பாசுரத்தில் பொன்மணியோடு நடுநடுவே கலந்து கோக்கப்பட்ட அரசிலைத் தாலியும், மாதுளம் பூ தாலியும் கூடிய அரைவடத்தை, ரிஷப வாகனனும் கபாலதாரியுமாகிய உருத்திரன் உனக்கு அனுப்பி வைத்தான், என்றும்,

மூன்றாவதான 'என் தம்பிரானார்' என்ற பாசுரத்தில் தேவேந்திரனானவன் உனக்காக அழகிய கிண்கிணியைக் கொண்டு வந்து சமர்ப்பித்து வெகு விநயத்துடன் நின்றான் என்றும்,

நான்காவதான 'சங்கின் வலம்புரியும்' என்ற பாசுரத்தில் சங்குகளிற் சிறந்த வலம்புரிச்சங்கத்தையும், அழகிய கைகளுக்குரிய முன்கை வளைகளையும், தோள்வளைகளையும், பொன்னரை நாணையும் அரைவடத்தையும் சுவர்க்கத்திலுள்ள தேவர்கள் உனக்கென்று அனுப்பினார்கள், என்றும்,

ஐந்தாவதான 'எழிலார் திரு மார்வுக்கு' என்ற பாசுரத்தில் உன்னுடைய அழகுமிக்குள்ள திருமார்பிற்கு ஏற்குமிவை என்று அழகிய பஞ்சாயுதமென்னும் ஆபரணத்தையும், முத்து வடத்தையும் எடுத்துக் கொண்டு வந்து நீ இவற்றைத் திருவுள்ளம் பற்ற வேண்டும் என்று குபேரனானவன் அஞ்சலி பண்ணிக்கொண்டு நின்றான் என்றும்,

ஆறும் பாசுரமாகிய 'ஓதக்கடலின்' என்பதில் கடலில் உண்டாகி மிக்க ஒளியையுடையதாகிய முத்தால்கோக்கப்பட்ட ஹாரத்தையும், பவளவடத்தையும் அழகுபொருந்திய முன் கை வளைகளையும், மதிப்புமிகுந்தவை உனக்குத்தான் தகுதியுள்ளவை என்று வருணதேவனானவன் சமர்ப்பித்துச் சென்றான் என்றும்,

ஏழாவது பாசுரமான 'கானார் நறுந்துழாய்' என்றதில், பெரிய பிராட்டியார் (ஸ்ரீதேவி) பரிமளமுள்ள துளசியாலே கைத்திறம் தோன்றப் பண்ணின மாலையையும் கற்பக மரத்தின் பூக்களால் தொகுத்த திருநெற்றி மாலையையும் உனக்கு அனுப்பி வைத்தாள், என்றும்,

எட்டாவதான 'கச்சொடு பொற்சுரிகை' என்ற பாசுரத்தில், கச்சுப்பட்டையும் பொன் உடைவாளையும் மூங்கிலின் உள்தோல் போன்ற

மெல்லிய சேலையையும், கனகமயமான தோள் வளைகளையும், இரத்தின மயமாய் உச்சியிலே சாத்தத் தக்கதான சுட்டியையும், பொற்பூவையும், கண்ணனுக்குக் கொடுங்கள் என்று பூமிப் பிராட்டி (பூதேவி) உனக்காக அனுப்பினுள் என்றும்,

ஒன்பதாம் பாசுரமான 'மெய்திமிரும் நானப்பொடியோடு' என்றதில் கஸ்தூரி, கற்பூரம், சந்தனம் முதலியவற்றின் சுகந்தப் பொடிகளையும் மஞ்சள் பொடியையும், கண்களில் சாத்துவதற்கு மையையும், நெற்றியில் சாத்துகைக்குச் செந்தூரத்தையும் துர்க்கையானவள் உனக்காக எடுத்துக்கொண்டு வந்து வெகு விநயமாக நின்ருள் என்றும் தாலாட்டைப் பாடி முடிக்கிருர்.

மற்றும் கண்ணன் செய்த லீலைகளையும் குறும்புகளையும் அவற்றைக் கோபஸ்திரிகள் யசோதையிடம் வந்து சொல்லி முறையிடுவதையும் போலப் பாடியும், கண்ணனை யசோதை நீராடவும் காப்பிடவும் பூச்சூடவும் அழைப்பதுபோல் தாமும் அழைத்துப் பாடியும் அநுபவித்தார்.

## ஆண்டாள்

கண்ணனென்னும் கருந்தெய்வத்தைத் தனக்கேற்ற காதலனுகக் கருதி, அவனது பிரிவையாற்ருத ஆயர்குலமங்கையரைப் போல் தானும் நோன்புநோற்று உயிர்தரிப்பவளாய் அவ்வநுபவத்தைத் 'திருப்பாவை 30' 'நாச்சியார் திருமொழி 143' என்னும் இரண்டு திவ்வியப் பிரபந்தங்களின் மூலமாகப் பகவத் சந்நிதியிலே விண்ணப்பம் செய்து, எந்நேரமும் அவன் நினைவிலேயே காலம் கடத்தி வந்தாள்.

முதலில் நோன்பு நோற்கிருள். அப்பால் தன்னைக் கண்ணனிடம் சேர்த்து வைக்கும்படி காமனைத் தொழுகின்ருள். கண்ணனிடம் பறவைகளையும் மேகங்களையும் கடலையும் தூது விடுகிருள். கண்ணன் இருக்குமிடமாகிய பிருந்தாவனத்திற்குத் தன்னைக் கொண்டு போய் விடும்படி உற்ருரை வேண்டுகிருள். கண்ணன் அணிந்த ஆடை, மாலை முதலியவற்றைத் தன் மேலிட்டு தன் வாட்டத்தைத் தணிவிக்க வேண்டுகிருள். கடைசியில் தானே பிருந்தாவனத்தில் கண்ணனைக் கண்டதாகச் சொல்லுகின்ருள்.

## குலசேகராழ்வார்

இவர் பெருமாளுடைய இன்ப துன்பங்களைத் தமது சுகதுக்கங்களாகக் கருதியதனுல், இவருக்குக் 'குலசேகரப்பெருமாள்' என்று ஒரு பெயர் வழங்கலாயிற்று. இவர் அருளிச் செய்த 'பெருமாள் திருமொழி' 105 என்னும் பிரபந்தம் பத்துத் திருமொழியில் 6, 7 திருமொழிகளைக் கிருஷ்ணுவதார விஷயமாகப் பாடியிருக்கிருர். தமக்குச் சில காலத்திற்கு முந்தின கிருஷ்ணுவதாரத்தை நினைத்து அப்பெருமானைத் தாம் சேவித்து அநுபவிக்கப் பெருமற் போனமைக்கு இரங்கி, அவ்விரக்கத்தை அவ்வவதாரத்திலே ஆய்ப்பெண்கள் கண்ணபிரானேடு ஊடல் கொண்டு அங்கலாய்த்த பேச்சுக்களாகவும், கண்ணனது பால சேஷ்டிதங்களை யசோதை கண்டு களித்தது போல் காணப்பெருத தேவகி தேவியின் புலம்பலாகவும் அருளிச் செய்கிருர்.

''பஞ்ச லட்சங்குடியிற் பெண்களுக்குக் கிருஷ்ணன் பக்கலுள்ள விடாயெல்லாம் தமக்கொரு வருக்கும் உண்டாகையாலே, திருவாய்ப்பாடியிற் பெண் பேச்சாலே பேசுகிருர்'' என்ற வியாக்கியானத் திருமொழி இங்குப் போக்கியமாகச் சேவிக்கத்தக்கது.

## திருமழிசையாழ்வார்

இவர் சொன்னபடியெல்லாம் கும்பகோணம்-திருக்குடந்தையில் கோயில் கொண்டு வாழும் ஆராவமுதப் பெருமாள் நடந்ததால், இவ் ஆழ்வாருக்குத் திருமழிசைப்பிரான் என்றும் பெருமாளுக்கு 'ஆராவமுதாழ்வார்' என்றும் பெயர்கள் வழங்கி வரலாயின.

இவர் பாடிய 'திருச்சந்தவிருத்தம்' 120 பாசுரங்களில் முப்பது பாசுரங்கள் கிருஷ்ண பரமாத்மாவைப் பற்றியவை. இவருக்குக் கிருஷ்ணனிடத்தில் அபார பக்தி உண்டு. இவர் எல்லா மதங்களையும் ஆராய்ந்து பார்த்து, முடிவில்,

''இனி யறிந்தேன் ஈசற்கும் நான்முகற்குந்தெய்வம்
இனி யறிந்தேன் எம்பெருமான்! உன்னை.....
......நற்கிரிசை....நாரணன் நீ....

என்று, வைணவ மதத்தில் புகுந்தவர்.

முற்காலத்தில் பூமியிலே அதிகமாயுண்டான சுமையாகிய துஷ்டவர்க்கத்தை ஒழிப்பதற்காக அருச்சுனனுடைய தேரை நன்ருக நடத்திப் பகலை இரவு ஆக்குகை முதலான ஆச்சரியச் செயல்களைச் செய்து, எதிரிகளைக் கொன்று வெற்றி பெறுவதாக நினைத்திருந்த மகாரதர்களான துரியோதனுதிகளுக்கு வீர சுவர்க்கத்தைக் கொடுத்துப் பூமண்டலத்தைப் பஞ்சபாண்டவர்களுடையதாக ஆக்குவித்துப் புகழ்மிகுந்த உன்னைத் தவிர மற்ருெரு தெய்வத்தை நான் உயர்வாகக் கொள்வேனே? என்ற தம் கொள்கையை,

பார்மிகுத்த பாரம் முன் ஒழிச்சுவான் அருச்சுனன்
தேர்மிகுத்து மாயமாக்கி நின்றுகொன்று வென்றி சேர்
பாரதர்க்கு வான்கொடுத்து வையம் ஐவர் பால தாம்
சீர்மிகுத்த நின்னலால் ஓர் தெய்வம் நான் மதிப்பனே?

என்ற பாசுரத்தால் அறிவித்தார்.

மேலும் இவர் நான்முகன் திருவந்தாதி 57-ஆம் பாசுரத்தில், 'பெருங் குருந்தம் சாய்த்தவனே' என்று அருளிச் செய்து உண்மை பேசப் புகுந்தால், பெரிய குருந்த மரத்தை வேர் பறியத் தள்ளி முறித்த கண்ணபிரானே! உடன் நிற்கும் புண்ணிய பாவங்களுக்கு நிர்வாஹகன், சமீபத்திலுள்ள தேவர்களும் அசுரர்களும் இப் பூமியும் ஆகிய இவையெல்லாம் என் நெஞ்சினுள் உறைகின்ற சர்வேசுவரனேயாம். அந்த சர்வேசுவரன் அல்லாத பொருள் என்ன இருக்கிறது? என்கிருர்.

(தொடரும்).

குறிப்பு: செய்யுளைப் பாசுரம் என்றும், பத்து அல்லது பதினெரு செய்யுள் கொண்ட தசம் என்ற பதிகத்தைத் திருமொழி என்றும், பத்துப் பதிகங்கள் கொண்டதைப் பத்து என்றும்கூறுவது திருமால் நெறியின் மரபு ஆகும்.

# பதியம் பாடப் பார்வை இழந்தோர்

கு. தாமோதரன். எம். ஏ.,

இருபதாம் நூற்றுண்டில், அறிவியலில் ஆச்சரியப்படத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய சூழ்நிலையில், தமிழக அரசு கண் பார்வை இழந்தோர்க்குக் கண்ணெளி வழங்கிடவும், உடல் ஊனமுற்றேர்களுக்கு அரசுப் பணிகளில் முதலிடம் அளித்திடவும் முன்வந்து, அரிய பணியை ஆற்றி வருகிறது. இத்தகைய அரும் பணி இன்றைக்கு 865 ஆண்டுகளுக்கு முன்பாகவே நம் தமிழகத்தில், சோழர் காலத்தில் நடைபெற்றிருக்கிறது என்றால் நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அதுபற்றித் தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்று இன்றளவும் நல்ல முறையில் காணப்படுகிறது.

தென்னுர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம் திருவாமாத்தூரில் உள்ள 'ஆளுடைய அழகிய தேவர் கோயிலில்' சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 12-ஆம் நூற்.), பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கல்வெட்டு திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் திருப்பதியம் பாடியவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆளுடைய அழகிய தேவர் கோயிலுக்குத் தனிச் சிறப்பு உண்டு. ஏனெனில் இங்குத் திருப்பதியம் பாடியவர்கள் பிறவிக் குருடர்கள். பார்வை தெரியாத, மற்றவர் பார்வைக்குத் தென்படுகின்ற புறக்கண்கள் இவர்களுக்கு இருந்தும் அவைகள் பயன்படாது போகவே அக்கண்களால் இறைவனை உணர்ந்தவர்கள். இதன் காரணத்தாலோ என்னவோ திருப்பதியம் பாடும் பேறு பெற்றனர்.

திருப்பதியம் பாடும் பொறுப்பைப் பதினறு குருடர்கள் வகித்து வந்தனர். இவர்களுக்கு வழிகாட்டும் பணிக்கு இருவர் அமர்த்தப்பட்டனர். திருப்பதியம் பாடுபவர்கள் குருடர்களாக இருந்த காரணத்தால், இவர்களுடைய உதவியாளர்களைக் கல்வெட்டு 'கண் காட்டுவார்' என்று குறிக்கிறது. எவ்வளவு பொருத்தமான சொல் இது. கண் இழந்துள்ள அவர்களுக்குத் தங்கள் கண்களின் துணையால், அவர்களுக்குக் கண்ணுக இருந்து வழி காட்டுவதால் 'கண்காட்டுவார்' என்று அழைக்கப்பட்டனர் போலும்.

கண் இல்லாதவர்கள் இவ்வுலகில் வாழத் தகுதி அற்றவர்கள் என்று கருதிப் புறக்கணிக்கப்பட்டார்கள். இவர்கள் வாழ்வில் இனி ஒளி இல்லை என்று கருதப்பட்டது. இந்த ஒளி இல்லாத விளக்குகளைச் சோழர் காலச் சமுதாயம் புறக்கணித்ததா? இல்லை. அப்பொழுது அமைந்திருந்த அரசும், அரசனும் இத்தகைய குருடர்களுக்கு வாழ்வளிக்கத் தவறவில்லை. திருப்பதியம் பாடுபவர்கள் குருடர்களாக இருந்தாலும், நன்கு கற்றறிந்தவர்கள் ஆதலால், அவர்களைப் புறக்கணிக்காமல் இறைவனுக்குத் திருப்பதியம் பாடும் பேற்றை அவர்களுக்கு அளித்தனர்.

திருப்பதியம் பாடிவரும் குருடர்கள் பதினறு பேர்களுக்கும், கண்காட்டுவார் இருவருக்கும் சேர்த்துப் பதினெட்டுப் பேர்களுக்கு உணவுக்காக அளிக்கப்பட்ட நெல்லின் அளவு குறிக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு, ஆள் ஒன்றுக்கு, பதக்கு நெல் வீதம், பதினெட்டுப் பேர்களுக்கு மூன்று கலம் நெல் அளிக்கப்பெற்றது. (ஒரு பதக்கு-இரண்டு மரக்கால், பன்னிரண்டு மரக்கால்-ஒரு கலம்) முந்நூற்று அறுபது நாட்களுக்குப் பதினெட்டுப் பேர்களுக்கு ஆயிரத்து எண்பது கலம் நெல் அளிக்கப்பெற்றது. ஒரு ஆளுக்கு என்பதைக் கல்வெட்டு 'பேரால்' என்ற சொல்லால் குறிக்கிறது. இதைக் கல்வெட்டு கீழ்க்கண்டவாறு குறிக்கிறது.

''திருப்பதியம் பாடிவரும் குருடர்கள் பேர் பதினறுவரும் இவர்களுக்குக் கண்காட்டுவார் இருவரும் ஆகப்பேர் பதினெண்மர்க்குப் பேரால் நெல்லு பதக்காக நாளொன்றுக்கு நெல்லு முக்கலமாக நாள் முந்நூற்றறுபதுக்கு நெல்லு ஆயிரத்தெண்பதின் கலமும்....'''

இது தவிர இவர்கள் அணிந்து கொள்வதற்கு ஆடை எவ்வாறு வழங்கப்பெற்றது என்பதையும் அறிய முடிகிறது. இதைப் 'புடவை முதல்' என்று கல்வெட்டு குறிக்கிறது. 'புடவைமுதல்' என்பது திருப்பதியம் பாடுபவர்களுக்கும், அவர்கள் உதவியாளர்களுக்கும், கட்டிக்கொள்ளும் துணிக்காகக் கொடுத்ததைக் குறிக்கிறது. 'புடவை' என்ற சொல் துணி அல்லது ஆடை என்ற பொருளில் வழங்கி வந்திருக்கின்றது. இதைச் சிதம்பரத்தில் உள்ள 'ஆடவல்ல பெருமான்' கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திரனின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டு (கி.பி. 11-ஆம் நூற்.) கல்வெட்டுக்


குறிக்கிறது. சாலேமடையன் (சமையல்காரன்) ஒருவனுக்கு உணவுக்காக ஆறு நாழி நெல்லும், அவனுக்கேபுடவைக்கு (ஆடைக்கு)த் தனியாக நெல்லும் அளிக்கப்பெற்றது. இதே போன்று கோயிலில் பணிசெய்யும் பெண்டுகள் ஐந்து பேர்களுக்கு உணவுக்காகக் குறுணி நெல்லும், அவர்களுக்கே புடவைக்குப் பத்துக் கலம் நெல் லும் அளிக்கப்பெற்றது என்பதை நோக்கும் பொழுது 'புடவை' என்ற சொல் ஆண், பெண் இருவரும் உடுத்திக்கொள்ளும் ஆடையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இதே பொருளில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் 'புடவை' என்ற சொல் வழங்கி வந்திருக்கின் றது. ஆனல் இப்பொழுது புடவை என்ற சொல், பெண்கள் கட்டிக்கொள்ளும் 'சேலேயை' மட்டுமே குறிக்கிறது.

புடவை முதலுக்கு ஆள் ஒன்றுக்கு மூன்று மாதத்துக்கு ஒரு காசுவீதம் ஆண்டொன்றுக்கு நான்கு காசுகள் வழங்கப்பெற்றன. அந்த வகையில் பதினெட்டுப் பேர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு எழுபத்திரண்டு காசுகள் ஆகின்றன. ஒரு காசுக்கு இருபது கலம் நெல்வீதம், எழு பத்திரண்டு காசுகளுக்கு ஆயிரத்து நானூற்று நாற்பது கலம் நெல் அளிக்கப்பெற்றது. இந்த நெல்லுக்கு ஒரு வேலிக்கு நூற்று இருபது கலம் நெல்வீதம், பன்னிரண்டு வேலி நிலத்தைக் கைக்கொண்டு திருப்பதியம் பாடுவார் பதி னெட்டுப் பேர்களும் மூன்று வேளேயும் (மூன்று சந்தியும்) கோயிலுக்கு வந்து திருப்பதியம் விண்ணப்பஞ் செய்து வந்தனர் என்று கல் வெட்டு குறிக்கிறது.

அப்பர் பெருமான் தமது திருவாமாத்தூர்த் திருப்பதிகத்தில்

''பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்(கு)
அண்ணித் தாகும் அமுதினே ஆமாத்தூர்
சண்ணிப் பானேத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னனவன் காண்மினே''

என்று ஆமாத்தூர் இறைவனேப் பாடுகின்ருர். பக்தியின் பெருக்கால் தன்னே வந்தடைந்து திருப்பதியம் பாடிய அடியவர்களுக்குக் கண் ணின் பாவையைப் போன்று விளங்குவான் என்று குறிப்பிடுகின்ருர். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் திருப்பதியம் பாடும் குருடர் களுக்கு, இவ்விறைவனே பார்வை அளிக்கும் பரம்பொருளாக விளங்கினனே என்ற ஐயத்தை இப்பதியம் உண்டாக்குவது நோக்கத்தக்கது.



பழநித் திருவாவினன்குடிக் கோயிலில், திருக்குட நீராட்டு ஆண்டு நினேவுப் பெருவிழாவில், அறங்காவலர் குழுத் தலேவர் திரு. பு. மனேகரன் அவர்கள் தலேமையில், ஆசிரியரின் சிறப்புச் சொற்பொழிவு (28—6—74). உடனிருப்போர்: திரு. எஸ். பி. இராமநாதன் செட்டியார், B.A., திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, B. Sc., ஆகியோர்.

# குறையுண்டோ தமிழ் நெஞ்சே!



**பூந்தமிழன்**

முப்பக்கம் கடலலைகள் முன்னெழுந்து தாலாட்ட
    முறைவேந்தர் ஆண்ட நாடு!
மோதவரும் பகைவருடல் சேதமுற வாள்வீசும்
    முடிவில்லாப் புகழின் நாடு!
எப்பக்கம் பார்த்தாலும் எழிற்பச்சை நிறங்காட்டும்
    இனியவளம் பூண்ட நாடு!
என்றென்றும் மானமதைப் பொன்னென்று தான்பேணி
    இசைவாழ்வு கொண்ட நாடு!
துப்பாக்கித் துரைத்தனத்தால் துளைபோட இயலாத
    தோள்வலிமை மிக்க நாடு!
துஞ்சாமை விழியினிலும் அஞ்சாமை நெஞ்சினிலும்
    துள்ளிநடம் பயிலும் நாடு!
ஒப்பேதும் இல்லாத உயர்நாடு தமிழ்நாடு;
    ஓராயோ இளமை நெஞ்சே!
ஒய்வில்லாத் தொண்டுசெய் உத்தமர்க்கே எந்நாளும்
    உதவுவாய் தமிழ நெஞ்சே!

ஆண்டுபல சென்றாலும் ஆண்டுவரும் வள்ளுவனார்
    யாத்தகுறள்ஆர்க்கும் நாடு!
அழகுதமிழ்க் கன்னியரின் பழகுதமிழ்க் கற்புநெறி
    அஞ்சிலம்பில் ஒலிக்கும் நாடு!
மூண்டபகை அடிபணிய முடிகவிழத் திறைமலிய
    முறுவலிக்கும் மூத்த நாடு!
மூதறிஞர் மொழிந்தமொழி வேதமெனக் கொண்டாடி
    முன்னேறும் எழுச்சி நாடு!
பாண்டியனார் திருமடியில் பைந்தமிழாம் திருக்குழவி
    பண்பாடிச் சிறந்த நாடு!
பல்லவர்தம் கலையாலும் பழஞ்சேரர் சிலையாலும்
    பார்மலைக்கச் செய்த நாடு!
யாண்டுஞ்சோர் வில்லாத நன்னாடு தமிழ்நாடு;
    நாடாயோ இளமை நெஞ்சே!
நாள்தோறும் தொண்டுசெய் நல்லவர்க்கே எந்நாளும்
    நல்குவாய் தமிழ நெஞ்சே!

வற்றாத சீவநதி வளைந்தோடி வயல்வெளியில்
    வரப்புயரச் செய்யும் நாடு!
வானூர்ந்த கோபுரங்கள் வண்டமிழர் கைவண்ணம்
    வையமிசை காட்டும் நாடு!
சற்றேனுங் கலங்காமல் தடந்தோளால் கொடியவரைச்
    சாய்த்திடவே எழுந்த நாடு!
சாதிமத பேதமெனுஞ் சழக்கறுத்துச் சன்மார்க்கம்
    தழைத்தோங்கத் திரண்ட நாடு!
பற்றென்றும் மாறாமல் பனிமொழியாள் தமிழன்னை
    பாதமலர் பணியும் நாடு!
பாசமனை மக்களொடு பல்லோரைக் கூட்டுவித்துப்
    பகிர்ந்துண்ணும் பண்பு நாடு!
கற்றோர்க்குப் பஞ்சமிலாக் கலைநாடு தமிழ்நாடு;
    கருதாயோ இளமை நெஞ்சே!
களிகூரத் தொண்டுசெய் கலைப்புலவோர்க்கு எந்நாளும்
    கண்ணுவாய் தமிழ நெஞ்சே!

வரையாது தமிழ்பாடி வந்தகவி வாணருக்கு
வழங்கியவர் வாழ்ந்த நாடு!
வாள்முனையில் பணிந்தறியா வடவரையும் வென்றிட்ட
வலிவேந்தர் பிறந்த நாடு!
கரையேறி மீன்பாயும் கவின்சோழ வளநாட்டில்
கல்லணையைக் கண்ட நாடு!
காதலுறும் மாதரார் கைப்பிடித்தே இல்லறத்தைக்
காசினியில் வளர்த்த நாடு!
இரந்துண்டு வாழ்வதினும் இறந்திடலே மேலென்ற
எழுத்தறிவும் அறிவர் நாடு!
இல்லையென வருவோர்க்கும் இல்லையெனக் கூறுத
இதயங்கள் நிறைந்த நாடு!
குரவர்க்குக் குறைவில்லாக் குளிர்நாடு தமிழ் நாடு;
குறியாயோ இளமை நெஞ்சே!
குறுகாமல் தொண்டுசெய் குணத்தார்க்கே எந்நாளும்
குறையுண்டோ தமிழ நெஞ்சே!

---



பழநித் திருவாவினன்குடிக் கோயிலில் நிகழ்ந்த திருக்குட நீராட்டு நினைவுப் பெருவிழாவில், திருப்பணி நன்கொடையாளர் திரு. எஸ். பி. இராமநாதன் செட்டியார், B.A., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்
(28—6—74)

# வாதாபி கணபதி

இரா. ஜகத்ரட்சகன்

158596

'வாதாபி கணபதி பஜே' என்ற பாடல் நாம் அடிக்கடி கேட்கும் பாடல். விநாயகர் நமக்கெல்லாம் மிகவும் அறிமுகமான மூர்த்தம். தமிழ்நாடு பூராவும் அநேகமாகத் தெருவுக்கு ஒன்ருக விநாயகர் இடம் பெற்றுள்ளார். ஆனுலும் 'வாதாபி கணபதி', கொஞ்சம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். சாளுக்கியத் தலை நகரான வாதாபியில் இருந்த விநாயகர், கீழைச் சோழநாட்டைச் சேர்ந்த திருச்செங்காட்டங்குடிக் கோயிலில் சென்ற 1300 ஆண்டுகளாக இடம் பெற்றும்கூட 'வாதாபி கணபதி' என்ற பெயரை இன்றளவும் விடாமல் வைத்துக் கொண்டிருக்கிருர். ஏன்! இன்றுகூட, நம்மிடையே எத்தனையோ பேர் தங்கள் சொந்த ஊரை விட்டு, பிற நகரங்களில் குடியேறியும் கூட, தங்களது ஊர்ப் பெயரைத் தமது பெயரோடு சேர்த்து வைத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறேம் அல்லவா! சங்கீதத்துறை மற்றும் அரசியல் துறையில் உள்ளவர்கள், பெரும்பாலும் இப்படி ஊர்ப் பெயரோடு விளிக்கப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறேம். ஏன் இன்னும் சிலரை, வெறும் ஊரின் பெயரைச் சொன்னலே அவர் இன்னர் என்று அடையாளம் கண்டு கொள்கிறேம் அல்லவா? எனவே தமிழ் நாட்டிலே ஊருக்கு ஊர், கோயிலுக்குக் கோயில் உள்ள விநாயகரை விட, வெளிமாநிலத்திலிருந்து வந்து திருச்செங்காட்டங்குடிக் கோயிலில் குடியேறியுள்ள விநாயகர் மிகவும் சிறப்பானவர். கலை அழகில் மாறுபட்டவர். மக்கள் குறை தீர்ப்பதில் கருணை கொண்டவர். வாதாபியிலிருந்து செங்காட்டங்குடிக்கு இவர் வந்த வரலாறு தெரிய வேண்டாமா?

கி.பி. ஏழாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு மகேந்திர வர்மனுடைய ஆட்சி மிகச் சிறப்பாக நடந்தது. இவனுடைய ஆட்சியிலே, சிற்பம் ஓவியம் இசை நாடகம் முதலிய கவின் கலைகள் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தன. இவன் கட்டிய குகைக் கோயில்களும், இவன் பெற்றிருந்த விருதுப் பெயர்களும், இவனை நூலாசிரியனுகவும், வடமொழிப் புலவனுகவும், மிகுந்த சமய ஈடுபாடு கொண்டவனுகவும் நமக்குக் காட்டுகிறது. இவனது காலத்திலே வாழ்ந்திருந்தவர் தான் சைவ சமயக் குரவர்களில் மூத்தவரான அப்பர் பெருமான்! குணபரன், விசித்திரசித்தன், அலுப்தகாமன், சத்துரு மல்லன் என்றெல்லாம் பெயரிட்டு அழைக்கப்பட்ட இவன் காலத்தில், சித்தன்ன வாசல் ஓவியமும், இவன் கட்டிய குகைக் கோயில்களும் மிகவும் பிரசித்தமானவை. அப்படிக் கட்டிய குகைக்கோயில்களுக்குக் கல், மரம், உலோகம், சுண்ணும்பு இவைகள் இல்லாமல் மும்மூர்த்திகளுக்குக் கட்டிய கோயில் இது என்று வடமொழியில் கல்வெட்டுப் பொறித்து வைத்திருக்கிருன். என்றென்றுமே அழியாத அழிக்கமுடியாத இறைவனுக்கு, அழியக்கூடிய பொருள்களைத் தவிர்த்து, இவன் கட்டிய குகைக் கோயில்கள் இன்றும் இவனது கலைப்பணிக்குச் சான்ருக நிற்கின்றன.

இவனுக்குப் பின்னல் இவனது மகன் நரசிம்மவர்மன் ஆட்சியேறினுன். இவனையே மாமல்லன் என்று சரித்திரம் கூறுகிறது. இவன் கி.பி. 630-668 வரை ஆட்சி செலுத்தினுன். மாமல்லபுரத்தை உருவாக்கியவனும் இவனே. மகேந்திர வர்மனும் அவனது மகன் நரசிம்ம வர்மனும் ஆட்சி புரிந்து கொண்டிருந்த இக்காலத்தில் சோழநாட்டுத் திருச்செங்காட்டங்குடியிலிருந்து பரஞ்சோதி என்ற இளைஞன் காஞ்சிக்கு வருகிருன். மகேந்திர வர்மன் ஆட்சியில் பல்லவர் படையில் சேர்ந்து, பின்னர் நரசிம்ம வர்மன் காலத்தில் படைத்தலைவனுக உயர்ந்து பணிபுரிகின்ருன்.

வடக்கே கோதாவரிக்கும், கிருஷ்ணையாற்றுக்கும் இடையில் ஆண்டுவந்த கீழைச் சாளுக்கியரோடு ஓயாமல் போர் நடந்துகொண்டிருந்தது. சாளுக்கியப் புலிகேசி கடல்போன்ற பெரும் படையுடன் காஞ்சிமீது படையெடுத்தபோது, பெரும் சினம்கொண்டு நரசிம்மவர்மன் அப்படைகளை எதிர்த்து விரட்டியதோடு மட்டுமல்லாமல், சேனுதிபதி பரஞ்சோதி தலைமையில் பெரும்படையை அனுப்பி, புலிகேசியை வாதாபி வரை துரத்திச் சென்று, வாதாபியைக் கைப்பற்றி அவ்வூரையே சூறையாடி வெற்றி வாகை சூடினுன்.

கி.பி. 642-ல் நடந்த இவ்வாதாபிப் போர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. பல்லவப் படைகள் அங்குள்ள பொருள்களையும், கலைப் பொருள்களையும் கைப்பற்றின. படைகள் பல பொருள்களை விரும்பிக் கவர்ந்து கொண்டு வந்தபோது, படைத்தலைவர் பரஞ்சோதியோ, வாதாபிக் கோட்டை வாயிலில் உள்ள கணபதி சிலையை மிகவும் விரும்பி அதைக் காஞ்சிக்குக் கொண்டு வந்தார். பின்னர்ப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுத் தமது சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடிக்குத் திரும்பியபோது, இந்த வாதாபி கணபதியைப் பல்லவ மன்னனிட

மிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டு வந்து, திருச்செங்காட்டங் குடிக்கோயிலில் பிரதிட்டை செய்து வணங்கினன்.

நரசிம்ம பல்லவன், வாதாபியைக் கொண்ட வெற்றிச் சின்னமாக விளங்கும் சரித்திரப் பிரசித்திபெற்ற இக்கணபதி சிலை, இன்னும் இக் கோயிலில் மக்களால் மிகவும் பக்தியுடனும் பெருமையுடனும் வணங்கப் பெறுகிறது. சாளுக்கிய நாட்டுக் கணபதி, பரஞ்சோதியாரது பக்தியின் காரணமாகக் கீழ்ச் சோழநாட்டில் வந்து கோயில் கொண்டுள்ளார். அவர் படையேற்று நடத்திய தீரமிகு செயலைச் சேக்கிழார் பெருமான்,

''மன்னவர்க்குத் தண்டு போய்
வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரை உகைத்துப்
பன் மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன் முன் கொணர்ந்தார்''

என்று பெரிய புராணத்திலே குறிப்பிடுகிறார். இப்படி வடபுலத்து வாதாபியைத் துகளாகத் துளைத்த இப்பரஞ்சோதியின் பணி இத்துடன் முடிவுறவில்லை. மனைவி வெண்காட்டு நங்கை, மகன் சீராளன், தாதி சந்தனநங்கை ஆகியோருடன், செங்காட்டங்குடியில் உறையும் கணபதீச்சுரத்தானை வணங்கிச் சிவனடியார்களைத் தினமும் தேடி அழைத்து வந்து அமுதளித்த பிறகு தான் உண்ணுவது என்ற நியதியுடன் வாழ்ந்து வருகின்றார். சிவனடியார்கள் முன் தன்னை மிகவும் சிறியவராய் எண்ணிச் சீலத்துடன் நடந்து கொண்டதால், இவர் 'சிறுத்தொண்டர்' என அழைக்கப்பெற்றார். இதையே,

''மேதகையார் அவர் முன்பு
மிகச் சிறியராய் அடைந்தார்
ஆதலினல் சிறுத் தொண்டர்
எனத் திகழ்ந்தார்''

என்று சேக்கிழார் பெருமான் போற்றுகிறார். இவரது பக்தியின் திண்மையைத் தாமே நுகரவும், இவரது பணியை உலகுக்கு உணர்த்தவும் இறைவனே ஒருநாள் செங்காட்டங்குடிக்கு வருகிறான். வயிரவர் கோலத்திலே, கஞ்சுகம், வலக்கரத்திலே தமருகம், இடக்கரத்திலே கபாலம், தோளில் மூவிலைச் சூலம், காதிலே மணிக்குழைச் சங்கு, தலையிலே நீண்ட விரிசடை, மேனியெல்லாம் திருநீறு அணிந்து, உத்தராபதியார் என்ற பெயருடன், செங்காட்டங்குடியில் சிவனடியார்களுக்கு எந்நாளும் சோறு அளிக்கும் சிறுத்தொண்டர் மனையிலே வந்து நிற்கின்றார். சிறுத்தொண்டரை ஆட்கொள்ள வந்த இறைவனின் இந்த வித்தக வேடத்தைச் சேக்கிழார் அழகுறச் சித்திரித்துக் காட்டுகின்றார்.

''அயன் கபாலம் தரித்த
இடத்திருக்கையால் அணைந்த
வயங் கொளி மூவிலைச் சூலம்
மணித் திருத்தோள் மிசைப்பொலிய''

''பொருள் மொழியும் பெருகன்பு
தழைத் தோங்கிப் புவியேந்தத்
தெருள் பொழிவண் தமிழ் நாட்டுச்
செங்காட்டங்குடி சேர்ந்தார்.''

ஆம்! கயிலை மலையிலிருந்து இறைவன் தமிழ் நாட்டுச் செங்காட்டங்குடி வந்தான் என அழுத்திச் சொல்கிறார் சேக்கிழார். இப்படி வேடமிட்டுக் கொண்டு இறைவன் வந்த நேரத்தில் சிறுத்தொண்டர் அவரது இல்லத்தில் இல்லை. அன்றைய பொழுதுக்கு யாராவது அடியார் உணவு உண்ண அகப்பட மாட்டாரா என, அவர் வெளியே தேடிச் சென்றிருந்தார். இலவசமாக உண்ணுவதற்கு ஆளைத் தேடிப் பிடிக்க வேண்டிய காலம் அது.

சிறுத்தொண்டரின் மனைவி வெண்காட்டு நங்கை, உத்தராபதியாரை உபசரிக்க உள்ளே அழைக்கிறார். பெண்கள் தனித்திருக்கும் வீட்டிற்குத் தாம் வருவதற்கில்லை எனக் கூறி, அவ்வூரின் கோயில் உள்ள ஆத்திமரத்தடியில் தம்மை வந்து காணுமாறு சொல்லிச் செல்லுகிறார். அவ்வாறே சிறுத்தொண்டரும் ஆத்தி மரத்தினடியிலே அமர்ந்திருந்த உத்தராபதியாரைக் கண்டு வணங்கி, தமது இல்லத்திற்கு உணவு உண்ண வருமாறு வேண்டுகிறார். ஆனல் வயிரவரோ அவ்வளவு எளிதில் ஒப்புக் கொள்ளவில்லை. அவருக்குப் பிடித்தமான 'மெனு' பட்டியல் ஒன்று தருகிறார். அதன்படி அங்கம் பழுதில்லாமல், குடிக்குத் தலைமகனைக உள்ள பிள்ளையைத் தாய் பிடித்திருக்கத் தந்தை அறுத்துக் கறியாகச் சமைத்து அளித்தால், தாம் உண்ண வருவதாகச் சொல்கிறார். சிறுத்தொண்டரும் சிறு சலனம்கூட இல்லாது ஒப்புதல் அளிக்கிறார். அவ்வாறே தனது ஒரே மகன் சீராளனை வாளால் வெட்டிக் கறியாகச் சமைத்துப் படைக்கிறார். சாப்பிட உட்கார்ந்த உத்தராபதியார் உடன் இருந்து உண்ண, அடியார் யாரையாவது அழைக்கச் சொல்கிறார். யாரும் இல்லாததால் உமது மகனையாவது கூப்பிடும் என்கிறார். வெளியே சென்று 'மைந்தா வருவாய்' எனச் சிறுத்தொண்டரும், ''செய்ய மணியே! சீராளா, சிவனர் உடன் உண்ண அழைக்கிறார் வாராய்'' என வெண்காட்டு நங்கையும் அழைக்கிறார். பையன் சீராளன் பள்ளியிலிருந்து வருவது போல ஓடிவருகின்றான். தாவி அணைத்த பெற்றோர், தங்கள் மைந்தனோடு உள்ளே வருகிறார்கள். பரதேசியைக் காணாது திகைக்கிறார்கள். இறைவன் உமையோடு தன் உருக்காட்டி அடியாரின் மெய்யன்பை உலகுக்கு உணர்த்திச் சிறுத்தொண்டரை அவரது குடும்பத்தோடு கயிலைக்கு அழைத்துச் சென்று விடுகிறார். சிறுத்தொண்டரின் இந்தச் செயற்கரிய செயலை இன்னும் சைவ உலகம் போற்றுகிறது. சிறுத்தொண்டரோ இறைபணியன்றி எனக்கு யாதும் அரியதன்று, என்ற செந்நெறியிலே வாழ்ந்தவர். பட்டினத்தடிகளும் கவிகாளமேகமும் இந்த அரிய செயலைப் பாராட்டியுள்ளார்கள்.

இந்த அன்பின் வென்ற சிறுத்தொண்டர் வாழ்ந்த 'செந்தமிழோர்கள் பரவி ஏத்தும் சீர் கொள் செங்காட்டங்குடி' என்ற தலம், தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் ரயில் நிலையத்திற்குக்

கிழக்கே ஏழாவது மைலில் உள்ளது. இந்த ஊர் செல்லத் திருப்புகலூர் என்னுமிடத்தில் இறங்கித் தெற்கே ஒரு மைல் நடந்து திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் 'காமனும் கண்டுகாமுறும்' வண்ணம் வடிவழகு கொப்ப ளிக்க நிற்கும் சௌரிராஜப்பெருமாளைத் தரி சித்துவிட்டு, கிழக்கே ஒரு மைல் நடந்தால் இவ் வூர் வந்தடையலாம்.

ஏறக்குறைய 400 அடி நீளமுள்ள புரா தனம் மிக்க கோயிலில் இராஜகோபுரம் புதி தாகக் கட்டப்பட்டு வருகிறது. உள்ளே நுழைந் ததும் தெற்கு நோக்கிய சந்நிதியில் அம்பிகை 'வாய்த்த திருக்குழலி' என்ற பெயருடன் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். 'முருகுவிரி நறுமலர் மெய்த்தவத்தோர் துணையை, வாய்த்த திருகு குழல் உமை நங்கை பங்கன் தன்னைச் செங்காட்டங்குடியதனிற் கண்டேன் நானே' என அப்பர் பெருமான் போற்றித் துதிக்கிறார். உட்பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் சிறுத் தொண்டர், அவர்தம் மனைவி, மகன் சீராளன் ஆகியோரை நல்ல சிலைவடிவில் காணலாம். எதிரில் உத்தராபதியார் தனிச்சந்நிதியிலே, கையிலே கபாலமேந்தி நிற்கும் கோலத்தில் காணலாம். கருவறையிலே இத்தலத்து மூர்த்தி யான கணபதீச்சுரரை லிங்க வடிவிலே கண்டு தொழலாம். இவரையே சம்பந்தரும், அப்ப ரும் பாடிப் பரவியுள்ளார்கள்.


தெற்குப் பிராகாரத்தில், சிறுத்தொண்ட ரால் பிரதிட்டை செய்யப்பட்ட வாதாபி கணபதி, தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். கைகளைத் தொடைகளில் இருத்தி, கால்களை உட்பக்கமாக மடித்து, அமர்ந்த கோலத்தில் இடப்பக்கத் துதிக்கைச் சுழியுடன் காணப்படும் இச்சிறிய விநாயகர், நல்ல கலை அழகுடன் காணப்படுகிறார். வாதாபி கொண்ட மாமல்ல பல்லவனுடைய வெற்றிச் சின்னமாக விளங்கும் இவரைத் தரிசிக்கும்போது, அந்தப் பழைய சரித்திர நிகழ்ச்சிகள் நினைவுக்கு வரும். இவரை மக்கள் மிகவும் வரப்பிரசாதியாகக் கருதி வழி படுகின்றனர். இன்றைய மைசூர் மன்னர் இக் கணபதியிடம் மிகவும் ஈடுபாடு கொண்டு அடிக் கடி இக்கோயிலுக்கு விசயம் செய்து இவ்விநாய கரை வழிபடுகிறார்.

இக்கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் 'நவ தாண்டவர்கள்' என்ற அழகான கலை வடிவங் கள் ஒரு மண்டபத்தில் வரிசையாக உள்ளன. இக்கோயிலின் சிறப்பே இந்த அழகுச் சிலைகள் தான். கஜசம்மாரர், ஊர்த்துவதாண்டவர், காலசம்மாரர், திரிபுரசம்மாரர் என்ற பல அற் புதமான கலைப்படைப்புகள் உள்ளன. இவை களை மிகவும் சாவதானமாக அமர்ந்து அநு பவிக்க வேண்டும். சிறந்த கலாரசிகரான திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் இந்த வடிவங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு இவை களைத் தமிழ்நாட்டுக் கலை உலகிற்கு அறிமுகப் படுத்தினார்கள். இந்த அற்புதமான கலைவடி வங்களை இக்கோயிலின் நிர்வாகிகள் எண்ணைக் காப்பிட்டு நன்கு பராமரித்து வருவது பாராட் டுக்குரியது.

இத்தலத்தில் சிறப்பான திருவிழா, சித் திரை மாதப் பரணியில் நடைபெறும் ''அமுது படையல்'' விழா. உத்தரபதியார் ஆத்திமரத் தடியில் வீற்றிருக்கும் கோலமும், பிள்ளைக்கறி உண்ணச் சிறுத்தொண்டர் மனைக்குப் புறப்படும் கோலமும் கண்டு மகிழ, ஏராளமான பக்தர்கள் கூடுவார்கள். இக்கோயிலில் ஏறக்குறைய 32 கல்வெட்டுக்கள் உள்ளன. இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன், குலோத்துங் கன் காலத்துக் கல்வெட்டுக்கள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிபந்தங்களைப் பற்றிக் குறிப்பிடு கின்றன. முதல் இராசேந்திரன் அவனது 3-ஆம் ஆட்சியாண்டில் சீராள தேவர் புறப்பாட் டிற்காக நிலம் வழங்கியுள்ளான். கோயிலுக்குப் பெரும்பகுதி திருப்பணி செய்துள்ளவன் தென் னவன் மூவேந்த வேளான் எனத் தெரிகிறது. இன்று நடைபெறும் இராசகோபுரத் திருப் பணிக்கு அன்பர்கள் உதவ நல்ல வாய்ப்பு இருக்கிறது.

வாதாபி கணபதியைக் கண்டு வணங்கவும், நவதாண்டவச் சிற்பங்களைக் கண்டு மகிழவும், சித்திரை மாத அமுது படையல் விழாவன்று இவ்வூர் சென்று அன்பர்கள் வழிபடலாம்.

''செங்காட்டங்குடி மேய
சிறுத் தொண்டன் பணி செய்ய
வெங்காட்டுள் அனலேந்தி
விளையாடும் பெருமானே!''



NEITHER BIRDS NOR WINDS ARE FASTER

# ABT Parcel Service

226, DR. NANJAPPA ROAD,

Post Box No. 1414,

**COIMBATORE-641018.**

Phone : 23366 (3 lines)

Telex : 042—262
ABT—CB

---

**CONTROLLING OFFICES**

| | Phone | Telex |
|---|---|---|
| Bangalore | 40260 | 043—285 ABT BG |
| Coimbatore | 26611 | 042—262 ABT CB |
| Madras | 432905<br>432906 | 041—570 ABT MS |
| Madurai | 23736 | 044—262 ABT NA |
| Salem | 7699 | 040—207 ABT SI |
| Trichy | 4956 | 045—207 ABT TR |

**AGENTS BOOKING AND DELIVERY GODOWNS**

213 Centres in Tamil Nadu

6 Centres in Bangalore City

8 Centres in Kerala and
3 Centres in Pondichery

**With associate arrangements we carry goods all over India.**

# பெரியாழ்வார் திருப் பல்லாண்டு



கே. இ. பார்த்த சாரதி. பி. ஏ.,

திருப்பல்லாண்டு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாவது பிரபந்தம், பன்னிரண்டு பாசுரங்களையே கொண்டது. இதைப் பாடியவர் பெரியாழ்வார். இவர் இயற்பெயர் விட்டுசித்தர். இறைவனுக்குத் திருப்பல்லாண்டு பாடின காரணத்தினுல், இவருக்குப் 'பெரியாழ்வார்' என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

ஒவ்வொரு பாட்டிலும் 'பல்லாண்டு' 'பல்லாண்டு' என்று சொல்லி மங்களாசாசனம் செய்திருப்பதால், இப்பிரபந்தத்திற்குப் பல்லாண்டு என்ற பெயர் கொடுக்கப்பட்டது. 'திரு' மேன்மையை உணர்த்தும். 'பல்லாண்டு' என்று தொடங்கப்படுவதால், முதற் குறிப்பு என்னும் இலக்கணத்தால் 'பல்லாண்டு' என்ற பெயர் உண்டாயிற்று எனவும் கூறலாம். 'பல்லாண்டு' என்பது 'நீடுழி வாழ்க' என்னும் வாழ்த்து. இதுவே மங்களாசாசனம் எனப்படும். இறைவனுக்கு மங்களங்களைக் கோருவதே இதன் நோக்கம்.

மணவாள மாமுனிகள், ஆழ்வாரின் மங்களாசாசனத்தின் சிறப்பைப் பற்றிப் பின்வருமாறு உபதேச ரத்தினமாலையில் கூறியுள்ளார்.

''மங்களா சாசனத்தின் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்களார் வத்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றுன்
பெரியாழ்வார் என்னும் பெயர்''

வல்லப தேவன் என்ற பாண்டிய அரசனின் அவையில், விட்டுசித்தர் வேதங்களை ஓதி, வேதங்களில் கூறியுள்ள பரம்பொருளைப் பற்றி விளக்கி, கம்பத்தில் கட்டுண்ட பொற்கிழியைக் கிழித்தார். அவ்வரசன் விட்டுசித்தருக்குப் 'பட்டர்பிரான்' என்னும் பட்டம் வழங்கி, பட்டத்து யானையின் மீது அவரை நகர் உலா வரச் செய்தான். அப்போது திடீரென்று ஆயிரம் சூரியர்கள் ஒரே காலத்தில் கூடியிருப்பதுபோல் ஒரு அற்புதச் சோதி சுடர் விட்டுத் தோன்றியது. சொல்ல முடியாத அழகோடும், நினைக்க முடியாத சக்தியோடும், அருளோடும், பிரமன் இந்திரன் முதலானவர்கள் சூழ, சங்கு சக்கரம் முதலான ஆயுதங்களோடு, தேவியுடன் கருடன்மீது இறைவன் காட்சி அளித்தான். ஆழ்வார் அந்த ஒப்பற்ற சோதியைத் தரிசித்துத் திடுக்குற்றுர்.

''வைகுந்தத்தில் சித்தரும், முத்தரும் சேவிக்க விளங்கும் இப்பரம் பொருள், இவ்விருள் தருமா ஞாலத்தில் பலரும் காண வெளிப் போந்திருக்கின்றதே! இப்பொருளின் எழில் முதலியவற்றிற்கு என்ன கெடுதி வருமோ!'' என்னும் பயம் அதிகமாக ஏற்பட, தாம் யானையின் கழுத்திலுள்ள மணியைத் தாளமாகக் கொண்டு, ''இப்பொருளின் எழில் முதலியவற்றிற்கு ஒரு குறையும் வாராதிருக்க வேண்டும்'' என்று அன்பின் மிகுதியால் பல்லாண்டு பாடி வாழ்த்துவராயினர். அவர் பாடிய பாக்களில் இரண்டு முதன்மையாகக் கருதப்படுகின்றன. இதுவே பிரபந்தத்திற்கு முகவுரையாகும். இதைப் பல்லவிபோல் வைத்துக் கொண்டு பாடுவதுண்டு. இவ்விரண்டு பாட்டுக்களில் ஆழ்வார் தனியாக மங்களாசாசனம் பண்ணுகிருர். ''மல்லாண்ட திண்தோள் மணிவண்ணு'' என்று அழைத்து, அவனுடைய உள்ளத்தைக் கவரும் அழகிற்குத் திருக்காப்பிடுகிருர். பின்னர் இறைவன் பிராட்டியின் சேர்த்தி நித்தியமாகச் செல்ல வேண்டுமென்று மங்களாசாசனம் செய்கிருர்.

மங்களாசாசனம் செய்தல் என்பது, வைணவத்தில் மட்டுமின்றிச் சைவத்திலும் உண்டு. தில்லையில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் மழை பெய்தமையால் திருத்தேர் சேற்றில் அழுந்தி ஓடாது நின்றபோது, அடியார் குழுவில் நின்ற சேந்தனுர் ''மன்னுகதில்லை வளர்க நம்பத்தர்கள்'' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினுர். வடம் பிடிக்காமலே தேர் நிலைக்கு வந்து சேர்ந்தது என்பது வரலாறு.

''பாடுவார், பணிவார், பல்லாண்டிசை கூறு பத்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே'' என்பதன் மூலமாகத் திருநாவுக்கரசர் பல்லாண்டு பாடும் வழக்கம் உண்டென்பதைத் தெரிவித்துள்ளார்.

இறைவனை வாழ்த்திப் பல்லாண்டு பாடுவது அறியாமை அன்றோ என்றுல், அது பக்திப் பரவசத்தினுல் உண்டாகும் நிலை. முற்றுணர்வும், பேராற்றலும், யாவற்றையும் காக்கும் கருணையும், இறைவனுக்கு உண்டு என்ற எண்ணம் உண்டாவதற்கு முன்பு, தன் கண்முன்னே தோற்றிய பேரழகு மிக்க திருக்கோலத்தைக் கண்டு, ''காலத்திற்கு அப்பாற்பட்ட இடத்திலே வாழும் பொருள், காலத்தின் ஆட்சிக்குட்பட்ட இடத்துக்கு வந்து ஊனக் கண்ணுக்குப் புலப்படும் பொருளாகிறதே! இப்பொருளுக்கு என்ன தீங்கு வருமோ?'' என்ற பயமும் உண்டாக, இந்தப் பேரழகுக்குத் தீங்குவராமல் இது நிலைத்து நிற்க வேண்டுமென்று ஆழ்வார்

மங்களாசாசனம் செய்யத் தொடங்கினர். ஆகையினல், இறைவனுக்கு மங்களாசாசனம் பண்ணுவது சாலப் பொருந்துமென்று, பெரியோர்களினல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதுவும் தவிர, பெரியாழ்வார் அரங்கநாதருக்குத் தமது அருமைத் திருமகளாகிய ஆண்டாளை மணஞ் செய்து கொடுத்த மாமனராகையினல், மருமகனுக்கு மங்களாசாசனம் செய்வதற்குத் தகுதி உடையவரானர். மற்றை ஆழ்வார்களுக்கும் இவர்க்கும் நெடுவாசியுண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கைகளை எம்பெருமானலே பெற நினைப்பார்கள். இவர், அங்ஙனமன்றி எம்பெருமானது வாழ்வையே தமக்குப் பரம புருடார்த்தமாக நினைத்தார். அன்றியும் அவர்கள் பெருமானைப் புகலிடமாகக் கொண்டு தம்தம் பய நிவிருத்தியைச் செய்துகொள்வார்கள். இவரோ, அந்நிலை மாறி, 'பெருமானுக்கு என்ன வருகிறதோ?' என்று பயப்பட்டு, அந்தப் பய நிவிருத்தியிலே முயற்சி செய்யலானர்.

உலகங்களை எல்லாம் காப்பாற்றும் இறைவனுக்குப் பேராற்றல் மட்டும் போதாது. பக்தியாகிய காதலைத் தூண்டுவதற்குரிய பேரழகும் வேண்டுமென்பதைக் காண்பிக்க, இறைவனை 'மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!' என்று கூப்பிடுகிருர். பருமை அழகு-வாழ்ந்த தோள்களை உடையவன் ; நீல ரத்தினத்தைப் போல நீல நிறத்தை உடையவன். அந்த உள்ளத்தைக் கவரும் அழகு உலகத்தையெல்லாம் காப்பாற்றும் சக்தியாகும். ''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூருயிரம்'' என்பது, கால எல்லையின்மையைக் குறிக்கும். எண்ணமுடியாத பிரம்மாக்களுடைய கணக்கில்லாத வருடங்கள் ; அதாவது காலத் தத்துவம் உள்ளவரையில், இறைவனிடம் இருந்து அடையும் பேரின்பத்துக்கு எல்லை யில்லை. இம்மாதிரி அவனுடன் சேர்ந்திருந்த இன்பம் நுகரும் காலத்துக்கு முடிவென்பதே யில்லை.

'பல்லாண்டு' 'பல்லாண்டு' என்று சொன்ன ஆழ்வாருக்கு, மல்லர்களைக் கொன்று வெற்றி பெற்ற அழகிய பலமுள்ள தோள்களைக் கண்டும் பயம் அடங்கவில்லை. மன நிறைவும் ஏற்படவில்லை. தாகத்தினல் வருந்துபவன் 'தண்ணீர், தண்ணீர்' என்று கூவுவதுபோல, ஆழ்வார் தம்முடைய பயம் அடங்கும் வரையிலும் பல்லாண்டு பல்லாண்டு என்று கூவினர். அவன் சிவந்த திருவடியின் அழகுக்குக் குறைவற்ற பாதுகாப்பு உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கிருர். அடியார்கள் இறங்கும் துறை திருவடி. கோரின காப்பு, திருவடிகளுக்காக இருந்தாலும், இறைவனின் திருமேனிக்கே யாகும். 'திருக்காப்பு' என்பது குறையற்ற பாதுகாவல். உண்டான அமங்கலங்கள் போவதற்கும், இல்லாத மங்கலங்கள் உண்டாகைக்கும் ஆகப் பண்ணின காவல் இது.

இரண்டாவது பாட்டில் இறைவனுடன் பிரிவில்லாமல் இருக்கும் தொடர்பு எந்நாளும் நித்தியமாய்ச் செல்ல வேண்டும். அழகே உருவெடுத்த வலத் திருமார்பில் எப்பொழுதும் இருக்கின்ற திருமகள் (இலக்குமி) நித்தியமாய்க் கூடி இருக்க வேண்டும்; இறைவனது சரீரத்தைச் சூழும் ஒளியையுடைய சக்கரம் (திருவாழி), நிலைபெருகச் சேர்ந்திருக்க வேண்டும் என்றும், போரிலே புகுந்து முழங்குகின்ற அந்த அழகிய சங்கம் நித்தியமாய் இருக்கவேண்டுமென்றும் பல்லாண்டு பாடுகிருர். இவ்வுலகத்தில் வீற்றிருக்கும் திருக்கோல அழகுக்கும், பரமபதத்தில் இலக்குமியோடும், படைகளுடனும் திகழும் அழகுக்கும் பல்லாண்டு பாடுகிருர். ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா!'' என்ருர் நம்மாழ்வார். மணத்தினல் மலருக்கும், ஒளியினல் மாணிக்கத்துக்கும் அழகு ஏற்படுவதுபோல, தேவியின் அழகினல் இறைவனுக்கு யாதொரு தீங்கும் நேராதென்றும், அவனுடைய அழகுக்கு மேன்மையே ஏற்படுமென்று எண்ணி, இருவர்களின் சேர்த்திக்குப் பல்லாண்டு பாடுகிருர்.

பரம்பொருளுடன் தனித்திருப்பதைக் காட்டிலும், அடியார்கள் கூட்டத்துடனிருந்து இன்பம் அடைவது சிறந்ததாகும். அதனல் 'அடியேனேடும்' என்று சொல்லாமல் 'அடியோமோடும்' என்று கூறியருளியிருக்கின்ருர். ''ஒழிவில் காலமெல்லாம் உடனய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'' என்பது, நம்மாழ்வாரின் வாக்கு. அவரும் அடியார்களுடன் கூடியிருப்பதையே விரும்பினர். இறைவனுடன் கூடியிருப்பது பேரின்பம். அவனை விட்டுப் பிரிவது அளவற்ற துக்கமாகும். இதைக் கொண்டே பிரிவில்லாத சேர்த்திக்கு ஆழ்வார் ஆசைப்பட்டார்.

சக்கரமும் சங்கும் வைணவத்தில் ஆழ்வார்களாகவே கருதப்படுகின்றன. பகவானின் அழகுக்கேற்ற அணிகளாகவும், சிறந்த காவலாகவும் அமைந்திருப்பதனல், அவைகளுக்குப் பல்லாண்டிட்டுப் பாடுகிருர். போர்க்களத்தில் அரிய பெரிய செயல்களைச் செய்து பகவானுக்கு வெற்றிகளைக் கொடுத்ததனல், பாஞ்சசன்னியம் அழகுடையதாயிற்று.

''கூரார் ஆழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒரு நாள் விண்ணும் மண்ணும் மகிழவே'' என்ருர் திருவாய்மொழியில் நம்மாழ்வார். இப்பேறு பெரியாழ்வாருக்கு எதிர்பாராமலே கிடைத்தது. ஆழ்வாரைக் கொண்டே, தனக்கு மங்களாசாசனம் செய்து கொள்வதற்காகவே, இறைவன் இங்ஙனம் அருமையான காட்சியளித்தானே என்ற ஐயம், அடியார்களின் மனத்தில் எழும்புவது மிகையாகாது.

ஆவிக்கு அமுதமாய், மனத்தகத்தே பாலும் அமுதும் ஒத்து நின்று, அண்ணித்து எவரும் பெருத அறிவு தந்து, அடியார்க்கு அருள் புரியும் பெருமானை உள்ளமுருகிப் பல்லாண்டு கூறி வாழ்த்தும் இன்னிசைத் திருப்பதிகமாக விளங்குவது இத் திருப்பல்லாண்டு. இதில், மேல் குறித்த இரண்டு பாட்டுக்கள் திருமந்திரத்தின் பொருள்களைக் கொண்டுள்ளன. பல்லாண்டு பாடின திருவடிகளையடைந்தால், நாமும் மண்ணுலகில் மயல் தீர்ந்து பல்லாண்டு பாடத் தட்டில்லை. ''பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டு'' என்று பயன் கூறும் பாடலுடன் பிரபந்தம் முடிகிறது. மணவாள மாமுனிகள்''ஆழ்வார் தம்மில் பெரியாழ்வாருக்கு ஒப்பு ஒருவருண்டோ, அவர் செய்கலையில் திருப்பல்லாண்டுக்கு ஒப்பு ஓர் கலைதான் உண்டோ?'' என்றுவியப்படைந்தார்.

# மதுரை அன்றும் இன்றும்

ம.அ.முருகேசன், பி.ஏ.பி.எல்.,

''திருமகட்கு ஒரு தாமரைக் கூடமே; திருமால்
மருமகட்கு வெண்தாமரை மாடமே; ஞானம்
தருமகட்கு யோகத்தனிப் பீடமே; தரையாம்
பெருமகட்கு அணி திலகமே ஆவது, இப்பேரூர்''

என்று மதுரையின் சிறப்பைப் பரஞ்சோதியார் பாடுகின்றார். இத்துணைச் சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டது மதுரை. தண்ணார் தமிழ் புரக்கும் தண் பாண்டி நாட்டின் தலை நகராயிருந்தது மதுரை. இதன் வரலாறு தமிழின் வரலாறு; சமயத்தின் வரலாறும் கூட. இறைவனும் அகத்தியனும் பயின்ற தமிழை மதுரை வளர்த்தது என்பது வரலாற்று உண்மை. 'தொன் மதுரையைக்' கடல் கொண்டது என்றும், அதன் பின் 'தென் மதுரை' அமைந்து வளர்ந்தது என்றும், இறையனார் களவியல் உரையும், சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையும் பேசுகின்றன.

மதுரையைத் தலைநகராகக் கொண்டு பண்டைய நாளில் பாண்டியர் ஆண்டனர். ''பண்டையர்'' என்ற சொல்லின் அடியிலிருந்து 'பாண்டியர்' என்பது பிறந்தது. ஆனால் மதுரை என்ற சொல் எப்படித் தோன்றியது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் விளக்க முன்வரவில்லை. மருத நிலங்களால் சூழப்பட்ட ஊர் மதுரை என்று சொல்வாரும் உளர். இறைவன் அமுத கிரணங்களைத்தெளித்துப் புனிதப்படுத்தியதால், இவ்வூர் மதுரை என்று வழங்கப்படுகிறது என்பது புராணங் கூறும் செய்தி. மதுரம் செறிந்து நிலைத்த ஊர் மதுரை ஆகும். மது என்ற சொல் இனிமையையும் தமிழையும் குறிக்கிறது. தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபில் வந்த ஊர் மதுரையாகும். மதுரையும் தமிழும் பிரிக்க ஒண்ணாதன. ''உயர் மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ! அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ?'' என்ற திருக்கோவையாரின் வரிகள், மதுரை மாநகரில் தமிழ் ஆயப்பட்டது என்று தெரிவிக்கிறது. முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிஞர்களுக்கு, மதுரையில் என்றுமே தட்டில்லை. பத்துப் பாட்டிற்கு முந்திய நூலாகக் கருதப்படுகின்ற செங்கோன் தரைச் செலவு என்ற நூலில், நிலந்தரு திருவிற் பாண்டியனின் தலைநகர் மதுரை என்றும், அங்கு தமிழ்க் கழகம் நிறுவி இருந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. ''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்'' என்பது அப்பர் தேவாரம். கடவுளர்களே தமிழின்பால் உள்ள வேட்கையால் மதுரைக்கு எழுந்தருளினார்கள் என்று, ''கூட்டுண எழுந்த வேட்கையால் எனில் இக்கொழி தமிழ்ப் பெருமையை யார் அறிவார்'' என்று குமரகுருபர அடிகள் பாடுகிறார். திருவிளையாடற் புராணம், தமிழ்ச் சங்கம் மதுரையில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது. எனவே, மதுரையும், தமிழும் இணைந்த ஒன்று என்பது, ஐயத்திற்கு அப்பாற்பட்ட உறுதி.

மதுரைக்குப் பல பெயர்கள் இலக்கியங்களிலே காணப்படுகின்றன. விழாமலிமூதூர், கம்பலைமூதூர், ஆலவாயில், ஆலவாய், கடம்பவனம், கன்னிபுரம், கூடல், நான்மாடக்கூடல், பூலோக சிவலோகம், சிவபுரம், சீவன்முத்திபுரம் என்பது அவற்றுள் சில. அவற்றுள் ஆலவாய் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. அது புராணச் செய்தி. ஆயினும், 'ஆலக்கோயில்' என்று நாவுக்கரசர் தேவாரம் குறிக்கிறது. ஆலமரத்து நிழலில் இறைவன் எழுந்தருளியதால் 'ஆலக்கோயில்' என்று வழங்கப்பட்டு அதுவே 'ஆலவாய்' ஆயிற்றோ என்று கருதவும் இடமிருக்கிறது. 'மாடம் மலி மறுகிற் கூடல்' என்பது நெடுநல்வாடை. 'மாடமலி மறுகிற் கூடலாங்கண்' என்பது அகநானூறு. 'நான்மாடக் கூடல் நகர்' என்பது பரிபாடல்.

''மடுவார் தென்மதுரை நகர் ஆலவாயில்
மறிகடல் சூழ்புனல்வாயில் மாடநீடு
குடவாயில் குணவாயில் ஆனவெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே''

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

அருளும் பொருளும் புலமையும் நிறைந்த காரணத்தால், இம்மாமதுரை மீதமுள்ள உலகைக் காட்டிலும் பெருமை பெற்றது என்று பரிபாடல் கூறுகிறது.

''உலகம் ஒருநிலையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்''

(பரிபாடல் திரட்டு 6-ஆம் பாடல்.)

சேரரின் வஞ்சியும், சோழரின் புகாரும் போல் அழிந்து படாமல், இன்றும் நிமிர்ந்து நிற்பது மதுரையின் மற்றுமொரு சிறப்பு. இது தமிழகத்தின் பெரும்பேறு. கோழியும் புகாரும் இன்று சிற்றூர்களாகச் சிதைந்து விட்டன. வஞ்சியின் இருப்பிடம் ஆராய்ச்சியில் உள்ளது. ஆனால் மதுரை அன்று போல் இன்றும் தமிழ்

இனத்தின், தமிழ்ச் சாதியின் தலைநகராய் இருக்கிறது. அன்றுகூட, கோழியிலும் வஞ்சியிலும் மற்ற நகரங்களிலும் உள்ள மக்கள் சேவல் கூவியே எழுந்தனர். ஆனால், இம்மா மதுரை மக்கள் 'நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப ஏமவின்றுயில்' எழுந்தனராம்.

''கோதிலாத செஞ்சூட்டுடை வாரணம் கூவ
ஓத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பார்
ஈதலேற்றலோடறு தொழி லிருபிறப்பாளர்
வேதநாதத்தின் விழிப்பதவ் வியன்நகர் மாக்கள்''

—திருவாப்பனூர்ப் புராணம்.

பாண்டியர்க்குப் பின்பு நாயக்க மன்னர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு, கி.பி. 14 முதல் 16-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்தனர். அவர்கள் காலத்தில் மதுரையும் அங்கயற்கண்ணி ஆலயமும் பலவற்றாலும் வளர்ந்திருக்கின்றன. கீழ ஆவணி மூல வீதியில் இன்று 'மார்க்கெட்' இருக்கும் இடம், பழைய நாயக்கர் காலத்தில் அரசப் பிரதிநிதிகள் தங்குமிடமாக இருந்திருக்கிறது. கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள மாவட்டக் காவல் நிலைய அலுவலகங்கள் உள்ள இடம், பழைய நாயக்கர் காலத்துக் கட்டிடப் பாணியில்இருக்கின்றன.விட்டவாயில் உள்ள பழம் பெரும் வாயிலும், மாநகராட்சிக் கட்டிடம் உள்ள இடமும், மதுரையின் பழம் பெரும் சின்னங்களாகும்.

அன்றும் இன்றும் அங்கயற்கண்ணி திருக்கோயில் மதுரையின் நடு நாயகமாக இருக்கிறது. வானுயர்ந்து விளங்கும் வண்ணக் கோபுரங்கள் இக்கோவில் மாநகருக்குப் பெருமை அளிக்கிறது. கோவிலைச் சுற்றியுள்ள திருமதிலும், திருச்சுற்றுகளும், சொக்கநாதர் திருமுன்பும், அம்மையின் திருமுன்பும், எழில்மிகு மண்டபங்களும் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்து. மதுரைக் கோவில் கலைச் செல்வம் மலிந்த மூல பண்டாரம். அன்றும் இன்றும் மக்களின் வாழ்வில் கோவில் பின்னிப் பிணைந்து உள்ளது. இன்றும் மாலை நேரத்தில் சாரை சாரையாக ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் வழிபாட்டுப் பொருள்களைக் கையிலேந்தி அம்மையையும் அப்பனையும் முறையோடு வழிபட்டு வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த நிலை அன்றும் இருந்திருக்கிறது.

''கூடகமுன்கை மடந்தை மார்கள்
துணைவரொடும் தொழுதேத்தி வாழ்த்த
ஆடகமாடம் நெருங்கு கூடல் ஆலவாய்''

என்பது சம்பந்தர் தேவாரம். இந்தக் கருத்து மதுரைக் காஞ்சியிலும் பேசப்படுகிறது.

''திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
ஓம்பினர் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போது பிடித்தாங்குத்
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்...
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்து புறங்காக்கும்...''

(மதுரைக் காஞ்சி)

வரலாறும் புராணமும் பேசுகின்ற மதுரை தான் இன்றைய மதுரையோ என்பது ஆராய்ச்சிக்குரியது. பாண்டியனின் தலைநகராகிய மதுரை, திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கே இருந்ததாக 'மாடமலி மறுகில் கூடற்குடவயின்' என்ற திருமுருகாற்றுப்படை வரி தெரிவிக்கிறது. ''கூடற்குடவயின் பரங்குன்று'' என்பதும் நக்கீரர் வாக்கு. ஆகவே, மதுரை பரங்குன்றின் கிழக்கே இருந்திருக்க வேண்டும். ஆனால், இன்றிருக்கும் மதுரை திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கில் இல்லை. ''வைகையின் வடகரை மருவிய ஏடகம்'' என்று சம்பந்தர் தேவாரம் திருவேடகத்தைக் கூறுகிறது. ஆனால் இன்று ஏடகம் வைகையின் வட கரையில் இல்லை; இடகரையில் இருக்கிறது. இதிலிருந்து வைகை வழிமாறிப் போயிருக்கலாம் என்று எண்ண இடம் இருக்கிறது. வைகையின் வழி மாற்றமும், மதுரையின் திசை மாற்றமும் ஆராய்ச்சியாளருக்கு நல்விருந்து. கோவலன் கொலையுண்ட இடம் பழங்காநத்தம் என்ற இடத்தில் 'கோவலன் பொட்டல்' என்று இன்றும் வழங்கி வருகின்றது. கோயில் இருந்த இடம் ஆலவாய் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இவைகளிலிருந்து மதுரை நகரமும், அங்கயற்கண்ணி ஆலயமும் தனித் தனியே இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

இன்றைய மதுரை, அங்கயற்கண்ணி ஆலயத்தை மையமாகக் கொண்டு, நகரமைப்புக்களுக்கெல்லாம் முன் மாதிரியாக அமைந்திருக்கிறது. இந்த அமைப்புப் பரிபாடல் காலத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவோடு புரையும் சீரூர் பூவின்
இதழகத்தனைய தெருவம் இதழகத்
தரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்''

என்பது பரிபாடல் திரட்டு 7-ஆம் பாடல். இப்பாடல் மதுரையைத் திருமாலின் கொப்பூழில் மலர்ந்த தாமரையாகவும், அத்தாமரையின் இதழ்கள் தெருவாகவும், இதழ்களின் நடுவில் உள்ள மகரந்தம் சொக்கரின் திருக்கோயிலாகவும் காட்டுகிறது. இதில் 'அண்ணல் கோவில்' என்று சோமசுந்தரரின் கோவிலைக் குறிப்பிட்டிருப்பதும், அங்கயற்கண்ணியைக் கூறாததும் ஆய்ந்து உணரத்தக்கன.

நாகரிகத்தின் தொட்டில்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்து பேசும் பல நகரங்கள், இன்று பொய்யாய்ப் பழங்கதையாய் வரலாற்று ஏடுகளில்தான் இருக்கின்றன. நம்முடைய மதுரை மாநகரம், அன்று தொட்டு இன்றும் உயிர்ப்புள்ள தலைநகராய், செல்வமலி திருநகராய், சமயம் தழைக்கும் பெருநகராய் விளங்கி வருகின்றது. தமிழகத்தின் திருக்கோயில்களிலெல்லாம் இன்று மிகுந்த உயிர்ப்புள்ள கோயிலாக (Most living Temple) விளங்குவது அங்கயற்கண்ணி ஆலயமே எனலாம்.

# தவறான சம்பிரதாயங்கள்

## கண்ணதாசன்

பெரும்பாலான சடங்குகளையும், சம்பிர தாயங்களையும் அர்த்தத்தோடு படைத்த இந்து சமூகம், நாளாவட்டத்தில் பயத்தினால் சில தவறான சம்பிரதாயங்களையும் மேற்கொண்டி ருக்கிறது.

இந்தத் தவறு எப்படித்தோன்றிற்றென்று தெரியவில்லை. ஆனால், பெரும்பாலான இந்துக் களால் செய்யப்படும் தவறாகத் தோன்றுகிறது.

ஒரு வீட்டில் அந்த வீட்டில் வாழ்பவ ருடைய பிணங்களை மட்டுமே போட்டுத் தூக்க வேண்டும் என்றும், மற்றவர்களுடைய பிணங் களுக்கு இடந்தரக் கூடாது என்றும் நம்புகிறார் கள். 'அப்படி இடம் கொடுத்தால் என்ன நடந்து விடும்?' என்பது யாருக்கும் தெரிய வில்லை.

என்னுடைய அனுபவத்தில் ஒரு வீட்டில் எவ்வளவு கல்யாணங்கள் செய்யப்படுகின்ற னவோ, அவ்வளவு கல்யாணங்களிலும் மண மக்கள் அந்த வீட்டை வாழ்த்துவது போலவே, எத்தனை பிணங்களைப் போட்டுத் தூக்குகின் றோமோ அத்தனைப் பிணங்களின் ஆவிகளும் வாழ்த்துகின்றன.

'ஆவிகள் உலாவுகின்றன' என்பது இந்துக் களின் நம்பிக்கை. அப்படி உலவுகின்ற ஆவிகள் தன்னுடைய சடலத்தைப் போட்டுத் தூக்கு கின்ற வீடுகளையும் காவல் காக்கின்றன.

எந்த அநாதைப் பிணத்தையும்கூட வீட் டுக்குத் தூக்கி வந்து, வாசலில் போட்டு, பல்லக்கோ பாடையோ கட்டித் தூக்கி அனுப்பிப் பாருங்கள். அந்த ஆவிகள் வீட்டுக்கு வரு கின்ற தோஷங்களை எல்லாம் முறியடித்து விடு கின்றன. இதிலே எனக்கு முழு நம்பிக்கை யுண்டு.

என்னுடைய வீடு கட்டி முடிக்கப்பட்டு ஆறாவது மாதமே அதன் மீது ஏராளமான 'ஜப்தி'கள் வந்தன. வீடு என் மனைவியின் பேரில் உள்ளது, கடனோ நான் சொந்தமாகச் சிக்கிக் கொண்டது. கடன்காரர்கள் அந்த வீடு 'பினாமி' என்று தொடர்ந்தார்கள்.

வழக்கு நடந்து கொண்டிருந்தபோது, வீட்டிலே என் உறவினர் ஒருவர் இறந்து போனார். அவரது சடலத்தை என் செலவி லேயே தூக்கி அனுப்பினேன். அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அந்த வீடு 'பினாமி' அல்ல வென்றும், செட்டி நாட்டுப் பெண்களுக்குச் சீதனப் பணம் அதிகம் என்றும், அதிலே வாங் கிய வீடுதானென்றும், ஹைகோர்ட்டிலே தீர்ப் பாயிற்று.

ஏறக்குறைய ஐந்தாறு பிணங்களை என் வீட்டிலேயே போட்டுத் தூக்கியிருக்கிறேன். ஒவ்வொரு காரியத்திற்குப் பிறகும், ஒவ்வொரு வில்லங்கம் நீங்கியிருக்கிறது.

'ஆவிகளின் சாந்தி, அதைச்சாந்தப்படுத்தி யவர்களுக்கு உதவுகிறது' என்று நாம் நம்பு கிறோம். அதற்காகப் படைப்பு நடத்துகிறோம்; பூஜை செய்கிறோம்.

அப்படி யிருக்கும்போது தன் உடலைத் திருப்தி செய்வதை அந்த ஆவி கவனிக்காதா? அதற்காகக் காரியம் செய்வோருக்கு உதவாதா?

அநாதைப் பிணத்தைக் கூட நாம் ஏன் எடுத்து அடக்கம் செய்யக் கூடாது? இந்துக்கள் தங்கள் சம்பிரதாயத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். அது போலவேதான் திருமணத் தம்பதிகளை விதவைகள் வாழ்த்தக் கூடாது என்ற சம்பிரதாயமும்.

அது எவ்வளவு தவறானது என்பதை அடுத்த இதழில் கூறுகிறேன்.

# வாழையடி வாழையாக வந்தவர்

நா. மகாலிங்கம் B.Sc., M.I.E

சமரச சுத்த சன்மார்க்கம் கண்ட திருவருட் பிரகாச வள்ளலார், தமக்கு முந்தைய அருளாளர்களிடம் பரம பக்தி உடையவராய்த் திகழ்ந்தவர். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தில் யான் ஒருவன் அன்றோ' என்று அவர் உருகிப் பாடுவதைக் காணும் போது, முந்தையோர் பாடல்களை அவர் முறையாகப் போற்றியதை உணர்கிறோம்.

தேவார ஆசிரியர்களான முதல் மூவரையும், திருவாசகம் திருக்கோவையார் தந்த மணிவாசகரையும், தனித் தனியே பத்துப் பத்துப் பாடல்களில் அவர் பாராட்டி உரைக்கிறார். நேரடியாக அவர்களைப் போற்றுவது என்றும், அவர்கள் அருளிய செயல்களையும், தொண்டுகளையும் பாராட்டுவது என்றும் வகுத்துக் கொண்டு அவர் போற்றுகிறார்.

முதல் திருமுறையில் கணபதி, முருகன், சிவன் முதலிய தெய்வங்களை முன்னோர்களைப் போலவே பாராட்டுகின்றார். திருவருட்பாவில் முதல் திருமுறையில் திருஞான சம்பந்தர் 'எலும்பைப் பெண்ணாக்கிய' அற்புதச் செயலையும், பெருமணநல்லூரில் திருமணம் காண வந்தவர்கள் அனைவருக்கும் முத்தி வழங்கியதையும், திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் கட்டுச் சோறு கொடுத்த வரலாற்றையும், சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்காகத் திருவாரூரில் தூது நடந்த செய்தியையும், திருமணத்தில் தடுத்தாட் கொண்ட செய்தியையும் போற்றிப் போற்றிப் பாடுகின்றார்.

மாணிக்க வாசகருக்காகச் சிவபெருமான் எடுத்த குதிரைச் சேவகனுடைய வடிவத்தை என் கனவிலாயினும் காட்டுக என்றும், பிட்டுக்கு மண் சுமந்த அன்று இறைவன் பிரம்படி பட்டபோது வாதவூரர் மனது என்ன பாடு பட்டதோ என்றும், அதனை இன்று கேட்ட போது தன் உள்ளம் இடிந்து போயிற்று என்றும் வருந்துகின்றார்.

'திருவருட்பா' என வழங்கும் வள்ளலார் அருளிய தெய்விகப் பாடல்கள் அனைத்தும், அவருடைய தெய்விகக் கையினால் எழுதப் பெற்றவையேயல்லாமல் திருவாய் மலர்ந்தவையல்ல. அவருடைய பாட்டுக்களை அவர் பாடுவதேயில்லை. எப்போதும் திருமுறைப் பாடல்களையே பாடிக் கொண்டிருப்பார்.

சில சமயம் ஓர் அடியையே தொடர்ச்சியாகப் பல நாழிகை பாடிக் கொண்டிருக்கும் போது, அக்கம்பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதும் தெரியாது. கண்ணீர் ஆறாகப் பெருகி ஆடை நனைந்துவிட, அருகில் உள்ளவர்கள் வள்ளலாருக்கு மாற்றுடை உடுத்தி விடுவர்.

இந்த நிலையிலிருந்து சிறிது உணர்ச்சி பெற்றவுடனேயே திருமுறைப் பாடல்களைத் தொடர்ந்து பாடிக் கொண்டே தன்னுடைய பாடல்களை விரைவாகத் தாளில் எழுதுவார்.

இவ்வாறு எழுதும் பாடல்கள், திருமுறைகளில் தோய்ந்த திருவுள்ளத்தில் எழுகின்றவைகள் ஆனபடியால், திருமுறைகளை ஓதுவதன் பயனை அளிக்க வல்லவையென அன்பர்கள் கருதினார்கள்.

---

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்,
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித் திட, அவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற்கு என்றே, எனைஇந்த
உகத்தே இறைவன், வருவிக்க
உற்றேன்! அருளைப் பெற்றேனே!

—இராமலிங்க அடிகளார்

# சிவஞான போதத் தெளி பொருட் சுருக்கம்

சு.ரா.முருகவேள். எம்.ஏ.எம்.ஓ.எல்

## முன்னுரை

நம் தமிழ் நாட்டில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள், ஆசிரியர் மெய்கண்டார் தலைசிறந்த ஒருவர் ஆவர். அவர், திருமுனைப்பாடி நாடு என்னும் நடுநாட்டில், (தென்னாற்காடு மாவட்டத்தில்), திருப்பெண்ணாகடம் என்னும் சிவத் தலத்தில், அச்சுத களப்பாளர் என்பவரின் அருந்தவ மைந்தராகத் தோன்றியருளினார். அவர் தம் இளமைப் பெயர், திருவெண்காடர் என்பது. பின்னர் அவர் பரஞ்சோதி முனிவர் என்பவரால் ஆட்கொள்ளப் பெற்று, மெய்ப்பொருட்டெளிவு எய்திய போது, அவருக்கு மெய்கண்டார் என்னும் சிறப்புப் பெயர் வழங்குவதாயிற்று. அவர் தம் காலம், கி.பி. 1232 எனக் கல்வெட்டுச் சான்று கொண்டு, வரலாற்று அறிஞர்கள் ஆராய்ந்து துணிந்துள்ளனர். மெய்கண்டார் என்னும் தமிழ்ப் பெருஞ்சான்றோர் இயற்றியருளிய நூலே சிவஞானபோதம் என்பது.

## சிவஞான போதம்

''தென்னிந்தியத் தமிழ் மக்களின் பேரறிவின் பெருவிளைவு'' ('The choicest product of the Dravidian intellect'-Dr.G.U.Pope)எனப் பெரிதும் புகழ்ந்து போற்றப்பெறும் சைவ சித்தாந்தம் என்னும், அரிய பெரிய தமிழகத்துத் தத்துவக் கொள்கையை விளக்கும் நூல்கள் பலவற்றிற்கும், தலைமணி நூலாகச் சிறந்து திகழ்வது, ஆசிரியர் மெய்கண்டார் இயற்றியருளிய சிவஞானபோதமேயாகும். இலக்கண நூல்களில் தொல்காப்பியமும், நீதி நூல்களில் திருக்குறளும், காப்பிய நூல்களிற் சிலப்பதிகாரமும், யோக அனுபவ நுட்பங்களை உணர்த்துதலில் திருமந்திரமும், வரலாற்று உண்மைகளை வளம்பெறப் பாடுதலிற் பெரிய புராணமும், கற்பனைத் திறன் செறிந்த கவிதை நலத்திற் கம்ப ராமாயணமும் பிறவும், தம் நிகரற்றுச் சிறந்து திகழ்தல்போல, நம் அருமைச் செந்தமிழ் மொழியின்கண் ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள் நூலாக வீறுற்று விளங்குவது சிவஞான போதம் ஆகும்!

''திருக்குறள்போல் நீதிநூல்;
சிவஞான போதம்போல்
பெருக்கமிகும் மெய்ப்பொருள்நூல்;
பீடுயர்தொல் காப்பியம்போல்
திருத்தமிகும் இலக்கண நூல்;
சிறந்ததிரு வாசகம்போல்
உருக்கமிகும் பக்திநூல்,
உலகினில்வேறு எங்கும்இல்லை''.

சிவஞான போதம், தமிழ் மொழிக்கண் இயற்றப் பெற்றிருப்பது குறித்துத் தமிழர் அனைவரும் ஒருசேரப் பெருமிதம் கொண்டு மகிழலாம். 'திருக்குறள்' எங்ஙனம் இந் நாளில் உலகப் பெரு நூல்களுள் ஒன்றெ‌ன அனைவராலும் உடன்பட்டுப் பாராட்டப்படுகின்றதோ, அங்ஙனமே உலகப் பெரு நூல்களுள் ஒன்றாக வைத்து மதித்துப் போற்றத் தகுந்த சீர்த்தி மிகுந்தது, சிவஞான போதம் எனலாம்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், 'குறள்' என்னும் தன் பெயருக்கேற்ப மிகச் சுருங்கிய நூல் எனப் போற்றப்படுவது, அனைவரும் அறிந்த தொன்று. அத் திருக்குறளினும் மிக மிகச் சுருங்கிய தொன்றாகச், சிவஞான போதம் அமைந்திருப்பது, 'நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பிறந்தன்றே' எனத் தக்க நிலையில் உள்ளது. 40 வரிகளில், 216 சொற்களில், 624 எழுத்துக்களில், சிவஞான போதம் அடங்கி விட்டிருக்கின்றது. ஆதலின், உலகிலேயே மிக மிகச் சுருங்கிய நூல்—ஆனால் மிக மிகச் சிறந்து விரிந்த பெரு நூல்—சிவஞான போதம் ஒன்றே என நாம் துணிந்து சொல்லலாம்! (1)

(1) "This book contains forty lines of Tamil Poetry, and is without doubt one of the most closely religious philosophies found anywhere in the world."
—Rev. Dr. J. H. PIET.

(2) "Philosophy will always be hard and what it promises even in end may not be a clear theory or any complete understanding or Vision. But its certain reward is a continual evidence and a heightened perception of the ineffable mystery of life in all its complexity and all its unity and worth."
—Prof. BRADLEY.

மிகச் சுருங்கிய அளவில், மிக விரிந்த பொருள்களைமிகச் சிறந்த முறையில், தருக்க நெறிமுறை பிறழாமலும் தடைவிடை நடையிலும், இஞ்ஞான்றை அறிவியல் ஆராய்ச்சிப் போக்கிற்கு ஏற்பத் தெளிவுற விளக்கும் சிறப்பிலும், சிவஞான போதம் ஈடு இணை யற்றது. அந்நூல் பொது, உண்மை என்னும் இரண்டு அதிகாரங்களைக் கொண்டது; பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என்னும் நான்கு இயல்கள் அமைந்தது.

சிவஞான போதம், எளிய இனிய சிறு சிறு சொற்களால் அமைந்து, சில வரிகளில் பல பொருள்களை உணர்த்தும் திட்ப நுட்பம் சான்ற சிறந்த சூத்திரயாப்பால், இயற்றப் பெற்றுள்ளது. பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. இப்பன்னிரண்டு சூத்திரங்களும், நாற்பது வரிகளில் அடங்கி விடுகின்றன. என்றாலும், இறை உயிர் உலகு (பதி பசு பாசம்) என்னும் முப்பொருள்களைப் பற்றியும், இச் சூத்திரங்கள் முற்ற முடியத் தெற்றென விளக்கும் சிறப்புடையனவாக மிளிர்கின்றன; நான்கு இயல்களாக அமைந்துள்ளன.

### பன்னிரு சூத்திரங்கள்

*(1)* முதற் சூத்திரம் கடவுள் இருத்தலை உணர்த்தும் பதியுண்மைக்குப் பிரமாணம் கூறுகின்றது. இரண்டாம் சூத்திரம் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களாகிய பாசவுண்மையை விளக்குகின்றது. மூன்றாம் சூத்திரம் ஆன்மாவாகிய பசுவுண்மைக்குப் பிரமாணம் கூறுகின்றது. (பிரமாண இயல்).

*(2)* நான்காம் சூத்திரம் ஆன்மாவாகிய பசு இலக்கணத்தினையும், ஐந்தாம் சூத்திரம் மும்மலங்களாகிய பாச இலக்கணத்தினையும், ஆறாம் சூத்திரம் கடவுள் ஆகிய பதி இலக்கணத்தினையும் விவரிக்கின்றன. (இலக்கண இயல்).

*(3)* ஏழாம் சூத்திரத்தில் ஞானத்தை உணர்தற்குரிய ஆன்மாவாகிய அதிகாரியின் இயல்பும், எட்டாம் சூத்திரத்தில் ஞானத்தினை உணரும் முறைமையும், ஒன்பதாம் சூத்திரத்தில் ஞானத்தைச் சாதிக்கும் முறைமையும் தெளிவிக்கப்படுகின்றன. (சாதன இயல்).

*(4)* பத்தாம் சூத்திரம் பாசநீக்கம் பற்றியும், பதினொன்றாம் சூத்திரம் சிவப்பேறு பற்றியும், பன்னிரண்டாம் சூத்திரம் சீவன் முத்தராகிய அணைந்தோர் தன்மையைக் குறித்தும் தெளிவுற விளக்குகின்றன. (பயன் இயல்).

### அதிகரணம்

இப்பன்னிரண்டு சூத்திரங்களில் ஒவ்வொன்றும், பல அதிகரணங்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது. அதிகரணம் (Topic, Section) என்பது, கூறப்படும் பொருளின் பாகுபாடு பற்றியது. அஃதாவது, நூலிற் கூறப்படும் பொருளும், அதன்கண் நிகழக்கூடிய ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் கருத்துக்களும், அவற்றை மறுத்து நிலைநாட்டப் பெறும் முடிந்த முடிவாகிய சித்தாந்தத் துணிவும், இவற்றிடையே ஒன்றற் கொன்றுள்ள தொடர்பு பற்றிய இயைபும், ஆகிய ஐந்து(5) கூறுகளையும் உட்கொண்டதாகத் திகழும் பாகுபாடே, அதிகரணம் எனப்படும். இவைகள் ஐந்தும் முறையே விஷயம் (Thesis), சம்சயம் (Doubt), பூர்வபட்சம் (Anti-thesis), சித்தாந்தம் (Synthesis), சங்கதி (Consistency) என வழங்கப்படும். இவற்றுள் சங்கதி என்னும் இயைபானது, நூல் இயைபு, அதிகார இயைபு, ஓத்தியைபு, பாத இயைபு, அதிகரண இயைபு என ஐந்து வகைப்படும். இவ்வனைத்துக் கூறுகளும் ஒருங்கே நன்கு அமைந்த நூலின் சிறு சிறு உட்பகுதிகளே, அதிகரணங்கள். இங்ஙனம் சிவஞான போதத்தில் அதிகரணங்கள் முப்பத்தொன்பது (39) அமைந்துள்ளன.

### அதிகரணங்கள்

சிவஞான போதம் என்னும் செந்தமிழ்த் தத்துவ ஞான நூலை, நமது தமிழ்ப்பெருஞ் சான்றோர் ஆகிய ஆசிரியர் மெய்கண்டார், எவ்வளவு சிறந்த முறையில் சங்கிலித் தொடர்போன்று, ஒன்றினொன்று பிரிவற இயைந்த கருத்துத் தொடர்பு வளமும், முன்னெடுபின் முரண்பாடு ஏதும் இல்லாத திட்ப நுட்பக் கலைத்திறமும் செறிய அருளிச் செய்துள்ளார் என்பது, ஆராயுந்தொறும் அளவிலா இன்பம் அளிக்கின்றது!

*(1)* உலகம், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலை உடையது ; அம்முத்தொழிலும் செய்பவன் உருத்திரனாகிய அரனே; மும்மூர்த்திகளுள் ஏனைய இருவரும் முத்தொழிற்குட்படுவார்கள் என மூன்று அதிகரணங்கள் கொண்டது முதற் சூத்திரம்.

*(2)* இறைவன் உயிர்களின்பால் இரண்டறக் கலந்து நிற்பான்: உயிர்களுக்கு வினைப் பயன்களை ஊட்டுபவன் இறைவனே; உயிர்கள் அச்சு மாறியே பிறந்தும் இறந்தும் வரும்; இறைவன் எங்கும் எதிலும் பரவி நிற்கும் சர்வ வியாபகன் என்னும் நான்கு அதிகரணங்களைக் கொண்டது இரண்டாம் சூத்திரம்.

(3) இல்லை என்கின்ற அறிவுடனே சொல்லுகையால் அறிவாகிய உயிர் உண்டு; 'எனது உடல்' என்று பொருட் பிறிதின் கிழமையாகச் சொல்லுகையால் உடற்கு வேறாக உயிர் உண்டு; மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளையும் கொண்டு, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து புலன்களையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் தனித் தனியே அறிகிற ஐம்பொறிகளுக்கும் வேறாக உயிர் உண்டு; கனவு உடலைவிட்டு நனவு உடலில் வருவதனால், அக்கனவு உடலாகிய சூக்கும தேகத்திற்கு வேறாக உயிர் உண்டு; உறங்கும்பொழுதும் பிராணவாயு இயங்கா நிற்பவும், உடம்புக்கு நுகர்ச்சியும் தொழிலும் நிகழாமையால், உறங்காத பொழுது நுகர்ச்சியும் தொழிலும் உடையதாகப் பிராணவாயுவுக்கு வேறாக உயிர் உண்டு; மறந்து மறந்து நினைந்து உணர்ந்து வருவதால், மறவாமலே எதனையும் அறிகின்ற பிரமத்திற்கு வேறாக உயிர் உண்டு; எல்லாத் தத்துவங்களுக்கும் தனித் தனியே வேறு வேறு பெயர் வழங்கி வருவதனால், அந்த அந்தத் தத்துவங்களுக்கும் வேறாகத் தனியே ஓர் உயிருண்டு என, ஏழு அதிகரணங்களை உடையது மூன்றாம் சூத்திரம்.

(4) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அகக் கருவிகளாகிய அந்தக் கரணங்களுக்கு உயிர் உடன் கூடினாலன்றித் தொழில் நிகழாமையினால், அவ்வந்தக் கரணங்களுக்கு, வேறாக உயிர் உண்டு; ஆணவ மல மறைப்பினால்தான் உயிருக்கு அறிவில்லை ; உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று அவத்தைகளைப்படும் என மூன்று அதிகரணங்களாக அமைந்தது நான்காம் சூத்திரம்.

(5) உயிரால்தான் தத்துவங்களெல்லாம் தொழிற்படும்; இறைவனால்தான் உயிர்களெல்லாம் அறியும் என்னும் இரண்டு அதிகரணங்களைக் கொண்டது ஐந்தாம் சூத்திரம்.

(6) உயிரின் அறிவினாற் சுட்டி அறியப்படும் பொருள்கள் எல்லாம் அழியும் ; உயிர்களால் சுட்டிறந்து அப்பிரமேயமாக உணரப்படுபவனே இறைவன் என இரண்டு அதிகரணங்களை உட்கொண்டது ஆறாம் சூத்திரம்.

(7) இறைவன் பாசத்தை அநுபவிக்க மாட்டான்; பாசம் இறைவனை அநுபவிக்காது; உயிரே இறைவனையும் பாசத்தையும் அநுபவிக்கும் என்னும் மூன்று அதிகரணங்களை உட்கொண்டது ஏழாம் சூத்திரம்.

(8) உயிருக்கு நல்லறிவு தவத்தினால்தான் வரும்; உயிருக்கு ஞானாசிரியனாகப் போந்து அறிவுறுப்பவன் இறைவனே யாவான்; உயிர் ஐம்பொறிகளைப் பற்றிக் கொண்டு நிற்றலால் தன்னையும் தான் அறிய வல்லதன்று; உயிரானது ஐம்பொறிகளிலே பற்று அற்றால் தன்னையும் அறியவல்லதாகும் என நான்கு அதிகரணங்களைக் கொண்டது எட்டாம் சூத்திரம்.

(9) உயிரானது இறைவனின் ஞானத்தினாலேயே இறைவனைக் காணக்கூடும்; உயிர்க்குப் பாசமாகிய மலங்களில் பற்று அற்றால் இறைவன் வெளிப்படுவான் ; திருவைந்தெழுத்தைக் கணித்து இறைவனை வழிபடுவதனால், மலவாதனை கழியும் என மூன்று அதிகரணங்களை உடையது ஒன்பதாம் சூத்திரம்.

(10) இறைவனுடன் ஒன்றாகி நிற்க; உன்னுடைய தொழிலை எல்லாம் இறைவனுடைய பணி என்றே கருதிச் செய்க; என்னும் இரண்டு அதிகரணங்களாக அமைந்தது பத்தாம் சூத்திரம்.

(11) மெய்யுணர்வாளனாகிய சீவன் முத்தனுக்கு வருகிற இன்ப துன்பங்களையெல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு அநுபவிப்பான்; இறைவனை மறவாமல் அன்பு செலுத்தி வந்தால் இறைவனோடு நாம் ஒன்றுபட்டு இன்புறலாம் என இரண்டு அதிகரணங்கள் ஆக விளங்குவது பதினொன்றாம் சூத்திரம்.

(12) ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் பற்றறக் களைக; சிவஞானச் செல்வர்களுடன் சேர்ந்து பழகி நலம் பெறுக; சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவபிரான் எனவே தெளிந்து நம்பி வழிபடுக ; அங்ஙனம் வழிபடாமல் இருந்திருந்தால், வழிபடாமையை விடுக என்னும் நான்கு அதிகரணங்களாகத் திகழ்வது பன்னிரண்டாம் சூத்திரம்!

இத்துணை அரும்பெரும் முடிபுகளையெல்லாம், இருநூற்றுப்பதினாறு (216) சொற்களால், நாற்பது (40) வரிகளால், பன்னிரண்டு சூத்திரங்களில் வடித்தெடுத்துக் கூறும் சிவஞான போதம் என்னும் இவ்வரிய பெரிய தத்துவ ஞானத் தமிழ் நூலினைப் போன்று, சுருக்கமும் விளக்கமும் ஒருங்கே வாய்ந்த சிறந்ததொரு நூல், உலகில் வேறெந்த நாட்டிலும், வேறெந்த மொழியிலும் இல்லை என்பது, தமிழர்களாகிய நாம் அனைவரும் நினைந்து மகிழ்ந்து பெருமிதம் கொள்ளுதற்குரியதாகும்.

**நூலின் அருமை**

தத்துவ ஆராய்ச்சி நூல்கள் பெரும்பாலும் கடினமாகவே இருக்கும்(2). அவ்வியல்பு நமது சிவஞான போத நூலுக்கும் விலக்கு அன்று. இன்னோரன்ன நூல்களைச் சிறுகதை — தொடர்கதை — காதற்கதை முதலிய புதினக் கதைகள் போலக் கருதிப்

படித்தல் இயலாது. ''நூலாருள் நூல்வல்லார்'' நுணுகி ஆராய்ந்து கற்றுணர்தற்குரிய நூலாகச் சிவஞான போதம் திகழ்கின்றது. பல நூல்களையும் பயின்றுணர்ந்து கைவந்த பெரும் புலமை மிக்க அறிஞர் பெருமக்களே, அதனைக் கற்றுணர்தல் இயலும். ஒவ்வொரு கலைத் துறையிலும் ஒரு சிலரே தனிப் பயிற்சியும் உணர்வும் பெற்றவர்களாக விளங்குதலைக் காண்கின்றோம். தனித் தனிப் பண்பும் முயற்சியும் பயிற்சியும் கொண்டு அடைய வேண்டிய அக்கலைத் துறைகளில், பொதுமக்கள் சுவையோ உணர்வோ அடைவதென்பது எளிதில் இயலுவதன்று. பொது மக்களுக்குச் சுவை பயவாமையாலோ, அவற்றை அவர்கள் நன்கு அறியமாட்டாமையாலோ, அக்கலைகளுக்கு எத்தகைய இழிவும் சிறுமையும் இல்லை. சிறப்பும் நுட்பமும் வாய்ந்த அரிய பெரிய கலைகள், பெரும்பாலான பொதுமக்களுக்குச் சுவை குன்றித் தெளிவின்றிக் கடினமாகவே இருக்கும் (Caviare to the general). அவற்றை எத்துணைதான் எளிமைப்படுத்தி விளக்கினாலும், அவற்றின்கண் உண்மை ஈடுபாடும் உழைப்பும் இல்லாதவர்க்குச் சிறிதும் தெளிவு பிறவாது. எளிமைப் படுத்தினால் நுண் பொருள்கள் விடுபட்டுப் போகும்; நுண்பொருள்களை விளக்க முயன்றால் எளிமைத் தன்மை இன்றிச் சிக்கல் மிகுந்துவிடும். 'விரிப்பிற் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்' என்று புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடியது போன்ற நிலைமை, எல்லாச் சிறந்த கலை இலக்கிய நூல்களுக்கும் பொதுவிற் பொருந்துவதேயாகும்(3).


## முடிவுரை

சிவஞான போத நூற் பொருளை ஓரள வேனும் தெளிந்து உணர்ந்து கொள்ளுவதற்கு இலக்கியப் புலமை, இலக்கண அறிவு, தருக்க நூற் கல்வி, திருமுறைகளிற் செறிந்த சிந்தை, பல்வேறு சமய நூல்களிற் பயிற்சி, தத்துவ ஞானவேட்கை, பக்தியுணர்வு முதலியன பலவும், இன்றியமையாதனவாக உள்ளன. எனினும், இங்கு நாம் இயன்ற அளவு ஒரு சிறிது முயன்று, சிவஞான போதத் தெளி பொருளினைச் சுருக்கமாகக் கண்டு மகிழ முயலுவோமாக!

—தொடரும்.

(3) "Any one who has ever tried to present a rather abstract scientific subject in a popular manner knows the great difficulties of such an attempt. Either he succeeds in being intelligible by concealing the core of the problem and by offering the reader only superficial aspects or vague allusions, thus deceiving the reader by arousing in him the deceptive illusion of comprehension; or else he gives an expert account of the problem, but in such a fashion that the untrained reader is unable to follow the expression and becomes discouraged from reading any further".


—Dr. ALBERT EINSTEIN



தஞ்சை மாவட்டம் ஆத்தாளூர் அருள்திரு வீரமாகாளியம்மன் திருக்கோயில் திருமண மண்டபத்தினை 27—6—74-ஆம் நாளன்று உணவு அமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் திறந்து வைத்தார்கள். துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், பி.ஏ.,பி.எல். அவர்கள், தாழை மு. கருணாநிதி, எம்.எல்.ஏ. அவர்கள் மற்றும் விழாவில் கலந்து கொண்டோர்.

# திருவண்ணாமலை திருக்கோயில் திருப்பணி

டி.வி.சுப்பிரமணியம் செட்டியார்



திருவண்ணாமலைக் கோபுரம்

''அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே'' —சம்பந்தர்

''ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே''
—நாவரசர்


ஆதி அந்தம் இலாத அரும்பெரும் சோதியாய் விளங்கும் பரம்பொருள், ''அருவன் ஆயினும் அன்பர்க்கு உருவனாய் வருவன்'' என்ற மாமறைக்கிணங்க, அருவுருவத் திருமேனியான 'இலிங்க' வடிவில் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட சிறப்புப் பெற்ற திருத்தலம் திருவண்ணாமலை.

மக்கள் அடையத் தக்க பேறுகளில் தலையாயது முத்திப்பேறு. உள்ளத்து ஒருமையுணர்வுடன் நினைத்த அளவில் முத்தி அளிக்கும் பெருமைக்கு உரியது திருவண்ணாமலை. தேவி உமையம்மை தவமியற்றி, திருக்கார்த்திகைப் பெருநாளில் சோதி தரிசனம் கண்டு, சிவபெருமானின் இடப்பாகம் பெற்றமர்ந்த சிறப்பும் பெற்ற திருத்தலம் திருவண்ணாமலை. பஞ்ச மகாபூதத் தலங்கள் ஐந்தனுள் நடுநாயகமான அக்கினித் தலம். ஆதாரத் தலங்கள் ஆறனுள் மூன்றாவதான மணிபூரகத் தலம். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகப் பொருந்தித் தொழுவார்வினை வழுவாவண்ணம் அகற்றும் புண்ணியத் தலம் திருவண்ணாமலை.

சமய குரவர் நால்வரில் அப்பர் மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற தலம் திருவண்ணாமலை. வாக்கிற்கு அருணகிரி எனப் புகழ்பெற்ற அருணகிரிநாதர் அவதரித்து, கருணைக் கடலான கந்தப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்று, கம்பத்தில் கந்தனைக் காட்டிய சிறப்புத் தலம் திருவண்ணாமலை.

தன்நிகரில் சித்தி பெற்று ஞானஒளி வீசிய விரூபாட்ச தேவர், குகை நமசிவாயர், குரு நமசிவாயர், தெய்வசிகாமணி அருணாசல தேசிகர், சிவப் பிரகாச சுவாமிகள், ஈசான்ய ஞானதேசிகர், சேஷாத்திரி சுவாமிகள், பகவான் ரமண மகரிஷிகள் முதலான 'ஞானத் போதனரை வா என்று' அழைத்து, அவர்களைத் தன் சோதியில் இணைத்துக் கொண்ட மகத்துவம் உடையது திருவண்ணாமலை.

கார்த்திகைத் திங்களில் திருக்கார்த்திகைத் திருநாளன்று இறைவன் உமாதேவிக்கு ஒளிமயமான காட்சி யருளியதை நினைவு கூரும் வகையில், இத்தலத்தில் நடைபெறும் திருக்கார்த்திகைப் பெருவிழா, உலகிலேயே சிறப்புடைய ஒன்றாகும். அன்று மாலை அண்ணாமலையாரின் புனிதத் திருவடிவாகவே விளங்கும் மலை உச்சியில் சோதி தரிசனம் காணும் காட்சி நம் உள்ளத்தை ஈர்த்து ஒளி ஊட்டுவதாகும்.



திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்
திருப்பணி வேலை நடைபெறுதல்.

மிக மிகப் புராதனமானதும், மாபெரும் சிறப்பு வாய்ந்ததும் கலைச் செல்வங்கள் நிறைந்ததுமான அருள்திரு உண்ணுமுலை உடனுகிய அருள்திரு அண்ணுமலைப் பெருமான் ஆலயம் பல நூற்றுண்டுகட்கு முன் சோழப் பேரரசர்கள், ஒய்சள அரசர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோர் ஆதரவில் வானளாவிய பல கோபுரங்களுடனும், ஏராளமான கல் மண்டபங்களுடனும் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பளவில் நிர்மாணிக்கப் பெற்றுள்ளது. பின்னர் சுமார் 69 ஆண்டுகட்கு முன்னர் நாட்டுக் கோட்டை நகரத்தார்களாகிய தனவணிகப் பெருமக்கள் முன்வந்து பெரும் பொருள் செலவிட்டு, கலை எழில் மிளிரும் கல் திருப்பணிகள், பிராகாரங்கள், திருக்குளங்கள் அண்ணுமலைக்கே உரிய பெரிய பெரிய வெள்ளி வாகனங்கள், ஆபரணங்கள் முதலியன அமைத்து கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் சிறப்பித்துள்ளனர்.

மேலும் புதுப்பிக்க வேண்டிய திருப்பணிகளைப் பூர்த்தி செய்யவும், வானளாவி நிற்கும் கோபுரங்களையும், விமானங்களையும், மண்டபங்களையும் பழுது பார்த்துபுதுப்ப்பிக்கவும், மின் விளக்குகள் அமைக்கவும் வாகனங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றைச் செப்பம் செய்து புதுப்பிக்கவும், தரிசனத்திற்கு வரும் அடியவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யவும், மகா கும்பாபிசேகம் செய்யவும் திருவருள் கூட்டி வைத்துள்ளது. சுமார் 50 லட்ச ரூபாய் அளவிற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக் கோயில் வருமானம் மிகக் குறைவாக உள்ளதால், இந்திய அரசு, தமிழக அரசு, திருமடங்கள், ஏனைய திருக்கோயில்கள், மற்றும் பொது மக்கள் ஆதரவுடன் இவ்வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வைப்பதற்காகச் சென்ற சௌமிய ஆண்டு மாசித் திங்கள் 30-ம் நாள் (13—3—1970) அன்று, தமிழ்நாடு அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ் அவர்கள் முன்னிலையில், காரைக்குடி தனவணிகப் பிரமுகர் உயர்திரு. சா. நா. அ. சோ. அண்ணுமலைச் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக் குழு அமைக்கப் பெற்று, செயல்பட்டு வருகிறது.

அன்பர்கள் அனைவரும் இம்மாபெரும் பணியில் பங்குகொண்டு தங்கள் தங்களால் இயன்ற வரை மனம் வாக்குக் காயங்களாலும், பொருளாலும் உதவி அளித்தும், மற்றவர்களை உதவி அளிக்கச் செய்தும் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிருேம். நன்கொடையை ''செயலாளர்—பொருளாளர், அருள்மிகு அருணசலேசுவரர் திருக்கோயில் திருப்பணிக் குழு, திருவண்ணுமலை வட ஆர்க்காடு மாவட்டம்'' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தஞ்சை மாவட்டம் பாலத்தளி அருள்மிகு துர்க்கை அம்மன் திருக்கோயிலில் 27—6—74-ஆம் தேதி பயணிகள் விடுதி, முன் அலங்கார வளைவு, மதில் சுவர் ஆகியன கட்டிட, உணவு அமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் கால்கோள் விழாவினைச் செய்தார்கள். உடன் தாழை மு. கருணுநிதி, எம்.எல். ஏ.

# எழுபது கோடிப் பொன்

கே.எஸ். ஜெகன்நாதன்

''எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே
காக்கைமூக்கு நிழலிலே கள்வர்புகும் வழியிலே
கண்டாலும் கம்மாளர் (கண்ணாளர்) கண்ணிலே
எழுபதுகோடிப் பசும் பொன்''

இந்தப் பாடல் இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது. திகைப்பை ஊட்டியது. பரிதாபப்பட வைத்தது. எத்தனையோ உள்ளங்களை ஏங்கித் தவிக்கவிட்டது. எப்போது வரும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. இப்படி ஒரு புதையலா? இதை யார் எடுக்கப் போகிறார்கள் என்று எண்ணத் தோன்றியது.



ஆம், இந்தப் பாடல் ஒரு புதிய காவியம் உருவாகிட மையமாக அமைந்தது. அதுவும் தொடர் காவியமாக வளர அடிப்படையாக இருந்தது. தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் 'முரசொலி' வார இதழைப் பரபரப்பாகப் படித்தனர். அதில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தீட்டி வந்த 'புதையல்' ஒரு புதுமைக் காவியமாக, மக்கள் உள்ளத்தைத் தொட்டதுதான் அதற்குக் காரணமாகும்.

அதிலே வரும் ஒவ்வொரு பாத்திரங்களும் படிப்பினை தருவதாக அமைந்திருந்ததை மறந்திட முடியாது. அதுவே பின்னர் 'புதையல்' திரைப்படமாக வந்து நாட்டு மக்கள் கவனம் முழுவதையும் ஈர்த்தது என்பதையும் மறந்திட முடியாது. யாரும் அறியாமல் இருந்த 'எழுவானுக்கும் தொழுவானுக்கும்' பாடல் எங்கே கிடைத்தது? எங்கே இருக்கிறது? என்று பெரும்பாலோர் அறிந்திருக்க முடியாது. ஏனெனில் இது ஓர் சிற்றூரில் இருக்கின்றது. ஊரை அறிவதற்கு முன் இப்பாடலின் பொருள் என்ன என்பதைக் காண்போம்.

''எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே
காக்கை மூக்கு நிழலிலே கள்வர்புகும் வழியிலே
கண்டாலும் கம்மாளர் (கண்ணாளர்) கண்ணிலே
எழுபது கோடிப் பசும்பொன்''

எழுவான்—சூரியன் உலகைக் காக்க எழுவான்.

தொழுவான் — மக்களால் தொழப்படுவோன், மூலமூர்த்தி.

காக்கை மூக்கு நிழல்—கோயிலின் இராச கோபுரத்திற்கு வடபுறமுள்ள சனீசுவரன் வாகனமாகிய காக்கையின் மூக்கின் நிழல்

கள்வர் புகும் வழி—காவலற்ற இடமான கோயிலின் பின்பகுதியில், கோயிலின் பின் புறச் சுவரில் கள்வன் தானே உண்டாக்கிக் கொள்ளும் புதிய வழி.

கம்மாளன்—பொன்னின் தரம் அறியும் பொற்கொல்லன்.

எழுபது கோடி பசும் பொன்—இக்கால வழக்கின்படி அளவு அறிவதற்கு இல்லை.

ஆக இந்தப் பாடலின் பொருளைப் பார்க்கும்போது, இது ஒரு கோயிலில் இருப்பதாக ஊகிக்க முடிகிறது. ஆக அந்தக் கோயிலில் 'புதையல்' இருப்பதும் தெரிகிறது. அந்தப் புதையல் எங்கே இருக்கிறது என்பதை, இப் பாடல் விளக்கியுள்ளது.

அக்கால வழக்கப்படி கோயிலை ஒரு மனித உடலாகக் கொண்டு, கருவறையைத் தலைப்புறமாகவும், நந்திக்கும் மூர்த்திக்கும் இடைப்பட்ட பகுதியை இருதயமாகவும், இடம் வலப்புறங்களை, இடது வலது கைகளாகவும், இராச கோபுரப் பகுதியைக் கால்களாகவும் கொள்வது சிற்ப நூலார் மரபாகும். கருவறை இருதய பாகம் ஆகிய இடங்களில் புதையல்களைப் புதைத்து வைப்பது, அக்கால வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இந்த வழக்கத்தினை மையமாகக் கொண்டு பாடலில் கூறப்பட்டிருக்கும் கருத்தினைப் பார்க்கும்போது காக்கை மூக்கின்—இளங் கருநிற இருள் சூழ்ந்து கருவறைப் பகுதியான மூல மூர்த்தி (எழுவான்) அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் புதையல் இருக்கலாம். அல்லது மூலமூர்த்தியை வழிபடுவோனை தொழுவான் என்னும் நந்தீசுவரருக்கும், எழுவான் என்னும் மூலமூர்த்திக்கும் இடைப்பட்ட பகுதியான இருதய பாகத்தில் புதையல் இருக்கலாம்.

கள்வர் புகும் வழி எனக் கூறப்படுவது, கள்வன் தானே உண்டாக்கிக் கொள்ளும் புது வழி. பொது மக்கள் நடமாட்டமில்லாத கோயிலின் பின் பகுதியில் புதியதாக உண்டாக்கப்படும் வழி. அவ்வழியின் முன்புறமுள்ள கருவறைப் பகுதியான மூலவர் உள்ள இடத்தையே, புதையல் உள்ள இடமாக மீண்டும் குறிப்பிடுகிறது.

இவ்வாறு மறைவாகக் கூறிப் புதைக்கப்பட்ட புதையலைக் கண்டு அறியும் திறன், பொன்னின் தரம் அறியும் கம்மாளனுக்கே இயலும். ஏனென்றால் புதைக்கப்பட்ட பொன் உருமாற்றி யாரும் எளிதில் அறிந்திட இயலாத படி புதைக்கப்பட்டிருக்கலாம் என்பதை இப் பாடல் வலியுறுத்திக் கூறுகிறது.

இப் புதையல் இருக்கும் இடம், மருங்கப் பள்ளம் ஆகும். மருங்கப் பள்ளம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்தில் பேராவூரணியிலிருந்து நாடியம் வழியாகப் பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலை ஓரத்தில் இருக்கின்றது. மருங்கப்பள்ளம் ஓர் சிற்றூராகும். இங்கு அருள்மிகு ஔஷதபுரீசுரர் திருக்கோயில் இருக்கிறது. இத் திருக்கோயில் நீங்கள் காணும் படங்களில் உள்ளது போன்ற இடிபாடுகளுடன் இப்போது காட்சி அளிக்கின்றது.

புகழ் வாய்ந்த இத்திருக்கோயில், இப்போது அறநிலைய ஆட்சித்துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டு நிர்வாக அதிகாரி நியமித்துச் செயல்பட்டு வருகிறது. இடிபாடுகளை அகற்றித் திருக்கோயிலைப் புதுப்பித்திட, அறநிலையத்துறை சுமார் 1.25 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டி, அதனைச் செயலாக்க முனைந்துள்ளது. திருப்பணித் துவக்கத்தை உணவு அமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டித் துவக்கி வைத்துள்ளார்கள். திருப்பணி வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

பெரும் புதையல் இருப்பதாகப் பாடல் மூலம் சொல்லப்படும் இத்திருக்கோயிலைச் சோழர் காலத்தில் கட்டியிருக்கலாம் என்றும், ஆங்கிலேயர்களிடம் நெப்போலியன், வாட்டர்லூ போரில் தோற்றதின் நினைவாக, அப்போது தஞ்சைத் தரணியை ஆண்டு கொண்டிருந்த மன்னன் சரபோஜி, மருங்கப்பள்ளத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள, கடற்கரை ஓரத்தில் கி.பி. 1817-ல் 'மனோரா' என்னும் புகழ்பெற்ற உப்பரிகை ஒன்றினைக் கட்டிய போது, இத் திருக்கோயிலையும் சரபோஜி மன்னர் கட்டியிருக்கக் கூடும் எனவும் கூறப்படுகிறது. இவ்வாலயம் யாரால் எக்காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கான, திட்டவட்டமான சான்றுகள் எதுவும் காணக் கிடைக்கவில்லை.

முடிமன்னர்களால் கட்டுவித்துப் பாதுகாக்கப்பட்டு வந்த இத் திருக்கோயிலுக்கு மருங்கப்பள்ளம் கிராமம் முழுவதும், பூசை திருவிழா திருக்கோயில் பராமரிப்பு போன்ற செலவினங்களுக்கான மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. திருக்கோயிலுக்குச் சொந்தமாயிருந்த கிராமம் முழுவதும் 1948-ஆம் வருடம் இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டு 1957-ஆம் வருடம் நிலவரித் திட்ட விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



விசாரணையில் திருக்கோயில் நிலங்களைக் குத்தகை செலுத்தி உழுது வந்த குடியானவர்களுக்கே, சொந்தமாகப் பட்டா செய்து கொடுக்கப்பட்டது. திருக்கோயில் பெயருக்கு 12 ஏக்கர் 91 செண்ட் மட்டும் பட்டாவாக வழங்கப்பட்டது.

தனியார் சிலரின் பராமரிப்பில் இருந்த போது சரிவரப் பராமரிக்கப்படாமல் இருந்து வந்தது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. வைரவன் சேர்வை அவர்கள் அதிகாரம் பெற்ற மூலவராக இருந்தபோதிலும் நிர்வாகம் சரிவர நடைபெறாமல் போகவே, அறநிலைய ஆட்சித் துறையினர் நிர்வாக அதிகாரியை 18—1—71 முதல் நியமித்தனர்.

இத்திருக்கோயிலின் மூலமூர்த்தி அருள்மிகு ஔஷதபுரீசுவரர் ஆகும். அம்மன் அருள்மிகு பெரியநாயகியாகும். திருக்கோயிலைக் கட்டுவித்த அந்நாளிலேயே கோயிலின் எதிரில் திருக்குளம் ஒன்றினையும் நிறுவியுள்ளனர்.

தஞ்சைத் தரணியை அரசாண்ட மன்னர்களின் பராமரிப்பில் இருந்தபோது, அருள்மிகு ஔஷதபுரீசுவரருக்கும் அருள்மிகு பெரியநாயகி அம்மனுக்கும் பொன்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்திருக்கின்றனர். தமிழக வரலாற்றில் தமிழகம் பல இன மத ஆட்சியாளர்களால் அலைக்கழிக்கப்பட்டு, ஏராளமான கோயில் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் மருங்கப்பள்ளம் திருக்கோயிலின் விலை மதிப்பற்ற செல்வங்கள் கொள்ளை போகாதவாறு இருக்க, ஏராளமான பொன் நகைகள் அனைத்தையும் உருக்கி உருமாற்றிப் புதைக்கப்பட்டிருக்கலாம்.

அப்படி புதைக்கப்பட்ட புதையலைப் பிற்காலச் சந்ததியினர் கண்டு கொள்வதற்காகத் தான் கல்வெட்டில் 'எழுவானுக்கும் தொழுவானுக்கும்' என்ற பாடலைச் செதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம். மருங்கப்பள்ளம் அருள்மிகு ஔஷதபுரீசுவரர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் சித்த வைத்தியத்திற்குப் பெரிதும் பயன்படும் 'பொன்கிட்டான்' என்ற ஒருவகைக் கற்கள் இன்றும் காணப்படுகின்றன. இதன் மூலம் பல வகையான நோய்கள் குணமாகின்றன.

அப்பகுதியில் இன்றளவும் கிடைத்துவரும் 'பொன்கிட்டான் கற்கள்' விலை மதிப்பற்ற பொன்னை உருக்கியபோது ஏற்பட்ட கழிவுகளாக இருக்கக்கூடும்என்று அனுமானிக்க இடம் இருக்கின்றது.

பழமொழி போல இருக்கும் இப்பாடல், கல்வெட்டாக இத்திருக்கோயிலில் இருந்து வந்ததை இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், மருங்கப்பள்ளம் சென்று பல நாட்கள் தங்கியிருந்து இக்கல்வெட்டினையும் சரபோஜி மன்னரால் உருவாக்கப்பட்ட 'மனோரா' உப்பரிகையையும் இணைத்து, அவருக்கே உரித்தான கற்பனையும் கலந்து நாட்டுக்குப் 'புதையலைக்' காட்டினார்கள்.

இன்றளவும் எவராலும் கண்டுபிடிக்கப் பெறாமல் இருக்கும் அன்றைய மதிப்புப்படி 'எழுபது கோடிப் பசும்பொன்' கண்டுபிடிக்கப் படுமா? என்னும் வினாவிற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# செய்திச் சுருக்கங்கள்

## திருவில்லிபுத்தூர்த் தேரோட்டம்

இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலின் தேர் கடந்த 18 ஆண்டுகளாக ஓடாது இருந்தது. 10 ஆண்டுகளாக மழை இன்றி இருந்த திருவில்லிபுத்தூர் வறண்ட பகுதியாக மாறியிருந்தது. தேரோட்டம் தடைபட்டது, இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று பலர் கருதியமையால் 23—7—74-ஆம் நாளன்று தேர் இழுக்கப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின் தேரோட்டம் நடைபெற்றமையால், ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தேரோட்டத்தை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வெங்கடசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்களும், துணை ஆணையர் திரு. ம.அ. முருகேசன், பி.ஏ., பி.எல். அவர்களும், உதவி ஆணையர் திரு. மலையாண்டி, பி.ஏ., பி.எல். அவர்களும் தேரை வடம் பிடித்தனர். 102 அடி உயரமும், 70 டன் எடையுமுள்ள தேர் ஆடி அசைந்து வந்தது. மலை ஒன்று நகர்ந்து வந்ததுபோல் காட்சி அளித்தது. தேர் இழுத்த சிறிது நேரத்தில், ஒரு மணி நேரம் பெரும் மழை பெய்தது குறிப்பிடத் தக்கதாகும்.

## குருபூசை விழா

மகாபலிபுரம் நெம்மேலி திரு. ஆளவந்தார் அறக்கட்டளைகளின் சார்பில், கடந்த 6—8—74-ஆம் நாளன்று, தவத்திரு ஆளவந்தார் நாயகர் அவர்களின் 60-ஆவது ஆண்டு நினைவினை ஒட்டிக் குருபூசை விழா நடைபெற்றது. விழாவின்போது நினைவு மலர் வெளியிடப்பட்டது. இவ்விழாவிற்குச் சமூக நல அமைச்சர் மாண்புமிகு திரு. சி.வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமை ஏற்க, நினைவு மலரினை அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் வெளியிட்டார்கள். விழாவில் துணை ஆணையர் திரு. கே. இராஜா, பி.ஏ., பி.எல். அவர்களும் கலந்து கொண்டார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழுத் தலைவர் திரு. சி. சிட்டிபாபு, எம்.பி. அவர்களும், அறங்காவலர்களும், நிர்வாக அறங்காவலர் அவர்களும், நிர்வாக அதிகாரியும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## அறநிலைய அலுவலர்கள் கூட்டம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையர், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், வணிகவரி—அறக்கட்டளைத் துறைச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு, இத்துறையின் பணிகள் குறித்துக் கலந்துரையாடினர். 3—8—74-ஆம் நாளன்று நடைபெற்ற இக்கூட்டத்தில், அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் கலந்து கொண்டு, திருக்கோயில்களில், விக்கிரகங்கள் களவு போகாமல் இருக்க விரைந்து முன் நடவடிக்கை எடுக்கும்படியும், மேலும் பல நல்ல திட்டங்கள் தீட்டி, தீட்டிய திட்டங்களை விரைந்து செயலாக்கிடும்படியும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்கள். கூட்டம் இனிதே நடந்து முடிந்தது.

# மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாக் காட்சிகள்




மதுரைக் கோயில் தோற்றம்



திருக்கோயில் கோபுரத்தில் குடமுழுக்கு செய்யும் காட்சி. பக்தர்கள் கூட்டம்.

தமிழ் நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு சபாநாயகம் ஐ.ஏ.எஸ். அவர்களும் ஆணையர் திரு கே.எஸ். நரசிம்மன் B.A.B.L. அவர்களும்





ஆணையர் திரு கே.எஸ். நரசிம்மன்
துணைஆணையர் திரு ம.அ. முருகேசன்
நிர்வாக அதிகாரி திரு. இராமச்சந்திரன்.
அறங்காவலர் திரு கோபால்சாமி



தமிழக அரசு தலைமைச் செயலாளர்
திரு சபாநாயகம் அவரது துணைவியார்,
அறங்காவலர் குழுத்தலைவர்
திரு.லெ. நாராயணன் செட்டியார்
நிர்வாக அதிகாரி திரு இராமச்சந்திரன்

விழாவினை ஒட்டி புதியதாக
அமைக்கப்பட்ட ஜெனரேட்டரை
ஆணையர் இயக்கி வைக்கின்றர்



குடமுழுக்கு விழாவின் போது
திருமுருக கிருபானந்தவாரியார்
அவர்கள் சொற்பொழிவாற்றும் காட்சி.



உயர் நீதிமன்ற நிதிபதி
திரு. பு. ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள்
விழாவிற்கு வருகை புரியும் காட்சி உடன்
மதுரை முதன்மை குற்ற இயல் நீதிபதி
திரு கந்தசாமி. துணை
ஆணையர் ம. அ. முருகேசன் ஆகியோர்.



அறங்காவலர் குழுத்தலைவர்
திரு. லெ. நாராயணன் செட்டியார்
அறங்காவலர்கள் திரு பொன்னப்பன்
திரு தியாகையா, திரு ராமகிருஷ்ணன். M.L.A.
திரு கோபால்சாமி.
நிர்வாக அதிகாரி இராமச்சந்திரன்
ஆகியோர்.



# செந்திற் கந்தன்

ந. ரா. முருகவேள் M.A., M.O.L.

**முன்னுரை**

செந்தில் என்பது முருகப் பெருமான் எழுந்தருளி விளங்கும் புகழ்மிக்க தலங்களுள் ஒன்று. முருகனை நம் முன்னோர்கள் பல வகைகளில் அறிந்து அனுபவித்துப் போற்றியுள்ளனர். முருகன் வீரர்களுள் எல்லாம் சிறந்த பெருவீரன் ஆதலின், அவனைச் 'சேனனி' என்று பெரியோர்கள் போற்றுவர். கீதையில் கண்ணபிரான் ''வீரர்களுக்குள் யான் கந்தனுகத் திகழ்கின்றேன்'' என்று அருளிச் செய்ததாகக் கூறுவர். ''பொரும் அறையார் கழல் வீரர் வீரன்'' என அருள் நந்தி சிவாச்சாரியார், முருகனைக் குறிப்பிடுகின்றார். அடியார்களின் இடர்களாகிய பகைகளைக் கடிந்து நீக்குதலினால், வீரனுகிய முருகன் கோயில் கொண்டிருக்கும் தலங்கள், படைவீடுகள் எனப் பெயர் பெறலாயின.

**படை வீடுகள்**

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு தலங்களும் படைவீடுகள் என்று சிறப்பாக வழங்கப்படும். சங்கத் தமிழின் தலைமைப் புலவராகிய நக்கீரர், திருமுருகாற்றுப்படை பாடிய காலம் முதல், அத் திருமுருகாற்றுப் படையின் அமைப்பைத் தழுவிப் படைவீடுகள் என ஒரு வழக்காறு ஏற்பட்டு வழங்கி வருகின்றது. கந்த புராணம் பாடிய கச்சியப்பர், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் முதலிய அனைவரும் திருமுருகாற்றுப் படையினை ஒட்டியே, ஆறுபடை வீடுகளின் வரிசை முறையினைக் குறிப்பிட்டுள்ளனர்.

**செந்தில்**

திருச்சீரலைவாய் என்னும் படைவீட்டிற்கே செந்தில், செந்தூர் என்பது பெயர். செம்மையான இல், செம்மை வாய்ந்த ஊர் என்பது இவற்றின் பொருள். இவை, 'சேதா' (செம்மை+ஆ—செந்நிறம் உடைய பசு) என்னும் சொல்லிற் போல, இடையில் தகர எழுத்துப் பேறு பெற்றுச் செந்தில், (செம்மை+இல்) செந்தூர் (செம்மை+ஊர்) என அமைந்தன. சூரபதுமனை வென்று ஜெயம் கொண்ட இடமாதல் பற்றி இத் தலத்திற்கு ''ஜெயந்தி'' எனப் பெயர் அமைந்தது என்றும், அதுவே தமிழில் ''செந்தி'' (செந்தில்) என மருவி வழங்குகின்றது என்றும் ஒரு சிலர் கூறுவதுண்டு.

**புறநானூறு**

மருதன் இளநாகனுர் என்னும் சங்க காலப் புலவர் ஒருவர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் அரசனை ''நீ நெடுவேளாகிய முருகன், நிலைபெற்று விளங்குகின்ற அழகிய அலைவாய் என்னும் திருச்செந்தூர்க் கடற்கரையிலுள்ள எக்கர் மணல்போல, எண்ணற்ற நெடுங்காலம் நீடினிது வாழ்வாயாக'' என வாழ்த்திப் பாடிய புறநானூற்றுப் பாடலில், திருச்செந்தூர் பற்றிய சிறந்த ஒரு குறிப்பு அமைந்து காணப்படுகிறது.

''நீ நீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர்
வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே''

—புறநானூறு, 55.

இப்பாடலில் செந்திலை 'வெண்தலைப்புணரி அலைக்கும் செந்தில்' என்றும், அங்கு முருகன் எழுந்தருளி நிலைபெற்று இருத்தலை 'நெடுவேள் நிலைஇய' என்றும், திருச்செந்தூரின் கடற்கரையானது காண்பார் கண்ணும் உள்ளமும் கவரும் சிறப்பு மிக்க அழகு வாய்ந்து விரிந்து பரந்து விளங்குதலைக் 'காமர் வியன்துறை' என்றும், மருதன் இளநாகனுர் குறிப்பிட்டிருக்கும் திறம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

**அகநானூறு**

இவ்வாறே 'பரணர்' என்னும் சங்க காலப் புலவர், அகநானூறு என்னும் அருந்தமிழ்ச் சங்கநூற் பாடல் ஒன்றில், திருச்சீரலைவாயின் சிறப்பை வியந்தெடுத்துப் புகழ்ந்துள்ளார்.

''கழனி யுழவர் கலிசிறந் தெடுத்த
கறங்கிசை வெரீஇப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம்பொலிய வந்திறுக்குந்
திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே.''

—அகநானூறு, 266

திருச்செந்தூரைச் சுற்றி வயல்கள் உள்ளன. அங்கு உழவர்கள் ஆரவாரத்துடனும் மகிழ்ச்சியுடனும் நிலத்தை உழுகின்றனர். நிலத்தை உழுங்கால் அவர்கள் நிகழ்த்தும் மகிழ்ச்சி மிக்க ஆடல் பாடல் ஒலிகளைக் கேட்டு, அடுத்துள்ள குறிஞ்சி நிலத்தில் வாழும் மயில்கள் அஞ்சி, அருகே உள்ள தெய்வத் தன்மையுடைய மலைப்பகுதிகள் பொலிவு பெறும்படி பறந்து வந்து தங்குகின்றன. கடல் அலைகள் கொண்டுவந்து கரையிற் சேர்க்கின்ற அழகிய மணிகள் விளக்குகள் போல ஒளி விடுகின்றன. அத்தகைய அலை வாயாகிய செந்திலில், சூரபதுமனோடு நிகழ்த்திய போர்த் திறத்தில் வல்ல சேயாகிய முருகன் எழுந்தருளித் திகழ்கின்றான் என்பது, இப்பாடற் பகுதியின் திரண்ட பொருளாகும்.

செந்திலைத் ''திருமணி விளக்கின் அலைவாய்'' என்றும், செந்திலின்கண் உள்ள முருகனைச் 'செருமிகு சேய்'' என்றும், செந்திலில் முருகனுக்குரிய மயில்கள்ஆங்காங்குப் பொலிவு மிகத் தங்கியிருத்தலைத் ''தோகை அணங்குடை வரைப்பகம் பொலிய வந்து இறுக்கும்'' என்றும், பரணர் அழகுறக் குறிப்பிட்டுப் பாடியிருப்பது சிந்தித்து மகிழ்தற்குரியதாகும்.

> ''யானும் ஆடிக் காண்கோ ? தோழி!
> வரைவயிறு கிழித்த சுடர்இலை நெடுவேல்
> திகழ்பூண் முருகன் தீம்புனல் அலைவாய்க்
> கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் கலித்த
> ஒண்பொறி மஞ்ஞை போல்வதோர்
> கண்கவர் காரிகை பெறுதல் உண்டு எனினனே''

எனவரும் பகுதியில், திருச்செந்தூர் பற்றிய குறிப்பு அமைத்திருந்தல் அறிந்து இன்புறற்பாலது.

**சிலப்பதிகாரம்**

இவ்வாறே முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகளும், தாம் இயற்றிய நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தில், செந்திலின் சிறப்பைத் திறன் தெரிந்து வியந்து பாடியருள்கின்றார்.

> ''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
> ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
> பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
> சூர்மாத் தடிந்த சுடரிலைய வெள்வேலே.''

என்னும் அழகிய இனிய பாடல், ஆசிரியர் இளங்கோவடிகளால், சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில், குன்றக் குரவை என்னும் பகுதியில், அருளிச் செய்யப் பெற்றுள்ளது. முருகன் செந்தில் செங்கோடு வெண்குன்று ஏரகம் என்னும் தலங்களில் நீங்காமல் எழுந்தருளியுள்ளான் என்றும், அவனுடைய திருக் கையில் இருப்பது வெல்லும் திறனில் ஒப்புயர்வற்ற தனிச் சிறப்பு வாய்ந்த வேல் என்றும், முருகன் அவ்வேல் கொண்டே கடலில் புகுந்து மறைந்து மாமரமாய்த் தோன்றி எதிர்த்து நின்ற சூரபதுமனைத் தடிந்தான் என்றும், இளங்கோவடிகள் இனிதெடுத்து இயம்புகின்றார். இச்சிறந்த பாடலில் செந்திலை, அவர் 'சீர்கெழு செந்தில்' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்திருப்பது, இங்கு நாம் பெரிதும் சிந்தித்து இன்புறுதற்குரியது.

**நக்கீரர்**

ஆசிரியர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில், செந்தில் ஆகிய அலைவாயினை 'ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' எனப் புகழ்கின்றார். சீர் என்பது இன்னதென்றுணர்த்தற்கு, 'உலகம் புகழ்ந்த சீர்' எனக் குறிப்பிட்டார். அச்சீரை ஓங்குசீர்—உயர்சீர்—விழுச்சீர் என விதந்தோதுகின்றார்! முக்காலத்தும் ஒத்த சீர் உடையது; மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களையும் உடையது; உத்தமர் மத்திமர் அதமர் என்னும் முத்திறத்து மக்களுமே தொழுது உய்வதற்குரியது; என்னும் பற்பல உண்மைகளை உணர்த்துதற் பொருட்டு, இங்ஙனம் நக்கீரர் அருளிச் செய்தனர் போலும்!

**கந்தன்**

இனி, 'கந்தன்' எனும் சொல்லை ஆராய்வோம்! 'செந்தில் முருகன்' என்றாலும் பொருந்துமாயினும், 'செந்திற் கந்தன்' என அமைத்தமை சிறப்புடையது! அதனால் 'பிராசம்' என்னும் 'வழியெதுகை' அமைந்திருத்தல் காணலாம். மேலும், செந்தில் முருகனைக் 'கந்தன்' என்றே சிறப்பாகக் குறிப்பிட்டு வழங்குதல், பெரியோர்களின் திருவுள்ளம் போலும்!
கிரி நாதர் தமது திருப்புகழில்,

முருகன் என்னும் சொல்லைப்போலவே, அப்பெருமானைக் குறிக்கும் வேறு பல சொற்களும், மிகவும் ஆழ்ந்த பொருட் சிறப்பும் செறிவும் உடையவை. கந்தன் என்பது அவற்றுள் மிகவும் பயின்று வழங்கி வரும் ஓர் அரும் பெரும் சொல். கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் கலிவெண்பா, கந்தபுராணம், கந்தர் சஷ்டி எனப் பெரிதும் வழங்கி வரும் வழக்காறே, இச்சொல்லின் சிறப்பை நமக்கு நன்கு இனிது உணர்த்தும்.

> ''சேயவன் வடிவம் ஆறும்
> திரட்டிநீ ஒன்றாய்ச் செய்தாய்
> ஆயத னாலே கந்தன்
> ஆமெனும் நாமம் பெற்றான்''

என்னும் செய்யுளாற் கச்சியப்ப சிவாசாரியார் கந்தன், என்னும் சொற்பொருளைக் கவினுற விளக்கியருளினர். கந்தன் என்பதற்குப் 'பகைவர்களை வற்றச் செய்பவன்' எனவும் வடமொழியிற் பொருள் கூறுவர். 'தோள் வலிமை மிக்கவன்' எனவும் இதற்குப் பொருள் கூறுதல் பொருந்தும்.

### பற்றுக்கோடு

தமிழிற் 'கந்து' என்னும் சொல் பற்றுக்கோடு எனப் பொருள் தரும். 'காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல் பேதைமை எல்லாம் தரும்' என்னும் திருக்குறளில், ஆசிரியர் திருவள்ளுவர் 'கந்து' என்னும் சொல்லைப் பற்றுக்கோடு என்னும் பொருளிற் பண்டே வழங்கியுள்ளனர். ஆதலின், கந்தன் என்பதற்கு 'யாவருக்கும் பற்றுக் கோடாகத் திகழ்பவன்' என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும். இப்பொருளின் அருமைப்பாடு பெரிதும் போற்றியுணர்தற்கு உரியது.

158596

### கந்தன் கருணை

முருகன் தன் அடியார்களுக்கு எல்லாத் தலங்களிலுமே அருள் புரிகின்றானாயினும், அவனது அருட்பேற்றிற்குத் திருச்செந்தூர் தனிப்பெரும் சிறப்புடைய தலமாக விளங்குகின்றது எனலாம். ஆறுபடை வீடுகளில் அருள் வழங்குதற்கென்றே அமைந்த நல்ல சிறப்புத் தலம் திருச்செந்தூர் எனக் கூறின், அது மிகையாகாது. ஏனெனில், திருச்செந்தூரின்கண் முருகன் அருளே வடிவமாகவும், கருணை வெள்ளமாகவும் வீற்றிருக்கின்றான்.

''.....செந்துரிற் போய்க்கருணை
வெள்ளம்எனத் தவிசின் வீற்றிருந்து''

எனக் குமரகுருபர சுவாமிகள், கந்தர் கலி வெண்பாவிற் பாடியிருத்தல் காண்க.

கொடியவனும் பகைவனுமாகிய சூரபதுமனுக்கும் திருவருள் புரிந்து, முருகன் அவனை அழிக்காமல் ஆட்கொண்டருளிய தலம் திருச்செந்தூரே எனின், திருவருட்பேற்றிற்கும் திருச்செந்தூருக்கும் எத்துணை நெருங்கிய தொடர்பும் இயைபும் உள்ளன என்று, யாவரும் கருதி உணரலாம்.

''தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!''

—கந்தபுராணம்.

பகைவனை அழித்தலில் வீரமோ பெருமையோ இல்லை. பகைவனையும் மன்னித்து இன்னருள் புரிந்து திருத்தி ஆட்கொண்டருளும் அரிய செயல் திறன்தான், பெருவீரமும் பெருஞ் சிறப்புமாகும். ''தீமையை வெறு; தீயவனை வெறுக்காதே'' (Hate the sin, but not the sinner) என்பது, ஓர் உயர்வற உயர்ந்த கொள்கை. பகைவனை வீரத்தால் கொல்லுதலிற் காட்டிலும், குணத்தால் கவர்ந்து அன்புடையவனாக்கிக் கொள்ளுதல் பண்புமிக்க அருட் பெருஞ் செயலாகும்.

''பகை நட்பாக் கொண்டொழுகும்
பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு''

என்பது திருக்குறள். அம்முறையில், பகைவனையும் நண்பனாக்கிக் கொள்ளும்பெருஞ் செயலையே, வெற்றிகளுள் மிக்க பெரு வெற்றி எனும் கருத்தில், 'அரசவாகை' எனத் தமிழ் நூல்கள் குறிப்பிடும். எனவே தேவர்க்கும் மூவர்க்கும் மட்டுமேயன்றிக் கொடியவனும் பகைவனும் ஆகிய சூரபதுமனுக்கும் அருள்புரிந்த சிறப்புடைமையால், செந்திலம் பதியே முருகனின் திருவருட் பேற்றிற்கு முழுதுரிமை உடைய பெருந்தலமாயிற்று எனக் கொள்ளுதல் பொருந்தும்.

### சான்றோர் அருட்பேறு

இனி, அருணகிரிநாதர், சுவாமிநாத தேசிகர், குமரகுருபரர், பகழிக் கூத்தர், சிவப்பிரகாசர், திருச்சிற்றம்பல நாடிகள், வென்றிமாலைக் கவிராயர், தண்டபாணி சுவாமிகள், ஆதிசங்கரர் முதலிய பற்பல செந்தமிழ்ச் சான்றோர்கள் போற்றித் துதித்து, முருகனின் திருவருள் பெற்ற தலம் திருச்செந்தூர் என்பதும் நாம் நினைவு கூரத் தக்கது.

''செஞ்சொற் புலவர்க்கு அன்புற்ற
செந்திற் கந்தப் பெருமாளே''

என அருணகிரி நாதர், தம் திருப்புகழில் அருளிச் செய்தருளியிருப்பதும், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்துவதாகும்.

### முடிவுரை

இத்தகைய அருட்பெருந் தலமாகத் திகழும் திருச்செந்திலில் எழுந்தருளியுள்ள கந்தப் பெருமானை, நாம் அனைவரும் அன்புடன் வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் எல்லாம் எய்தி, இன்புற்று உய்வோமாக!

# THE TAMILNADU DAIRY DEVELOPMENT CORPN. HELPS THE HELPLESS

Helping 'Blossoms in the dust' is TNDDC's gesture for the year. In accordance with the Chief Minister's plea to aid the physically handicapped in Tamilnadu, the Tamilnadu Dairy Development Corporation pledges to do the following :

- Employ five handicapped persons in the Corpn. for the year 1974-75.
- Donate free milk - 100 litres per day to handicapped children, during the course of this year.

TNDDC appeals to social service and charitable organisations to help continue this scheme in the coming years.

**Let us unite - to help the helpless!**


**The TAMILNADU DAIRY DEVELOPMENT CORPN. LTD.,**
(An Undertaking of the Govt. of Tamilnadu)

5, Ritherdon Road, Vepery,
Madras-600007.
Phone : 35185, 38537 & 31447.

*Milk is health.*

Tnddc





# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.




| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684 | 3814 | 35051 |
| | 81954 | | |


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், [illegible] சென்னை-600002